கல்கி

KALKI 5-10-80 90 காசு




வாழ்வின் இணையிலா இனிமைகள்
அவை என்றென்றும் புதுமைகள்





நீங்கள் எப்போதும்
விரும்பும் சுகந்த மணம்



தி மேன் ஃப்ரம் ஹாங்காங்

டங்க டிக்க டங்க டிக்க டிக்க டங்க டிக்க
டடிங்க டக்க டிங்க டக்க டங்க டிக்க டக்க
ஹெலிகாப்டர் ஹெலிகாப்டர் ஹெலிகாப்டர்
கார் கார் கார்.
ஜூம் லெங்சண்ட். இன்ஸ்பெக்டர் ஃப்ரம்
ஹாங்காங் ஸ்பெஷல் பிராஞ்ச்—
டிஷ்யூம் டிஷ்யூம் டிம் டம் டிம் டம் ஆஆ
டம் டிம் டிஷ்யூம் டிம் டம் டம் டம் ஆஆ
கார் கார் கார் கார் கார் கார் கார் கார் 'டுபம
சர்
கார் கார் கார் கார் கார் கார் கார் கார் 'டுபம
விர்
கார் கார் அப்பளம் கார் ப்பகாஅளர்ம்...
இன்டர்மிஷன் இன்டர்மிஷன் இன்டர்மிஷன்
பாட்டு பாட்டு பாட்டு பாட்டு பாட்டு பாட்டு
இச் இச்ச் இச்ச்ச்ச்ச்ச்ச்ச்
குங்ஃபூ ஃவா ஓ ஃயா யூல் வால்வ்
ஃயா ஃஜூ ஆ யா ஹைஹைய் யா யூல்
டங்க டிக்க டங்க டிக்க டிங்க டக்க டக்க
பட் பட டடட டடட டடட டடட டட
பட் பட் பட் பட பட் டட் டடடடடட
டிஷ்யூம் ஃயா யூ டம் டிம் டிஷ்யூம்
டட் டட் டடட ஃஜூஜூல் ஃயா டம்டிம்
சர்
ஜிம்மி வாங் யூ தரும அடி அடிக்கிறார்.
கண்ட இடங்களில் உதைக்கிறார்.
வெளியே வரும்போது நமக்கு வலிக்கிறது.

—ஜனினி சாஸ்திரி




ஆத்மாஸ்

நாடெங்கும் புகழ் பெற்றவை

பாலாஜி

அரவை மெஷின்கள்




இரண்டு வருட
உத்திரவாதமுடையது

அருணா & கோ

479, T. H. ரோடு,
சென்னை-600 021
போன்: 552728

1, நரசிங்கபுரம் தெரு,
சென்னை-600 002
போன்: 844251





Our Stockists:

1. M/s D. Srinivasa Iyengar, Maligai, West Car Street, Chidambaram & Cuddalore
2. M/s K. S. Muthuswamy Iyer Son R. V. Venkatarama Iyer, Maligai, Railady, Mayuram
3. M/s R. Ganapathi Pillai, Maligai, Railady, Mayuram
4. Thanjavur Cooperative Wholesale Stores Ltd., Thanjavur
5. M/s A. V. M. Muthukrishnan & Bros, Pudupalayam, Cuddalore
6. M/s P. Ramalingam, 26, Bhandarkar Road, Matunga, Bombay-19
7. M/s P. V. R. K. & Co., 321, Avenue Road, Bangalore-2
8. M/s Geetha Stores, 115, Jeweller Street, Bangalore-1

★

எங்கள் புதிய D L C பிராண்ட் அக்மார்க் நெய் 16 kg & 4 kg கிடைக்குமிடம்


1. M/s Bharathi & Co
   27, Mundy Street, Vellore-4
2. M/s R. Rangarajan & Co
   13/1751, Karikkara Street, Kumbakonam-612 001


★

Dhanalakshmi & Co

21-B, M. G. Pudur 1st Street,

Tirupur-638604





குளத்தில் தோன்றும் சங்கு!

செப்டம்பர் 19ம் தேதி திருக்கழுகுன்றத்தில் புஷ்கர மேளா, லட்ச தீபம், சங்கு தீர்த்தத்தில் நீராட ஏராளமான பக்தர்கள் குழுமினர். சங்கு தீர்த்த புஷ்கரணியில் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை சங்கு தோன்றுவதாக ஐதிகம். ஆனால் 1952ம் வருடம் இரண்டு சங்குகள் தோன்றியதால் பிறகு 1976ம் வருடம்தான் தோன்றியது என்கிறார்கள். இனி 88ல் தோன்றுமாம்!

தமிழ் நாட்டிலேயே மலை உச்சியில் உள்ள சிவன் கோவில் இது ஒன்றுதான். எத்தனையோ வருடங்களுக்கு முன்னாலேயே திருக்கழுக்குன்றத்துக் கழுகுகள் வந்து உட்கார்ந்து அன்னம் உட்கொள்வதைச் சிற்பமாக வடித்துள்ளார்கள். அதை இன்றும் இங்குள்ள மகா மண்டபத்தில் பார்க்கலாம்.

இக்கழுகுகள் காலையில் கங்கையில் நீராடி நடுப்பகலில் திருக்கழுக்குன்றத்தில் உணவு உட்கொண்டு, மாலையில் இராமேஸ்வரத்தில் வழிபட்டு, இரவு சிதம்பரம் அடைகின்றன என்று ஒரு கர்ண பரம்பரைக் கதை! இவை இரண்டும் இரு முனிவர்கள் என்றும் ஒரு கதை வழக்கில் இருந்து வருகிறது.

—அசோக்குமார்



சிரஞ்சீவி சகாப்தம்

சிவாஜி சகாப்தம் பற்றிய ஒரு சர்ச்சையைக் கிளப்பினாலும் கிளப்பினோம், உயர் நீதிமன்ற நீதிபதி கூட ஒரு கூட்டத்தில் கல்கி மீது பாய்ந்திருக்கிறார்! சிவாஜியின் 'மூட்' சரியில்லை என்று அவரை நன்கு அறிந்த பெரிய நடிகர் ஒருவர் சொல்கிறார்!

நாம் சிவாஜியின் எதிரியல்ல; யார்தான் அவர் எதிரி?

அவருடைய நடிப்பு ஆற்றல் மிளிரக் கூடிய கதாபாத்திரங்கள் அவருக்கு வழங்கப்படவேண்டும், அதனால் அவர் நடிப்பு சிரஞ்சீவித்துவம் பெற்றதாக விளங்க வேண்டும் என்பதே அனைவரது விருப்பமும். படத்தில் காணப்படுவது போன்ற 'ரோல்'களை சிவாஜி ஏற்பதைப் பெரும்பாலோர் விரும்பவில்லை. கல்கி நேயர்களின் கடிதங்கள் இதையே உணர்த்துகின்றன.

அவர்களில் மிகப் பலர் ஒரு கோரிக்கையும் விடுத்தார்கள். இந்த விவாதத்தின் கடைசி அம்சமாக சிவாஜி அவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டுப் பெற்றுப் பிரசுரிக்க வேண்டும் என்பதே அது.

அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நமது நிருபர் பலமுறை சிவாஜியை அணுகியும் கிடைத்த வரவேற்பு மகிழத் தக்கதாய் இல்லை. சிவாஜி என்று தம் கருத்தைக் கூற எண்ணுகிறாரோ அன்று அதனைப் பெருமிதத்துடன் தாங்கி வர கல்கி தயாராக இருக்கிறது.

சிவாஜி சகாப்தம் முடிந்து விட்டதா? என்ற விவாதத்தில் நேயர்கள் காட்டிய உற்சாகம் சொல்லி முடியாது! கண்ணியமான முறையில், பொதுவாகத் திரை உலகுக்கே பயன் தரத் தக்க விதத்தில் வாதங்கள் நடந்ததாகவே எண்ணுகிறோம். பங்கேற்ற அனைவருக்கும் நன்றி.

—ஆசிரியர்.

ஏற்றங்கள்; எதிர்பார்ப்புக்கள்; ஏமாற்றங்கள்!

அடுத்து நான் நடித்த படம் மல்லியம் ராஜகோபால் எடுத்தது. குலமங்கலம் சகோதரிகள் வழியாக மல்லியம் ராஜகோபால் எனக்கு அறிமுகம் ஆனார். என்னை அவரது 'கஸ்தூரி திலகம்' படத்துக்கு ஒப்பந்தம் செய்தனர். முதன் முதலாக அழுது நடித்த படம் அதுதான். ''என்னம்மா கதறிப் பேசறே ஆனால் கண்ணில் ஒரு சொட்டுத் தண்ணீர் காணோம்!'' என்று இன்னுமொரு டேக் என்றார், மல்லியம் ராஜகோபால். அவர் தான் நினைத்தது நடக்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் குறியாக இருப்பார். என்ன இப்படிப் பாடாய்ப் படுத்துகிறாரே என்று எண்ணினேன். ஒரு வழியாகப் பத்தாவது டேக்கில் ஓ.கே. ஆயிற்று. நான் வீட்டில் நுழையும்போதே ''இன்னிக்கு ரொம்ப நல்லா நடிச்சியாமே!'' என்று எல்லோரும் என்னைப் பாராட்ட ஆரம்பித்தனர். பிறகு தான் விஷயம் புரிந்தது. நான் வீட்டுக்குப் போவதற்கு முன்பு மல்லியம் ராஜகோபால் என் வீட்டுக்குப் போன் செய்து ''இன்று வித்யா மிகவும் சிறப்பாகச் செய்தாள்; எல்லோருக்கும் மிகவும் திருப்தி'' என்று கூறியிருக்கிறார். அப்போது அவர் பெருந்தன்மையை நினைத்து மகிழ்ந்தேன். அந்த செட்டில்தான் முதன் முறையாக லட்சுமி நடிக்கப் பார்த்தேன். அப்பொழுதே அவர் நடிப்பு மென்மையாக அதே சமயம் அழுத்தமாக இருக்கும். அந்தச் சமயம்தான் பாஸ்கரைக் காதலித்தார். அதனால் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு மூடில் இருப்பார். எப்பொழுது கோபித்துக் கொள்வார், எப்பொழுது சிரிப்பார் என்று தெரியாது.

தெலுங்கில் இரண்டு படம், தமிழில் இரண்டு படம், மலையாளத்தில் இரண்டு. உறுதியாக எதிலுமே நிற்க முடியாத நிலை. கதாபாத்திரங்கள் சரியாக அமையாது. பணமும் சரியாகக் கிடைக்காது. அப்படி இருக்கும்பொழுது ஒரு நாள் கே. எஸ். ஜி.யின் படத்தில் நடிக்க அழைக்கப்பட்டேன். முதன் முதலில் நான் அவரை பத்மினி வீட்டில்தான் சந்தித்தேன். 'சித்தி' படத்தில் பத்மினி நடித்துக் கொண்டிருக்கும்பொழுது கே.எஸ். ஜி. பத்மினி வீட்டுக்கு வந்திருந்தார். பத்மினி என்னை அறிமுகப்படுத்திய உடனேயே தன் படத்தில் ஊமையாக நடிக்கவேண்டும் என்று கேட்டார். அவ்வளவுதான். வீட்டில் ஊமை மாதிரி நடித்துப் பழக ஆரம்பித்து விட்டேன். இரவு பகல் பாராமல் எல்லாரிடமும் ஊ ஊ என்று பேசுவேன். யார் என்ன கேட்டாலும் சைகை பதில்தான். நான் அவஸ்தைப்பட்டதுமல்லாமல் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரையும் அவஸ்தைக்குள்ளாக்கினேன். இவ்வளவு செய்த பிறகு நான் அந்தப் படத்தில் நடிக்கவில்லை. விஜயஸ்ரீயை நடிக்க வைத்துவிட்டார். எனக்கு ஒரே ஏமாற்றம். பப்பி அம்மாவிடம் சென்று அழுதேன். அவருக்கு ஊமையாக நடித்துக் காண்பித்தேன். பப்பிக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது.

''அடுத்த படம் 'உயிரா மானமா' அதில் நீதான் நடிக்க வேண்டும். மிகச் சிறந்த பாத்திரம்'' என்று சொல்லிக் கொண்டு வந்தார் கே. எஸ். ஜி. ஆனால் அந்தப் பாத்திரமும் அவரால் வேறு ஒருவருக்குத் தரப்பட்டது. இச்செயல்கள் என் மனத்தை மிகவும் புண்படுத்தின. ''நம்மிடம் என்ன குறை என்று நம்மை வேண்டாம் என்று நிராகரித்தார்கள்?'' என்று எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன். ரயில்வே ஸ்டேஷன் சென்று பெட்டியை வைக்கும்போது ''அங்கே மழை. அதனால் ஷூட்டிங் கேன்ஸல்'' என்று கூற நான் வெளியே வர இன்னொரு பக்கமாக விஜயநிர்மலா வந்து என் டிக்கட்டில் ஏறிப் போய்விட்டார்! எனக்கு எரிச்சல் என்றால் எரிச்சல். ''ஆண்டவனே இதற்காகவாவது என்னைப் பெரும் புகழ் பெறச் செய்யக்கூடாதா'' என்று வேண்டிக் கொண்டேன்.

பேட்டி : சலஜை





✖ கே. எஸ். ஜி.

✖ மல்லியம்



மடமேஜை



● ''விலைவாசி குறைய வழி'' தலையங்கத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மத்திய அமைச்சகத்தின் பார்வைக்கு அனுப்புங்கள்.

வேலூர் வேணுகோபால்

● விலைவாசிகுறைய நீங்கள் சொன்ன வழிகளெல்லாம் ரொம்பச் சரிதான். ஆனால் விலைவாசி குறைய யோசனை கூறினாலும்— ''இந்த சர்வாதிகார ஆட்சியில் கேட்பார் இல்லை'' என்று தலையங்கத்தில் கூறியிருக்கிறீர்களே. அங்கேதான் இடிக்கிறது. இப்பொழுது நடப்பது சர்வாதிகார ஆட்சி என்றால் நீங்கள் இவ்வளவு சுதந்திரமாக எழுத முடியுமா?

இராஜபாளையம் எஸ். விஜயன்

● 'கை'யைக் காட்டி ஆட்சிக்கு வந்தவர்களின் இந்தக் 'கை'யாலாகாத் தனத்தை நொந்துகொண்டு அவர்களுக்கு ஓட்டளித்த நம் 'கை'யைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதைத் தவிர நாம் வேறு என்ன செய்ய முடியும்?

திருச்சி-20 கிரிஜா மணாளன்

● மனிதனின் சுயநலத்தின் அடிப்படையில் பொதுநலம் விளையக் காத்திருப்பது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் மடமை ரகத்தைச் சேர்ந்தது. கொஞ்சமாவது சவுக்கடி முறையில்தான் இந்திய விடிமோட்சமே உத்தரவாதமாகும்.

பொன்மலை ஆர். சங்கர்

● விலைவாசி உயர்வுக்கு ''முதலாளிகளும் வியாபாரிகளும் கொள்ளை லாபம் அடிப்பது தான் முக்கிய காரணம்''. இந்தக் காரணத்தைத் தவிர மீதி எல்லாக் காரணங்களையும் எழுதியிருக்கிறீர்கள். நீயே கல்கி விலையை 90 பைசா அளவுக்கு உயர்த்தியிருக்கிறாய். அதற்கு என்னடா பெயர்?

திருவண்ணாமலை இராமநாதன்

(பத்திரிகைக் காகித வியாபாரத்தை அரசுதான் நடத்துகிறது. பழையபடி காகிதத்தை அவரவரும் இறக்குமதி செய்துகொள்ள அனுமதித்தால் பத்திரிகைகளின் விலை நிச்சயம் குறையும். - ஆசிரியர்)

● நாம் செலுத்துகிற வரிப் பணத்தில் 16 லட்ச ரூபாயை எடுத்துக் கொண்டு எம்.பி.க்கள் தமது அயல்நாட்டுத் தூதரகங்களில் 'ஹிந்தி உபயோகிப்பு எப்படி இருக்கிறது?' என்று பார்த்து வரக் கிளம்பியதைப் பற்றிய இன்டெல் கட்டுரை சுவையாக இருந்தது. முன்னொரு காலத்தில் ஹிந்தி எதிர்ப்பையும் ஒரு முக்கிய காரணமாக்கி, தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வும் தனது இரண்டு எம். பி.க்களை அக்குழுவுடன் அனுப்பி விருப்பதைத் தங்களின் 'சடையரில்' சேர்த்துக்கொள்ள மறந்தது ஏனோ?

செங்கல்வல்லி. முருகவேள்.

● அட்டைப் படம் பழு டல்! 1930ல் இப்படிப் பிரசுரித்திருந்தால் பொருத்தமாய் இருந்திருக்கும்!

மன்னார்குடி விஜயா கண்ணன்

● என்னுடைய கேள்வியைச் சிறந்ததாக இதுங்கியிருத்திங்க, ரொம்ப நன்றி சார்! உங்களை எப்படி இதுங்கிறதுன்னே தெரியல்லே! ரொம்ப இதுவுடன்

பட்டுக்கோட்டை டி.எஸ். ராஜகோபாலன்

● பேருந்துகளில் குறைந்தபட்சப் பயணக் கட்டணம் ஐம்பது சதவிகிதமும் கூடுதல் கட்டணங்கள் நூறு சதவிகிதமும் உயர்த்தப் படவிருக்கிறது. டீசல் விலை உயர்வு மட்டுமின்றி மற்ற அனைத்தையும் கணக்கில் கொண்டு பார்த்தால் கூட மொத்தச் செலவுகள் சுமார் பத்து அல்லது இருபது சதவிகிதமே உயரக் கூடும். இப்படி இருக்கும் போது பயணக் கட்டணத்தை சுமார் நூறு சதவிகிதம் உயர்த்த உத்தேசித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''இத்தகைய கட்டண உயர்வை அறிவித்தால்தான் மக்கள் சிறு உயர்விற்கேனும் சம்மதம் தருவார்கள் என்ற நோக்கத்தில் அறிவிப்பு விடுத்தோம்'' என்று அரசு சப்பை கட்ட முயலலாம். இது 'பகல் கொள்ளை அடிக்கப் போகிறோம்' என்று அறிவித்துவிட்டு, பிறகு 'பிக்பாக்கெட்தான் செய்கிறோம்' என்று சொல்வது போல் இருக்கும்.

சென்னை-87 லீலா


● அட்வகேட் ஜெனரல் பேட்டி படித்தேன். வழக்கறிஞர்கள்,நீதிபதிகள் மட்டுமா? எல்லா டாக்டர்களும்தான் வீட்டில் மருத்துவ சம்பந்தமான புத்தகங்களைத் தினம் தினம் அலசுகிறார்கள். பெரிய ஆபரேஷன் செய்வதற்கு முன் அது சம்பந்தப்பட்ட புத்தகங்கள் படிக்கிறார்கள். கேஸ் அனுபவங்களை நினைவுகூர்கிறார்கள். அதற்காக அவர்களும் எல்லா அரசு மருத்துவ மனைகளையும் வருடத்தில் இரண்டு மாதம் மூடிவிட்டால்? ஐயோ.... ஆனால் ஒன்று. நீதிமன்றங்கள் போலக் கேஸ்கள் தேங்கி இருக்காது. எல்லாம் போய்ச் சேர்ந்துவிடும்!

கோவை ஆர். லோகநாதன்

● மரண தண்டனை பற்றி அட்வகேட் ஜெனரல் கருத்து ஏற்புடையதல்ல. டொரனார்டு வழக்கில் தவறுதலாக, குற்றம் புரியாத ஒருவனுக்கு மரணதண்டனை அளித்ததிலிருந்து இங்கிலாந்து நாட்டில் பெரும் புரட்சியே ஏற்பட்டு, தற்பொழுது அம்மாதிரி தண்டனை நீக்கப்பட்டு இருக்கிறது. இந்திய பீனல் கோட் சட்டத்தைத் தயாரித்த ஆங்கிலேயர்களே தங்கள் நாட்டில் கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனைத் தீர்ப்பு சரியானதல்ல என்று தீர்மானித்து நடைமுறையில் அமலும் செய்த பிறகு நம் நாட்டில் தொடர்ந்து அம்மாதிரி தண்டனை அளித்து வருவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

வேலூர் பி.எஸ். சுப்பிரமணியன்

ஜட்ஜ்மெண்ட் ரிஸர்வ்ட்



நேர்மை – சமுதாயம்: தொண்டே – பத்திரிகைகள். எதற்கு எது ஆதாரம்? பத்திரிகைகளில் தாங்கள் பிரசுரிப்பது சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்று ஆசிரியர்கள் கூற, பத்திரிகைகளில் பிரசுரமாவதைப் படித்தும் பார்த்தும் சமூகம் கெடுவதாகச் சீர்திருத்தவாதிகள் சீற–

I have an open mind என்கிறார் சோ.


அதனால்தான்–

ஒரு பெண்ணைக் கற்பழித்ததாகக் குற்றச்சாட்டுக்கு ஆளானவனை முதலில் குற்றமற்றவனாக நிரூபிக்க முயலும்போது பத்திரிகைகளை மட்டுமின்றி சினிமாவையும் சமூக சேவகிகளையும் கூடச் சாடுகிறார். இவன் செயலுக்கு அவர்களைக் காரணமாக்க முயல்கிறார். பின்னர், ''ஒருவனுடைய செயலுக்கு ஏதேதோ சந்தர்ப்பச் சூழ்நிலைக் காரணங்களைக் கற்பிக்க முயல்வதே தவறு. குற்றம் புரிந்ததாய்த் தெரிந்தால் தண்டித்து விட வேண்டியதுதானே'' என்றும் கருத்துத் தெரிவிக்கிறார்.

பிரச்னையைப் பொருத்த மட்டில் ஜட்ஜ்மெண்ட் ரிஸர்வ்ட் ஆக இருக்கலாம். ஆனால் நாடகம் நமது ஜட்ஜ்மெண்டில் ஏ-ஒன் ஸடையர்தான். நீலு, அம்பி, சோ முதலிய எல்லோருமே நம்மை நிறுத்தாமல் சிரிக்க வைப்பதில் வெற்றி பெறுகிறார்கள். அவ்வப்போது கனமாக உதிர்க்கப்பட்ட சில சிந்தனைகளையும் ரசிகர்கள் விடாமல் ரசித்து ஆமோதிப்புடன் ஜீரணித்துக் கொண்டார்கள்.

ஆனால் ஒன்று – மாயா தியாகி விவகாரத்துக்குப் பிறகு எல்லோருமே 'ரேப்' கதைகள் எழுதப் போக சோவும் அதிலேயே கவனத்தைச் செலுத்தியது – நாடகத்தில் வரும் சினிமா டைரக்டர், பத்திரிகை ஆசிரியர், சமூக சேவகி போன்றோரின் உள் நோக்கத்துக்கும் சோவின் எண்ணப் போக்குக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை உணர்த்துகிறதா? – ஜட்ஜ்மெண்ட் ரிஸர்வ்ட்!

கீழ்வானம் சிவக்கும்



இன்னொரு கற்பழிப்பு – பழிவாங்கல் கதைதான். சிறிய மையக் கருத்தைச் சுற்றிச் சுற்றி ரங்காவின் வசனம் முறுக்கிக் கொண்டிருக்கிறது. இரு பொருள் வசனம் என்னும் போது குறிப்பிடுவது ஆபாசத்தை அல்ல. கதாபாத்திரத்துக்கு ஓர் அர்த்தமும், ரசிகர்களுக்கு உள் அர்த்தமும் தொனிக்க எழுதப்பட்டுள்ள வசனத்தால் சுவை கூடுகிறது. எதிர்பாராத முடிவு ஏற்கத்தக்க, எடுப்பான ஒன்றுதான்.

டைரக்ஷன் விக என்ற பிறகு நடிப்பு மிளிரக் கேட்பானேன். ஆனால் குமரன் பாத்திரத்தில் வைத்தி கொஞ்சமென்ன, ரொம்பவே ஓவர்தான். மற்றவர்கள்–ராஜாமணி, ஆனந்தி, சாரி – சடுகட்டிக்கொண்டு போகிறார்கள். எம். எல். ஏ. ராமசாமிக்கு எக்ஸ்ட்ராவாக ஒரு ஷொட்டு – பலே பேஷ்!


கீழ் வானம் சிவக்கும் – விளக்கம் தராதது இயக்குனர் கே. பாலசந்தருக்குப் பிடித்திருக்கலாம். நம்மைக் குழப்பவே செய்கிறது. ஆனால், ''இடரென்று ஒலிக்கும் 'சங்கராபரணம்' பாட்டு எதற்கு?'' என்று அவர் கேட்டிருப்பதை – மோதிரக் கைக் குட்டு என்று பெருமிதத்துடன் ஏற்கலாம்.


ஃபிப்டி ஃபிப்டி

எதிர்பார்த்துச் சென்றது ஐம்பது சதம்; அடைந்த ஏமாற்றம் ஐம்பது சதம். அதற்கு இது சரியாகப் போய்விட்டது. விமர்சனம் என்று நினைத்தாலே நாடகப் பாத்திரம் ராமசாமி போல நாமும் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறோம்.

பூர்ணம் ஸார்! பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்!

– குட்டிகிருஷ்ணன்


ஈரான்
ஈராக்
யுத்தம்


பெங்களூரில் பத்திரிகைகள்
வெளிவர முடியாமல்
இ. காங்கிரஸார் 'கெரோ'
செய்தனர்!
இ. காங்கிரஸார்
கெரோ
பத்திரிகைகள்


பஸ் கட்டண
உயர்வு
பால் கட்டண
உயர்வு

1980 அக்டோபர் 5
ரௌத்திரி புரட்டாசி 19
மலர்: 39 இதழ்: 10



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அடக்குமுறைக்கு ஓர் ஆயுதம்

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் நீதி நெறிக்கும் உட்பட்டு தர்ம நியாயமான முறையில் ஆட்சி நடத்தத் தனக்குத் தெரியாது என்று இந்திரா காங்கிரஸ் அரசு ஒப்புக்கொண்டு விட்டது. 'இருக்கிற அதிகாரங்கள் போதாது; சர்வாதிகாரங்கள் வேண்டும்; அப்படியானால்தான் ஆட்சி நடத்த முடியும்' என்று தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டது!

முன்பு மிசா என்றொரு அடக்குமுறை ஆயுதத்தைக் கையாண்டு மக்களை எப்படியெல்லாம் அச்சுறுத்தி வந்தது இந்திரா காங்கிரஸ் ஆட்சி என்பது நமக்குத் தெரியும். ஜனதா ஆட்சியில் மிசா ஒழிக்கப்பட்டது. மீண்டும் அதே மிசாவுக்கு இப்போது புத்துயிர் தந்து புதுப் பெயரில் உலவ விட்டிருக்கிறது மத்திய அரசு. தேசப் பாதுகாப்புச் சட்டம் (என்.எஸ்.ஓ) என்று மாற்றுப் பெயர் பெற்றுள்ள இச்சட்டத்தின் மூலம் விசாரணையின்றி யாரை வேணுமானாலும் காவலில் வைக்க மத்திய, மாநில அரசுகள் வரம்பின்றி அதிகாரங்கள் பெற்றுள்ளன.

நெருக்கடி நிலைப் பிரகடனத்தின்போது மட்டுமின்றி அதற்கு முன்னரே கூட எதேச்சாதிகாரத்துக்கு வழி வகுத்தது மிசா சட்டம். மிசா துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக எத்தனையோ நீதிமன்றத் தீர்ப்புக்கள். இந்தத் தீர்ப்புக்கள் கவனித்தது மிசா அரக்கனிடம் அகப்பட்டுத் தவித்த ஏராளமான மானிகளுள் ஒருசிலரை மட்டுமே. மிரட்டலுக்குப் பணிந்து கைதாவதைத் தவிர்த்த ஏராளமான மனிதர்கள் நீதி மன்றங்களென்ன, யாருடைய கவனத்துக்குமே வந்திருக்க மாட்டார்கள். 'விசாரணையின்றி காவல்' என்ற அநீதியினால் விளையும் ஆபத்து, பலர் கைதாவார்கள் என்பது மட்டுமல்ல; அதைவிடவும் பெரிய ஆபத்து பலர் அஞ்சி அஞ்சிச் சாவார்கள் என்பதே. முதுகெலும்பற்ற மக்களை அது உருவாக்கிவிடும். சர்வாதிகார ஆட்சிக்கு அதுதானே தேவை? மீண்டும் அந்த நிலைக்கே திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

விலைவாசிகள் உயர்கின்றன; வகுப்புக் கலவரங்கள் நடக்கின்றன; பிரிவினைச் சக்திகள் ஆங்காங்கே தலையெடுக்கின்றன - உண்மைதான். ஆனால் இதுபோன்ற பிரச்னைகளைச் சந்திப்பதற்காக ஏற்பட்டதுதான் அரசு. இவற்றை எதிர்கொண்டு, காரணங்களை ஆராய்ந்து, நிவாரணம் தேடி, முறியடிக்க முயற்சிகளை மேற்கொள்கிற அறிவாற்றலும் மனோ திடமும் செயலூக்கமும் இந்த அரசுக்கு இல்லை. அது மட்டுமா? தேச விரோதச் சக்திகளைத் தடுத்து நிறுத்தவும் அடக்கி ஒடுக்கவும் ஏராளமான அதிகாரங்கள் ஏற்கனவே அரசுக்கு உண்டு. அந்த அதிகாரங்களைத் திறம்படப் பயன்படுத்தவும் சுறுசுறுப்புடன் இயங்கவும் இந்த அரசுக்குத் தெரியவில்லை. எனவேதான் சர்வாதிகாரங்களைத் தனக்குத் தானே வழங்கிக்கொள்கிற அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறது.

தேசத்துக்கு உண்மையிலேயே ஆபத்து வந்திருந்தால் அது பற்றி அறிய மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் ஆட்சியில் இருப்போர், பரவலாக ஸி.ஐ.ஏ. என்றும், பாகிஸ்தான் என்றும், அரபு நாடுகள் என்றும், ஆர்.எஸ். எஸ். என்றும் தலைக்குத் தலை தோன்றியபடி பழி சுமத்துகிறார்களேயன்றி குறிப்பிட்டு எதையும் கூறவில்லை. ஏதாவது இருந்தால்தானே சொல்ல?

இந்திரா காந்தியிடம் மதிப்பு வைத்துள்ள பலருக்கு நாம் இதனைச் சர்வாதிகார ஆட்சி என்றால் பிடிப்பதில்லை. ஆனால் மூன்றிலிரண்டு பங்கு மெஜாரிட்டி பலத்தை நாடாளுமன்றத்தில் பெற்ற போதே சர்வாதிகாரத்துக்குக் கொடியேற்றிவிட்ட இந்த ஆட்சி, இப்போது என். எஸ். ஓ. அவசரச் சட்டத்தையும் பிறப்பித்ததன் மூலம் ''சர்வாதிகார ஆட்சிதான்; சந்தேகமே வேண்டாம்'' என்று தன்னைத் தானே பிரகடனம் பண்ணிக் கொண்டிருக்கிறது.

அத்தியாயம் 16

தாய் வீடு போய்விட்டாய் — மானே
தனியே டெனைப் படுத்தும் பாடு காணும்!
நாய்வீடு, நரிவீடு நீஇலா வீடு
நடுவீடு பிணம் எரிக்கும் சுடுகாடு
எனக்கும் உனக்கும் இடையில் சிறிதே
இருக்கிருந் தாலும் துன்பம் பெரிதே.

—பாரதி தாசன்

"என்ன சொல்லு" என்றான் ராஜீவ்.

"எப்படியும் நினைச்சபடி ஊருக்குக் கிளம்ப முடியாமப் போயிடுச்சு. இப்பத்தான் உங்களுக்கும் ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு. நந்தகோபாலின் மறைவினாலே நீங்க எவ்வளவு அப்செட் ஆகியிருக்கீங்கன்னு உங்க முகமே தெளிவாக் காட்டுது..."

"என்ன சொல்ல நினைக்கிறே உஷா?"

"ராஜீவ்... கல்யாணம் என்கிறது ஒரு சந்தோஷமான சமாசாரம். அதுக்காகப் புறப்பட்டுக்கிட்டு இருந்த நேரத்திலே, இப்படியொரு துக்ககரமான செய்தி வந்து உங்க மனசையே கலங்க வைச்சிடுச்சு."

"நீ சொல்றது உண்மை உஷா. பட், ஐ வில் கெட் ஓவர் இட்."

"ராஜீவ்!" மிகவும் மென்மையாக உஷா அவனைப் பார்த்தாள். "இத்தனை நாட்கள் உங்களோடு பழகியிருக்கேன். உங்க மனசை அவ்வளவுகூட என்னாலே புரிஞ்சுக்க முடியாதா? இந்தத் துக்கத்திலிருந்து மீள உங்களுக்குச் சில நாட்களாவது தேவை."..

"அதனாலே?"

"வேறே ஒண்ணுமில்லே... எப்படியும் புதன் கிழமை பரிட்சைகள் ஆரம்பம். சில நாட்களுக்குள்ளே முடிஞ்சிடும். இப்ப என்ன நடந்து போச்சுன்னு நாம இப்படி அவசரப்படணும்? இதுக்கு முன்னாலே நாம பேசிக்கிட்டபடியே, பரிட்சைகள் முடிஞ்சதும் நான் முதல்லே ஊருக்குப் போறேன். அப்புறமா நீங்க வாங்க. அதுக்குள்ளே ஒண்ணும் ஆயிடப் போறதில்லே. நம்ம ஒரிஜினல் ப்ளேன்படியே செய்தால் என்ன?"

ராஜீவ் தீர்க்கமாக யோசித்தான். அவள் கூறியதில் நியாயம் இருப்பதாக அவனுக்கும் தோன்றியது. நந்தகோபாலின் மரணம் உண்மையிலேயே அவனைச் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. இத்தருணத்தில் நினைத்தபடி உடனடியாக ஊருக்குக் கிளம்பவும் முடியாமல் போய்விட்டது.

"நீ சொல்றது சரிதான் உஷா. அப்படியே செய்யலாம்" என்று ஒப்புக்கொண்டான்.

பரிட்சைகள் முடிந்தன. ஊருக்குப் புறப்படு முன், கடைசியாக ஒரு முறை உஷா ராஜீவிடமிருந்து விடை பெற்றுக் கொள்ள வந்தாள்.

இறுக்கமாக அவளைத் தழுவிக் கொண்ட அவனுக்கு, தன் அணைப்பிலிருந்து அவளுக்கு விடுதலை வர மனமே இல்லை.

"ராஜீவ், நேரமாச்சு! இப்ப நான் கிளம்பல்லேன்னு, ட்ரெயினை மிஸ் பண்ணிடுவேன்!"

அவனால் அவளை அங்கிருந்து போக அனுமதிக்க முடியவில்லை. இன்னும் நெருக்கமாகத் தன்னோடு அவளை அணைத்துக் கொண்டான். அந்த இரும்புப் பிடியிலிருந்து அவளை ஒரு அங்குலம் விலக விட்டாலும், எங்கே காற்றினில் ஆவியாய் மறைந்துபோய் விடுவாளோ என்ற பீதி அவன் மனத்துள் புகுந்தாற்போல், அவள் விலா எலும்பு நொறுங்கிப் போகும் வண்ணம் தன் பிடியை இன்னமும் இறுக்கினான். அவள் உதடுகள், கண்கள், கன்னங்களின் மீது மழையாய் முத்தங்களைப் பொழிந்தான்.



அவள் கழுத்தின் இடுக்கில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

''இன்னும் ஒரு வாரம் உன்னைப் பிரிந்து நான் எப்படி இருக்கப் போகிறேன்? உஷா, ப்ளீஸ்! நீ தனியா போக வேண்டாம்! நானும் கூட வரேன்!''

உஷா அவன் முகத்தைத் தன் கைகளின் இடையே எடுத்துக்கொண்டு, ஒரு தாயைப் போலக் கனிவோடு அவன் கண்களுக்கு ஒவ்வொன்றாக முத்தமிட்டாள்.

''ராஜீவ்... இத்தனை நாட்கள் பொறுமையா இருந்திருக்கீங்க... இன்னும் ஒரு வாரம்தானே? தெரியறதுக்கு முன்னாலே அது பறந்து ஓடிடும். இதெல்லாம் நல்லதுக்குத்தான். அதுக்கப்புறம்....''

''அதுக்கு அப்புறம் — இனி நமக்குள்ளே பிரிவு என்ற வார்த்தைக்கே இடமிருக்காது!''

''என் அட்ரஸ் உங்ககிட்ட இருக்கு இல்லே?''

''இதோ பத்திரமா வச்சிருக்கேன்.'' அவன் தன் விலாசத்தை எழுதியிருந்த காகிதத்தை எடுத்துக் காண்பித்தான்.

''அடுத்த வாரம் கண்டிப்பா வந்துடுவீங்க இல்லே?''

''அவ்வளவு நிச்சயமாச் சொல்ல முடியாது....''

''என்ன?''

''நாளைக்கே வந்தாலும் வந்துடுவேன்!''

உஷா சிரித்தாள்.

''சிரிக்காதே. நிஜமாத்தான் சொல்றேன். ஒரு வாரம் என்னாலே பொறுத்திருக்க முடியாதுன்னு தோணிச்சின்னு, கிளம்பி புறப்பட்டு வந்திடுவேன்!''

''ராஜீவ்....!''

''ஆமாம்.... நாளைக்கே வந்து உன் வாசற்படியிலே நின்னேன்னு, என்ன செய்வே? என்னை விரட்டி அடிச்சிடுவாயா? முடியுமா உன்னாலே?''

''ராஜீவ்.... ப்ளீஸ்!''

''ஓ.கே.! ஓ.கே. ஸ்வீட் ஹார்ட்! டேக் இட் ஈஸி! சும்மா டீஸ் பண்ணேன். அவ்வளவுதான். அப்படி யெல்லாம் செய்ய மாட்டேன். பயப்படாதே. இன்னையிலேர்ந்து சரியா ஒரு வாரம் கழிச்சுத்தான் உன் வாசற்படியிலே வந்து நிற்பேன். போதுமா?''

''ஓ ராஜீவ்!'' அடி மரத்தின் மீது கொடி ஒட்டிக் கொள்வதைப்போல் அவனைப் பற்றிக் கொண்டாள். இதுவரை அவர்களை எதிர் நோக்கும் பிரிவின் துயரம் தாங்க முடியாமல் தவித்த அவனுக்குத் தைரியமூட்டும் வார்த்தைகளைப் பேசியவள் அவள்தான். ஆனால், பிரிய வேண்டிய கட்டம் நெருங்க, நெருங்க அந்த நினைப்பையே அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அந்த நினைப்பு உண்டாக்கிய வேதனையை அவள் மனம் தாங்கவில்லை.

சில நிமிஷங்கள் இருவரும் அப்படியே மௌனமாக நின்றார்கள். கடைசியில், ராஜீவ்தான் அந்த அணைப்பிலிருந்து அவளை விலக்கினான். ''நீ இப்பப் புறப்படலேன்னு, உண்மையாலே ட்ரெயினைத் தவற விட்டுடுவே....''

''ஆ....ஆ....ஆமாம்....ஆனா ராஜீவ்!'' திடீரென்று உடைந்து போனாள்.

''என்ன இது? கண்ணீரா?''

ஒவ்வொரு கண்ணின் அடியிலும் விழுவதற்கு ஆயத்தமாக ஒரு கண்ணீர்த் துளி வைரத்தைப் போலப் பிரகாசித்தது. அந்த உப்புக்கரிக்கும் முத்துக்களை உதிர விடாமல்

கிராமத்து அத்தியாயம்

முன்னுரை: 'அவள் அப்படித்தான்' என்றவரின் இரண்டாவது படம்.

அத்தியாயம் 1: ஒருவனைக் காதலித்து மற்றவனைக் கைப்பிடித்துக் காதல் நினைவுகளால் சஞ்சலப்படும் பெண்ணின் உணர்ச்சிகளைக் கதை சொல்லுகிறது.

அத்தியாயம் 2: கதாநாயகியாக வரும் ரூபிணிகுமாரியின் முகமே சிரிக்கிறது.



இடைவேளைக்குப் பின் தடுமாறும் மனத்தை நடிப்பில் காட்டுகிறார். இவர் அழுகையில் மட்டுமே நமக்குச் சிரிப்பு வருகிறது. காதலன் அருண் தூக்கத்தில் நடப்பது போல் எங்கேயோ பார்த்துக் கொண்டு மந்தமாய்ப் பேசுகிறார். சந்திரஹாசன் கமலின் 'அண்ணன்'. கச்சிதமான சுந்தர், மற்றும் தண்டாயுதபாணி செல்லப்பா, அழகிய சுந்தரம் பிள்ளை, அவ்வட்டல் அனுமந்து, ஸ்வர்ணமதா பற்றியெல்லாம் 'ஒரு வரி' எழுதலாம்.

அத்தியாயம் 3: நல்லுசாமி — ஞானசேகரனின் கேமரா குளிர்ச்சியான ஓவியம் வரைகிறது. அற்புதமான ஆர்ட் ஒர்க். இனிமையான இளையராஜா. அளவான வசனங்கள்.

அத்தியாயம் 4: சினிமாவைப் புரிந்து கொண்ட ருத்ரய்யா, புரியவும் வைக்கிறார். காதலன் தந்த ஐம்பது பைசாவைக் காதலி சாதாரணமாய்த் தூக்கி யெறியும் இடத்தில் வசனமில்லை. தவிலையியா கத்தலுக்குப் பின் பயந்த மனைவியை சுந்தர் ஆதரத்துடன் தடவித் தூங்கவைக்கும் காட்சி மனத்தில் கவிதையாகிறது. ஒரு பெண்ணின் கதையை மட்டும் சொல்லாமல் அவளின் உணர்ச்சிகளையும் புரியவைப்பதிலேயே டைரக்டர் திறமை தெரிகிறது.

முடிவுரை: வேலாய் மனதைப் பாதிக்கும் படம்.

— **நளினி சாஸ்திரி**

முத்தமிட்டுத் தன் உதடுகளால் ஒற்றி எடுத்தான்.

''பைத்தியமே! எதுக்காக அழறே? இன்னும் ஏழே நாட்கள்தானே? அப்புறம் உன் கூடவே இருப்பேன்.''

பனித்த கண்களோடு புன்னகைத்தாள். ஆமாம் என்பது போல் மெல்ல தலையை அசைத்தாள்.

''ஒருவேளை வீட்டிலே ஏதாவது தகராறு ஏற்பட்டா, உடனே எனக்கு ட்ரங்-கால் போடு. என் நம்பர் குறிச்சு வைச்சிருக்கே இல்லே?''

''தேவையில்லே. அது எப்பவோ மனப் பாடம் ஆயிடுச்சு. வேற எதை வேணு மானாலும் மறப்பேன். அதை மறக்க முடியாது.''

''என்னைக்கூட மறந்திடுவாயா?''

''ஓ ராஜீவ்! உங்களை மறக்கணும்னா, நான் என்னையே மறந்தாகணும்! அது எப்படி முடியும்?''

அவன் கழுத்தைத் தன் கைகளால் வளைத்துக் கொண்டு பாதுகாப்பாக ஒண்டிக் கொண்டாள்.

ராஜீவ் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ''டைம்'ஸ் அப், ஸ்வீட் ஹார்ட்.''

இறுதியாக ஒரு முறை அவள் உதடுகளோடு தன் உதடுகளை இணைத்தான். போகத் திரும்பினான். அறைக் கதவு வரை சென்றான். சடாரென்று திரும்பி ஓடிவந்து மறுபடியும் அவளை இறுகத் தழுவிக் கொண்டான். ஏதோ கெட்ட நிமித்தத்தின் முன்னெச்சரிக்கை மனத்துள் தோன்றியது போல், ஓர் உணர்வு உண்டாயிற்று. ஆனால் அதனை அவனால் விவரிக்க முடியவில்லை. புரிந்து கொள்ளவும் முடியவில்லை.

அவளை விட்டுப் பிரிந்தால் எங்கே தன் உயிரே பிரிந்து விடுமோ என்கிற மாதிரி அத்தனை நெருக்கமாகப் பற்றிக் கொண்டிருந்த அவளது உடல் இலையைப் போல உதறிக் கொண்டிருப்பதை ராஜீவ் உணர்ந்தான்.

''உஷா! என்னம்மா? என்ன ஆச்சு?''

''ஒ....ஒ... ஒன்னுமில்லே. நான்... நான்... போயிட்டு வரேன்.''

ஒரு அடி பின்னுக்கு எடுத்து வைத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''பை, ராஜீவ்.''

''பை, மை லவ். உடம்பை ஜாக்கிரதையாப் பார்த்துக்க. நம்ம குழந்தையையும் பத்திரமாப் பார்த்துக்க.''

கண்ணீர் பிரவாகமாகப் பெருக்கெடுத்த கண்களோடு இறுதியாக ஒரு முறை அவனைப் பார்த்தாள். பிறகு மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு, திரும்பிப் பார்க்காமல் அறையை விட்டுவெளியேறினான். மீண்டும் ஒரே ஒரு முறை திரும்பிப் பார்த்தாலும் கூட, அவளால் அங்கிருந்து நகரவே முடியாது என்பது அவள் உள்ளம் அறிந்த உண்மை.

தளர்ந்த நடையோடு அங்கிருந்து அவள் போவதை ராஜீவ் பார்த்தான். தன் பார்வையிலிருந்து அவள் மறைந்ததும், அவனையும் மீறி, கத்திக் குத்துப் போன்ற ஒரு கூர்மையான வேதனை அவன் நெஞ்சைத் தாக்குவதை உணர்ந்தான்.



''போடா பைத்தியக்காரா! ஏழு நாட்கள் அவ்வளவுதானே? என்னமோ அவளை மறுபடியும் இந்த ஜன்மத்திலே பார்க்கவே போறதில்லேங்கிற மாதிரி ஏண்டா இப்படி வேதனைப் படறே!'' கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கூறித் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு சிரிக்க முயன்றான்.

திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் தனது ஃபர்ஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்டை விட்டு உஷா இறங்கினாள். அவள் தாயாரின் வயதான டிரைவர் பழனியப்பா அவளை வரவேற்க விரிந்த புன்னகையோடு நின்று கொண்டிருந்தார். ரயில் ஸ்டேஷனுக்குள் நிதானமாகப் புகும்போதே, ரயில் பெட்டியின் ஜன்னல் அருகே உஷாவின் முகத்தைப் பார்த்துவிட்டு, ரயில் நிற்கும்வரை, பெட்டி கூடவே பிளாட்பாரத்தில் ஓடி வந்திருந்தார் பழனியப்பா.

''வாம்மா குழந்தை!''

''பழனி மாமா! எப்படி இருக்கீங்க?'' அன்புடன் விசாரித்தாள் உஷா.

''முருகன் அருளாலே சௌக்கியமா இருக்கேம்மா. நீ எப்படி இருக்கே குழந்தை?''

''எனக்கென்ன ஜோரா இருக்கேன்.''

''அதான் பார்த்தாலே தெரியுதே! ரோஜா பூ மாதிரி இருக்கே! வீட்டுக்குப் போனவுடனே திருஷ்டி சுத்திப் போடணும்!''

''போங்க மாமா! அம்மா எப்படி இருக்காங்க?''

''வழக்கம் போலத்தான். நீ எப்ப வருவேன்னு வழி மேல் விழி வச்சுக் காத்துக்

கிட்டு இருக்காங்க... போல்! இப்படி வாம்மா!''

ஒரு போர்ட்டருக்குச் சைகை செய்து, அவன் உஷாவின் பெட்டிகளைச் சுமந்து வர, ''வாம்மா'' என்று பழனியப்பா அவளை வெளியே அழைத்துப் போனார்.

கல்யாணி அம்மாவின் பச்சை நிற அம்பாஸிடர் வண்டி வெளியே நின்றது. பழனியப்பா காரை ஓட்ட, ஸ்ரீரங்கத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

காரில் செல்லும்பொழுது, எண்ணற்ற பழைய நினைவுகள் உஷாவின் மனத்தில் நிழலாடின. சிறு வயதில் அவள் திருச்சியில் பள்ளிக்கூடம் செல்லும் நாட்களில் இதே பழனியப்பாதான் தினமும் காரில் அவளைக் கொண்டு போய்ப் பள்ளிக்கூடத்தில் இறக்கி விடுவார். மாலையில் மறுபடியும் அவளை வீட்டுக்கு அழைத்து வருவார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்வரை, இதே சாலையில் எத்தனை முறை சென்றிருக்கிறாள். அதன் பிறகு கல்லூரிப் படிப்புக்காகச் சென்னைக்குப் போய்விட்டாள். ஓராண்டு பி.யூ.சி. இரண்டு ஆண்டுகள் பி.ஏ.

—''பி.ஏ. பட்டம் பெற இன்னும் ஓராண்டு மீதம் இருக்கிறது. அதை என்னால் முடிக்க முடியுமா? இப்போதே கர்ப்பிணியாக இருக்கிறேன். ஆனால் இன்னும் வெளியே தெரியவில்லை. போகப் போகத் தெரியுமே? பெரிய வயிற்றைச் சுமந்து கொண்டு எப்படி காலேஜுக்குப் போவது? அதிலும், ராஜீவை நான் திருமணம் செய்துகொண்ட செய்தி வெளியே வந்த பிறகா? எவ்வளவு பப்ளிஸிட்டி! ஊரே, மாநிலமே அமர்க்களப் படுமே!

—''அவர் எப்படிப்பட்ட திருமணவிழாவை விரும்புவார்? தடபுடலாக, ஆயிரக்கணக்கில் விருந்தாளிகளை அழைத்து அப்பாடல் பரியிலே நடக்குமா? இல்லை எளிமையான கல்யாணத்தைவிரும்புவாரா? எதுவாக இருந்தாலும் என்ன? அவருக்கு எப்படி விருப்பமோ, அப்படியே செய்யட்டும்.

—''வரல்ட் டூர் அழைச்சுக்கிட்டுப் போறதா சொன்னாரே! திருமணம் முடிந்த உடனேயே அழைத்துப் போவாரா? ஸ்விட்சர்லேண்ட், லண்டன், ரோம், பாரிஸ்! இந்த இடங்களை யெல்லாம் உண்மையாகக் காணப் போகிறேனா? அதுவும் அவரோடு!

—''ஆனால் அதன் பிறகு நிச்சயமாகக் கல்லூரிக்குப் போக முடியாது. மற்றப் பெண்களின் கேள்விகளையும் பார்வைகளையும் சமாளிக்க முடியாது! அதை அவரும் விரும்ப மாட்டார். வீட்டிலேயே படித்து முடிக்கலாம். ப்ரைவேட்டாக இறுதித் தேர்வுகளை எழுதலாம்.

—''அதற்குள் குழந்தை பிறந்துவிடுமே? என்ன குழந்தை பிறக்குமோ? ராஜீவைப் போலவே ஒரு பையனா, இல்லை என்னைப் போலவே ஒரு பெண்ணா? ஓ! ராஜீவ் மாதிரியே ஓர் ஆண் குழந்தை பிறந்து விட்டால் — வேறு என்ன வேண்டும்!''

எதிர் காலத்தைப் பற்றிய ஆசைக் கனவுகளில் மூழ்கிப் போயிருந்த உஷா, கார் வீட்டை அடைந்து கேட்டுக்குள் திரும்புவதைக்கூடச் சரியாகக் கவனிக்கவில்லை.

வராந்தாப் படிகளின் உச்சியில் அவள் தாயார் கல்யாணி அம்மாள், அவளை வரவேற்கக் காத்திருந்தார். கல்யாணி அம்மாளைக் கண்டவுடன், உஷா இடரென்று விழித்துக்கொண்டு யதார்த்த உலகத்துக்குத் திரும்பி வந்தாள்.

''எதிர்காலத்தைப் பற்றி யோசிப்பதில் எவ்வளவு தூரம் சென்று விட்டேன்! குழந்தை பிறக்கும்வரையில் அல்லவா போய்விட்டேன்! அதெல்லாம் பின்னால். முதலில் இந்தப் பாலத்தைக் கடந்தாக வேண்டுமே! இந்த இடையூறைத் தாண்டிப் போகவேண்டுமே. இந்த விஷயத்தை எப்படி அம்மாவிடம் உடைக்கப் போகிறேன்? எப்படி ஆரம்பிப்பது?''

மனத்துக்குள் உண்டாகியிருந்த பதற்றத்தை முகத்தில் தெரிய விடாமல், உஷா காரை விட்டு இறங்கினாள். (தொடரும்)

16கிளைகள் கொண்ட பனைமரம்

பனைமரத்தின் குருத்தின் முனை பூச்சிகள், வண்டினங்களால் தாக்கப்பட்டு பரவலாக பிரிக்கப்படுவதின் காரணமாக பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு கிளையாக வளரத் தொடங்கி விடுகிறது. மேலும் குருத்தின் மேல் இடி விழுவதாலும், பதனீர் உற்பத்தி செய்ய இக் குருத்தின் முனைப்பகுதியைக் கத்தி கொண்டு சீவுவதினால் காயப்படுவதினாலும் குருத்து கிளைகளாக மாற ஏதுவாகிறது.

ஒருமரம், 16 கிளைகள், ஒவ்வொரு கிளைக்கும் 16 முதல் 20 பனை ஓலைகள். ஒரே மரத்தில் நூற்றுக் கணக்கான பனை ஓலைகள். இத்தகைய அதிசய பனை மரம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நரிக்குடியில் ஒன்றும், திருநெல்வேலியில் இரண்டும், கன்னியா குமரியில் இரண்டும், சென்னை பொதியிலத் கல்லூரியில் ஒன்றும் 2, 4, 8, 10, 16, 22 என்று கிளைகள் எண்ணிக்கையில் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இம்மரங்களைப் பற்றி மதுரை காமராஜ் பல்கலைக்கழக தாவர இயல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

- அந்தோனி பேனிஸ்



கே.பி.எஸ்

...ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவும் ஒரு சோதனை; ஒவ்வொரு சோதனையும் மனித குலத்தை ஒருபடி மேலே உயர்த்தும் சாதனை; இப்படியாக உயர்தரமாக அமைந்திருக்கும் இப்படத்துக்கு நெடுகிலும் ஜீவகளையை அளித்து வருபவர் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள். ஔவையார் என்னும் பாத்திரத்துக்கு மிகப் பொருத்தமானவர். சொந்த வாழ்க்கையில் உன்னத லட்சியங்கள் உள்ளவர். அந்த லட்சியங்களைக் கடைப்பிடிப்பதில் நெஞ்சுத் துணிவும் தீரமும் படைத்தவர். செயலாற்றல் பெற்றவர். தமிழ் மொழியைத் தெளிவுடனும் வன்மையுடனும் கையாண்டு கேட்பவர்களின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்யக் கூடியவர். அவருடைய இசைத் திறனைப் பற்றி சொல்லத் தேவையில்லை. எல்லா வகையிலும் ஔவை பாத்திரத்திற்கு ஏற்றவராக விளங்குகிறார் ''ஔவையின் புனர் அவதாரம்'' என்று சொல்லக் கூடியவாறு நடித்திருக்கிறார். அவர் பாடியிருப்பதெல்லாம் தென்னாட்டு இசைக்கலையான கர்நாடக சங்கீதமாக மிளிரும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. அவ்வாறு எதிர்பார்த்தும் படம் பார்க்கப் போகிறவர்கள் பரிபூரணமான திருப்தி அடைவார்கள்.

[அண்மையில் காலமான கே. பி. எஸ். குறித்து அமரர் கல்கி, 1953 ஆகஸ்டு 9ட கல்கி இதழில் எழுதியதை அஞ்சலியாகப் பிரசுரித்துள்ளோம்.]



அண்ணலைப் பற்றிய எண்ணங்கள்



சென்னை தக்கர் பாபா வித்யாலயம் காந்தி ஜெயந்தியை யொட்டி கல்கி நேயர்களுக்கு இரு பரிசுகளை அறிவிக்கிறது.

''அறிந்த மத தர்மமே மகாத்மாவின் அரசியல் சேவையின் அடிப்படை'' என்ற கருத்து இழையோட கல்கியில் ஒன்றரைப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் கட்டுரை எழுதவும். முதல் பரிசு ரூ. 300. இரண்டாம் பரிசு ரூ. 200.

பரிசு பெறும் இரு கட்டுரைகளும் ஜனவரி 30ந் தேதி அண்ணல் அமரரான தினத்தை யொட்டிக் கல்கியில் பிரசுரமாகும்.

முடிவு தேதி: நவம்பர் 20.

உறையின் மேல் ''அண்ணலைப் பற்றி...'' என்று தெளிவாகக் குறிப்பிடவும். கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. பரிசு பெறாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. விலாசம்: ஆசிரியர் கல்கி, சென்னை-600032.

சட்டமும் சமுதாயமும்

தற்கொலைகள் அதற்குக் காரணமானவர்கள்!

சினிமா நடிகை தற்கொலை... வரதட்சிணைக் கொடுமையால் எட்டாவது மாடியிலிருந்து விழுந்த பெண் தற்கொலை... காதலித்தவர் திருமணம் செய்து கொள்ள மறுத்ததால் ரயில் முன் பாய்ந்து இளம் பெண் தற்கொலை... போன்ற செய்திகள் தினசரி வந்த வண்ணம் உள்ளன.

1979ம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 1065 பெண்கள் தங்களுக்குத் தாங்களே தீவைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்கள்.

தற்கொலை முயற்சிகளுக்குத் தண்டனை உண்டு சரி; தற்கொலை முயற்சிக்குக் காரணமாகிறவர்களுக்குத் தண்டனை உண்டா? வழக்கறிஞர் திரு எஸ். ராமநாராயணன் அவர்களுடன் சம்பாஷித்தபோது கிடைத்த தகவல்கள்:

இந்திய பீனல் கோட் சட்டப்படி தற்கொலைக்கு உடந்தையானவர்கள் குற்றவாளியாகிறார்கள். இவர்களை abettors என்பர்.

மனநிலை சரியில்லாதவர்கள், புத்தி ஸ்வாதீனம் இல்லாதவர்கள் போன்றவர்களது தற்கொலைக்குக் காரணமாக இருப்பவர்கள் தீவிர தண்டனை பெறச் சட்டம் வழி வகுக்கிறது.

ஸ்திர மனநிலை உள்ளவர்கள் தற்கொலை செய்துகொள்ள உடந்தையாகவோ, காரணமாகவோ இருப்பவர்களுக்கும் கடுங்காவல் தண்டனை கொடுக்க சட்டம் இடம் தருகிறது.

ஒருவன் தற்கொலை செய்து கொள்ள **முயன்று** அது நிரூபிக்கப்படுமாயின் அவனுக்கு ஓராண்டு வரை சாதாரண சிறை தண்டனை விதிக்கச் சட்டம் இடம் கொடுக்கிறது. தற்கொலை **முயற்சிக்குக்** காரணமானவர்களையும் abetting குற்றத்திற்காகச் சட்டப்படி தண்டிக்க முடியும்.



× எஸ். ராமநாராயணன்

ஆனால் நடைமுறையில் பெரும்பாலான தற்கொலைக் குற்றங்கள் போலீஸாருக்குத் தெரியவராமல் அமுக்கப்பட்டு விடுகின்றன. தற்கொலைக் குற்றம் போலீஸின் கவனத்துக்கு வந்தால் கோர்ட்டில் வழக்காடும் பொறுப்பு போலீஸினுடையது. ஆனால் அவர்கள் கொலைக் குற்றத்துக்கு எந்த அளவு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வாதாடுகிறார்களோ அந்த அளவுக்கு முக்கியத்துவத்தைத் தற்கொலைக் குற்றத்துக்குக் கொடுப்பதில்லை.

ஒரு தற்கொலை நிகழ்ந்தால் அதற்கான அடிப்படைக் காரணத்தை மிகத் தீவிரமாக விசாரித்து, போதுமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, தற்கொலை செய்து கொண்டவர் அத்தகைய நிலைக்குத் தள்ளப்பட எவர் காரணமாக அமைந்தார்கள் என்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தர போலீஸ் இன்னும் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்.

நீதிமன்றத்தில் தற்கொலை முயற்சி செய்ததையோ, அதற்கு உடந்தையாக இருந்ததையோ நிரூபிப்பது சுலபமல்ல. ஆனால் அதனால் சோர்வுறாமல் சட்டமும் சமுதாயமும் ஒருங்கிணைந்து சமூகப்பணியாற்றுவோர், மனோதத்துவ நிபுணர்கள் ஆகியோர் உதவியுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

சமீபத்தில் வெளியான ஒரு தீர்ப்பு மனத்துக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஹரியானா மாநிலத்தில் ஜகாலி கிராமத்தில் வரதட்சிணைக் கொடுமையால் ஓர் இளம் பெண் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து நீதிமன்றத்துக்கு வழக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அப்பெண் தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் அவளது கணவனும், மாமியாரும் தான் என்ற முடிவுக்கு வந்து அப்பெண்ணின் கணவனுக்கு 10 ஆண்டும், மாமியாருக்கு 7 ஆண்டும் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்!

ஆனால் பொதுவாக, இம்மாதிரி abetting குற்றத்திற்காகத் தற்கொலை வழக்கில் தண்டனை வழங்கப்படுவது மிகவும் அபூர்வம்.

பேட்டி: **நாயகன்**

புகைப்படம்: **மன்னை மூர்த்தி**

MCA-NTC-631-TAM



புடவைகள்

தினப்படி உபயோகிக்கும் பருத்தி புடவைகள். துல்லியமாக நெய்யப்பட்ட பாலியஸ்டர் மற்றும் பாலியஸ்டர் கலப்பிழை புடவைகள். உங்கள் மனதிற்கேற்ற வகையில்

என்டைஸ்

சிறந்த ரகங்கள். சரியான விலை.

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன் (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
கோயம்புத்தூர்-641009

இன்டென்டிங் ஏஜன்டுகள்: (தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே ஜே என்டர்ப்ரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9 • செமி ஹோல்சேல் டிப்போ: மத்திய விநியோக டிப்போ, CS & W மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1 • என்டைஸ் செமிஹோல்சேல் டிப்போ, 208தம்பு செட்டித் தெரு சென்னை 1 • என்டைஸ் ஷோரூம்கள்: என்டிசி ஹவுஸ், கோயமுத்தூர் 9 • 'சரவண பவனம்' கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர் 12 • என்டைஸ் துணிகள் எல்லா என்டிசி ஷோரூம்களிலும் கிடைக்கின்றது.

அத்தியாயம் 10

மாப்பிள்ளை ராஜாமணியிடமிருந்துவிடை பெற்றுக்கொண்டு வெளியேறிய மல்லிகா, அர்ஜுனனைத் தேடினாள். புடவைக் கடையிலிருந்து திரும்பி வந்த பின் இன்னும் அவள் அவனைப் பார்க்கவில்லை. நடந்து வந்த அவள் மாடிப் படியை அடைந்தாள். அர்ஜுன் எங்கே?

திடீரென்று அப்பாவின் ஞாபகம் வந்தது. தன்னைச் சபித்துக் கொண்டாள். அன்று காலை அவரைப் பார்த்ததுதான். பிற்பகல் பன்னிரண்டரை மணிக்குச் சென்றபோது நடேசன் தூங்கிக் கொண்டிருக்கவே எழுப்ப மனமில்லாமல் திரும்பிவிட்டாள். போய்ப் பார்த்தால் என்ன? ஒருவேளை அர்ஜுனனும் அங்கே இருக்கக் கூடும்.

கார்டியாலஜி பிளாக்கிலிருந்து இறங்கி மெதுவாக நடந்தாள். மாலை வேளையின் கடைசி நிமிடங்கள். பார்க்க வந்திருந்த கூட்டம் தேர்த் திருவிழாவைப் பார்த்து விட்டுத் திரும்புவது போல தெரிந்தது. இவ்வளவு பேர்களா? ரயிலடியில் ஒரு ஆளை வழியனுப்ப ஒன்பது பேர்களென்றால், ஜி.ஹெச்.சில் ஒரு நோயாளிக்குக் குறைந்தது பதினைந்து பேராவது இருக்க வேண்டும்.

அப்பாவை வராந்தாவிலிருந்து பார்த்த போதே அவளுக்குக் கோபம் பீரிட்டுக் கொண்டு வந்தது. கட்டிலில் சப்பணமாக உட்கார்ந்து பச்சை வாழைப் பழத்தைத் தின்றுகொண்டிருந்தார். மடிமேல் ஒரு காகிதம். அருகே ஸ்டூலில் ஒரு அம்மாள். வயது ஏறக்குறைய அறுபது இருக்கும். இங்கேயும் ஜோசியமா?

அவள் அவர் அருகே சென்று நிற்பதை நடேசன் கவனிக்கவில்லை.

''அப்ப நல்ல ஜாதகம்னு சொல்றேன்!'' என்றாள் அந்த அம்மாள்.

''நான் சொல்லலே... இந்த ஜாதகம் சொல்றது... திரிகோணத்திலே பாருங்கோ.. புதன், சுக்கிரன், வியாழன்... சனியை எல்லாரும் நிந்திப்பா. ஆனா அவன்தான் அள்ளிக் கொடுக்கப் போறான்...''

அம்மா இன்னொரு வாழைப் பழத்தை நீட்ட அவர் வாங்கிக் கொண்டார்.

''நாளைக்கு ஆத்துக்காரரை அழைச்சுண்டு வரேன். உங்களைப் பார்க்கச் சந்தோஷப் படுவார்....''

''அவசியம் வாருங்கோ.''

அவள் ஒரு பத்து ரூபாய்நோட்டை எடுத்து நீட்டினாள்.

''நான் ஜோசியத்துக்குப் பணம் வாங்கிறதில்லே.''

''இது ஜோசியத்துக்காகன்னு ஏன் நினைக்கிறேள்? ஒரு கூடப் பிறந்த சகோதரி தந்தான்னு நினைச்சுக்குங்கோ...''

''அவா யாரும் இதுவரை தந்ததில்லே. தரவும் மாட்டார்கள்,''

''வாங்கிக்குங்கோ.. ஆத்திலேந்து முறுக்கு சீடையெல்லாம் நாளைக்குக்கொண்டு வரேன். ஆமாம், அது யாரு உங்க பின்னாலே ஒரு பெண் நிக்கறது?''

நடேசன் திரும்பினார்.

''என்ன மல்லிகா!... இவ என் பொண்ணு ஒரே பொண்ணு....மல்லிகா. இவா பேரு இவா பேரு.... என்ன சொன்னேள்?''

''பாகீரதி ராமனுஜன்.''

''ஆமாம்... பாகீரதி ராமனுஜன்... ஒரே பிள்ளை.... அமெரிக்கா போறான்... மூணு மணிக்கு ஒருவனுக்குக் கை பார்த்துண்டிருந்தப்போ இவா வந்தா.''

''உங்க அப்பா மெட்ராஸ்லே போர்டு மாட்டிண்டு உட்கார்ந்தாப் போதும், பொண்ணே, தினசரி நூறு நூத்தம்பதுன்னு வரும். உடம்பைப் பார்க்கிற டாக்டர்களைவிட அதிகம் சம்பாதிக்கலாம்... ஆனா என்ன செய்யறது கொள்கை இடிக்கிறது. நான் வரட்டுமா சார்?''

''வாங்கோ.''

''இன்னும் பத்துப் பதினஞ்சு பொட்டலம் இருக்கு. ஆசார்ய சுவாமிகளுக்கு நாம வேற என்ன கைங்கரியம் செய்ய முடியும்? கொடுத்துட்டுப் போறேன்.... வீட்டிலே ஆயிரம் வேலை இருக்கு... வரட்டுமா?''

''வாங்கோ.''

''வரேண்டி பொண்ணே... உன் பேர் என்னன்னு சொன்னே?''



''மல்லிகா.''

''தங்க விக்ரகம் மாதிரி இருக்கே...''

மல்லிகா பதில் சொல்லவில்லே.

''இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டா அப்புறம் இந்தக் கட்டை புகைஞ்சாலும் பாதகமில்லே, எரிஞ்சாலும் பாதகமில்லே!'' என்றார் நடேசன்.

''நீங்க பெரிய ஜோஸியர். உங்க பொண்ணுக்கு வியாழ பலன் எப்ப வர்றதுன்னு உங்களுக்கா தெரியாமலிருக்கும்?''

''சொந்த வைத்தியம் தப்புன்னு சொல்லுவா. அதுமாதிரித்தான் வீட்டிலே உள்ளவா ஜாதகங்களைப் பார்க்கிறதும்... எனக்கென்னவோ இவளுக்கு வெகு சீக்கிரம் ஆயிடும்னு படறது...''

''அப்ப அவ ஜாதகம் பார்த்திருக்கேன்?''

''கணிச்சதே நான்தானே... மனசு வேற எதை நினைக்கும்....''

''நான் வரட்டுமா? நாழியாறது. இன்னும் பத்துப் பதினஞ்சு பொட்டலம் பாக்கி இருக்கு. ஆசார்ய சுவாமிகளுக்கு...''

''என்ன மாமி, குங்குமம் வரலேயே இன்னும்... என் அப்பா காத்துண்டிருக்கார்!''



திடீரென்று வந்த குரலில் நடேசனும் மல்லிகாவும் அயர்ந்து போய்ப் பார்த்தார்கள்.

''இதோ போறேம்ப்பா!'' என்று மாமி புறப்பட்டாள்.

''யார் அவன் அர்ஜுன்?'' என்றாள் மல்லிகா.

''பாகீரதி. ஏழெட்டு வருஷங்களா ஒரு வெறியோட சோஷியல் ஒர்க் நடத்தறு. இப்ப ரிலிஜியஸாகவும் மாறிட்டா. உங்களுக்குப் பழம் கொடுத்திருப்பாளே?''

''உம்...'' என்றார் நடேசன்.

''பழம் திங்கலாமா? பச்சை வாழைப் பழத்திலே புழு இருக்கும்!'' என்றாள் மல்லிகா.

''என் வயத்திலே பாம்பு, தேள் எல்லாமே இருக்கு...'' என்றார் நடேசன்.

''அது சரி, ஜீ. ஹெச்லே எதுக்கு ஜோஸியமும் ஆருடமும்... இதைப் பாருங்கள் அர்ஜுன்! அந்தப் பாகீரதி ராமனுஜன் பத்து ரூபா நோட்டை வீசிட்டுப் போயிருக்கா.''

''நான் வேண்டாம்னேன்.''

அர்ஜுன் சிரித்தான்.

''நிறைய இருக்கு. கொடுக்கிறு. வாங்கிண்டா என்ன தப்பு... ஹங்... நடேசன் சார், எனக்கு ஒரு ஐடியா!''

''என்னப்பா?''

''நல்ல இடமாப் பார்த்து தரேன். ஒரு போர்டும் எழுதி மாட்டறேன்... ஹிந்து, தினமணி, தினத்தந்தி எல்லாத்திலேயும் விளம்பரம் செய்யறேன்... நீங்க ரெடியா?''

''இத்தனை காலமா....''

''உங்க கொள்கையை வெளியே போறப்ப பக்கிங்ஹாம் கால்வாய்லே போடுங்கோ... அது பிடிக்கலேன்னு, கூவம் இருக்கு. மனுஷா வர ஆரம்பிச்சாங்கன்னு உங்களாலே தாங்க முடியாது. டோக்கன் கொடுத்துத்தான் ஒவ்வொருத்தராக வரவேண்டியிருக்கும்... என்ன சொல்றேன்?''

''அப்பா வைத்தியம் பார்த்துக்க மெட்ராஸ் வந்தாரா இல்லே ஜோஸிய வியாபாரம் நடத்தவா?''

'' அப்புறம் யோசிக்கலாம். அர்ஜுன். பூனையை மடிமேலே வெச்சுண்டு சகுனம் பார்க்கிற மாதிரி, இவளே வைச்சுண்டு...''

''ஐயரே!''

நடேசன் பார்த்தார்.

''என்னப்பா?''

''நாளைக்கு நம்மை ஆட்டுக்கு அனுப்பறுங்க.''

''சந்தோஷம்ப்பா...''

''கால்லே நடந்ததை மனசிலே வச்சுக்காதே... இன்னு செய்யறது... பிடிப் புகை உன் மூஞ்சிலே அடிச்சுடுத்து....''

''நான் சொன்னபடி செய்.''

''பின்னே... நம்ப ஆட்டுப் பொம்பளே எப்படின்னு நீ நினைக்கிறே? ஐயர் சொன்னார்னு சொன்னாப் போதும். பொங்கல் போட்ட அரிசி



"என்ன இருந்தாலும் என்னுடைய வீட்டுக் காரருக்கு ஞாபக மறதி அதிகம்"
"ஏன் என்ன விஷயம்?"
"டோப்பாவைப் போட்டுக் கொண்டே சலூனில் முடி வெட்டிக் கொண்டு விட்டார்"
- பிரியா பாலு


எடுத்திடுவோ... ஆமாம். இவங்க யாரு. உன் போலவும் மருமகனுமா?"
மல்லிகா தலை குனிந்தாள்.
நடேசன் மென்று விழுங்கினார். இருவரும் அறியாமல் அர்ஜுனன் அவளுக்குக் கண் ஜாடை செய்தான்.
"நல்ல ஜோடி, சாமி."
"வந்து...." நடேசன் இழுத்தார்.
"அதோ டாக்டர் வரார்."
அர்ஜுனன் விடுத்த எச்சரிக்கை உடனடியாகப் பலன் அளித்தது. கால் முறிவுக் கேஸ் தன் கட்டிலுக்கு ஓட, நடேசன் ஆரம்பித்த வார்த்தை நின்றது.

"கார்த்தாலே இவன்தானே உங்களைத் திட்டினான்?" என்றாள் மல்லிகா.
"மெச்சகப்புருவென்னுவன்" என்றான் அர்ஜுனன்.
"மத்தியானமே ராசியாயிட்டோம்... பாவம், நல்ல மனுஷன். இந்தக் காலை வைச்சண்டு ரொம்ப தூரம் நடந்து போய் ஒரு காப்பி வாங்கித் தந்தான். காசு கொடுத்தேன். வாங்கிக்கலே..."
"கை ரேகை பார்த்திருப்பேன்" என்றாள் மல்லிகா.
"ஆமாம்!"
"அப்பா!"
"என்ன மல்லிகா!"
"ராத்திரி பூரா ரயில்லே ஹரா ஹரான்னு கத்தி ஊரைக் கூட்டினீங்க. ஜோலார்ப் பேட்டையில் இறங்கிடலாம்னு கூட ஒருத்தர் ரெண்டு பேர் சொன்னாங்க. இப்ப இப்படி இருக்கீங்க... எனக்கு ஒண்ணும் புரியலே..."
"ஜி. ஹெச். ராசி" என்றான் அர்ஜுனன். பிறகு, "மல்லிகா வா போகலாம்" என்றான்.
"எங்கே?" என்றார் நடேசன்.
"என் வீட்டிலே தங்கட்டும்."
"உன் வீட்டிலேயா?"
"மெட்ராஸ்லே வீடு இருக்கும்னு தெரியும் இல்லையா?"
"வீடா அது?"
"பின்னே?"
"பங்களா.... அதுக்காகத்தானே உன் அண்ணு உன் அப்பா இட்டே மன்னுக்கு நிக்கறான்.... அது சரி. என் பொண்ணுக்கு என்ன பாதுகாப்பு?"
"ஜி. ஹெச்சிலே அது இருக்குன்னு நினைக்கிறீர்களா?"
"சிந்தாதிரிப்பேட்டையிலே எங்க சொந்தக்காரா...."
"பயப்படாதீங்க... மாப்பிள்ளை ராஜா மணியின் குடும்பம் நல்ல குடும்பம்... வீட்டிலே சமையல்காரி இருக்கா... அஞ்சாறு நாளிலே அம்மாளும் வரப்போறா..."
"இருந்தாலும்.... சரிசரி... மல்லிகா.. நீ என்ன சொல்றே?"
"அதான் அவரே எல்லாம் சொல்லியாகி விட்டதே... போவோமா? வரேன் அப்பா... இனிமே பச்சை வாழைப் பழம் சாப்பிடாதீர்கள்."
வராந்தாவுக்கு வந்ததும் 'மல்லிகா. நீ மெதுவா நடந்து வா... நான் அப்பாவைப் பார்த்து ஒரு அவசர சலாம் போட்டுட்டு வந்துடறேன்" என்றான் அர்ஜுனன்.
"சரி."
அர்ஜுனன் விரைந்தான்.

அடுத்த ஏழெட்டு நாட்களாக அம்மாவின் நச்சரிப்பைப் பாமாவால் தாங்கிக்க முடியவில்லை. கோபிச் செட்டிப்பாளையம் மாப்பிள்ளை ராஜாமணி பல லட்சங்கள். பின்னே அர்ஜுனன். அவன் அம்மாவுடன் டெலிபோன் மூலம் பேசக, பெண் பார்க்க ஏற்பாடு. சே, என்ன அநாகரிக உலகம்...!
பாமா இன்னும் பார்த்திராத அர்ஜுனனை மனத்தில் உருவம் தீட்டிக் கொண்டே காரை நிறுத்தி, கதவைப்பூட்டி, ஜி. ஹெச்சுக்குள் பிரவேசித்தாள். டாக்டர் லலிதா சரியாக ஆறரை மணிக்கு வரும்படி கூறியிருந்தாள். ஏழரை மணிக்கு ஹோட்டல் அசோகாவில் டின்னர். அவளும் அமெரிக்காவில் இருந்தி ரா... லலிதாவும் போயே ஆக வேண்டும்.
அவள் சென்றபோது லலிதா தயாராக இல்லை. ஒரு எமர்ஜன்ஸியைக் கவனிக்க வேண்டி இருந்தது. இன்னும் முக்கால் மணி நேரமாவது ஆகும்.
என்ன செய்வது?
ஜி. ஹெச்சின் தலைவர்—சூப்பிரண்டெண்ட் அறைக்குள் எட்டிப்பார்த்தாள். அவள் புதிதாக வந்திருக்கும் ஒரு டாக்டர் என்று பியூன் நினைத்திருக்க வேண்டும். கேள்வி கேட்கவில்லை.
"இல்லையா?"
"அப்பவே போயிட்டாங்களே!"
"சரி. எய்த் வார்ட்லே டாக்டர் லலிதா இருக்காங்க. நான் இங்கே இருக்கிறதாச் சொல்லிட்டு வந்திருக்கேன்...."
"சரிங்கம்மா."
"பக்கத்திலே கூல் ட்ரிங்க் கிடைக்குமா?"
"ஓ".
"ஒரு டபுள் செவன் ஆரஞ்சு வாங்கிண்டு வா."
பாமா இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினாள்.
அவன் போனபிறகு திடீரென்று பொழுதே நின்றுவிட்டதான பிரமை ஏற்பட்டது. சுற்று முற்றும் பார்த்தாள். சுவர்களை யெல்லாம் அளந்தாள். அப்பப்பா, எவ்வளவு பெயர்ப் பலகைகள்! தகவல்கள்!
ஒரு பலகையைப் படித்தாள். ஜி.எச். ஸின் சூப்பிரண்டண்டாகப் பதவி வகித்தவர்களின் பெயர்கள்.
முதல் பெயர்
லெப்டினண்ட் கர்னல் வில்லியம் இவான்ஸ் 1858—59.

ரீட்ரெடிங் தொழிலகங்களே!

சைரப்பர் க்யூரிங் காற்றுப்பைகள் உபயோகித்து அதிக லாபம் பெறுவீர்.



சைரப்பர் க்யூரிங் காற்றுப் பைகள் டயர்களை புதுப்பிக்கும் பணியில் கணிசமான பலன்களை அளிக்கின்றன.

அகில உலகத் தர நிர்ணய நியதிக்குட்பட்ட தயாரிப்பு.

மிகச் சிறந்த கலவைப் பொருள்களினும் தயாரிக்கப்படுவதினும் அதிகமான உஷ்ணத்தையும் இடைவிடாத உபயோகத்தினையும் தாங்க வல்லவை.


பல்வேறு சீதோஷ்ண நிலைகளையும் ஈடு கொடுக்கிறது. மிகவும் நுண்ணிய சோதனைக் கட்டங்களை ஏற்று தரத்திற்கும் நீடித்த உழைப்பிற்கும் தகுதிபெறும் அளவில் சிறந்த உபகரணமாகத் திகழ்கிறது.

மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்த முடிவதால் பல தடவைகள் டயர்களை புதுப்பித்துக்கொள்ள உதவுகின்றன.

SIRUBBER

சைரப்பர்
க்யூரிங் காற்றுப்பைகள்

VSK 94



தரத்திலும் சேவைச் சிறப்பிலும் நிறுவனத்தின் பாரம்பரியம்.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை,
மதுரை - 625 016

அவருக்குப் பிறகு இந்த நூற்றிருபது வருடங்களில் எத்தனை பேர் வந்து போயாகி விட்டது.

மீண்டும் பார்த்தாள்.

அவள் பார்வை பல ஆங்கிலேயர்களை விழுங்கிவிட்டு இந்தியரின் பெயரில் நின்றது.

லெப்டினன்ட் கர்னல் சௌத்ரி. தேவிகா ராணியின் அப்பாவாம், லலிதா சொல்லியிருக்கிறாள்.

யார் அவர்?

ஜீ.எச்.சின் முதல் இந்திய சூப்பிரண்டெண்ட்? பாமா அரவம் கேட்டுத் திரும்பினாள்.

டபுள் செவன் ஆரஞ்சு. எழுபது பைசாவை மேஜை மீது வைத்தான்.

''ஒண்ணேகால்தானே?''

''ஆமாம். ஆறு ஒண்ணு முப்பது வாங்கிட்டான்.''

''ராஸ்கல். ஏமாத்திட்டான். ஊரெல்லாம் ஒண்ணேகால் இருக்கிறப்போ இவன் எப்படி... சரிசரி... இந்த எழுபதை ஏன் என்கிட்டக் குடுக்கிறே... நீ எடுத்துக்கோ....''

''தாங்க்ஸ்.''

''ஏம்ப்பா எடுத்துக்கக் கூடாதா?''

''பழக்கம் இல்லே....''

''ஆச்சரியமா இருக்கே.''

''பொய்யும் பித்தலாட்டமும், லஞ்சமும் இருந்தாத்தான் நீங்க ஆச்சரியப்பட மாட்டீங்க போலிருக்கு....''

''படிச்சிருக்கியா?''

''பத்தாங் க்ளாஸ்.''

''என்ன சம்பளம்?''

''ஏதோ தேவைக்குக் கிடைக்கிறது.''

''அதான் டிப்ஸ் வேண்டாம்னு சொல்லிட்டியா?''

''சில்லறை வாங்கறது ஒரு நோய் மாதிரி. பழக்கம் மாதிரி.... போதைப் பொருள் மாதிரி....''

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

பீதாம்பரம்: ''உங்க மகனுக்குக் கொடுக்கிற பாக்கெட் மணியைக் குறைச்சிட்டீங்களா...?''

அவர்: ஏன் கேட்கிறே?

பீதாம்பரம். வழக்கமா நம் கடையில் சிகரெட் வாங்குகிறவன் நாலைந்து நாளா பீடி வாங்கிட்டுப்போறான்!' -க., ராஜாஜி



''என்னை விட்டுவிடப்பா.''

''பாட்டில் தர்றீங்களா?''

''இதோ....'' மடக் மடக்கென்று குடித்து விட்டுக் காலி பாட்டிலை நீட்டினாள்.

''ஒன் மினிட்....''

''என்னம்மா?''

''லலிதா வர இன்னும் அரை மணி நேரம் ஆகும்.''

''அதுக்கு?''

''கோபிச்செட்டிபாளையத்திலிருந்து ஒரு பெரிய பணக்காரர் வந்திருக்கார்.''

''யாரு, மாப்பிள்ளை ராஜாமணிங்களா?''

''ஆமாம். அவரைப் பத்தி ஏதாவது தெரியுமா?''

''அவர் மந்திரி, எம். எல். ஏ., எம். பி.க்கெல்லாம் தோஸ்து. கார்டியாலஜியிலே இருக்கார்.''

''பார்க்கணுமே.''

''கூட வாங்க.''

''அவர் மட்டும்தான் இருக்காரா...''

''கூட அவர் பிள்ளையும் இருக்காரு. ஆனா இந்த வேளையிலே ராஜாமணியைப் பார்க்க வேண்டாம்னு தோணுது.''

''ஏன்?''

''விரும்ப மாட்டார்.''

''ஏன்?''

''உங்க இஷ்டம்.''

பாமா பிடிவாதமாக அவனைப் பின் தொடர்ந்தாள்.

கார்டியாலஜி பிளாக்கில் அவளை விட்டு விட்டு ப்யூன் செல்ல, அவள் மாடி ஏறினாள்.

ஒரு பெண் வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள்.

''மிஸ்டர் ராஜாமணி எந்த அறை?''

''அதோ அந்தக் கடைசி.''

''தாங்க்ஸ்.''

பாமா அறையை அடையவும் உள்ளே இருந்து ஒருவன் வெளியே வரவும் சரியாக இருந்தது.

''மிஸ்டர் ராஜாமணி இன்?''

''யெஸ். இன். பட் ஹி வோன்ட் லைக் டு சீ எனிபடி.''

''ஓ?''

''ஹூ ஆர் யூ? ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல்?''

''ஹூ ஆர் யூ?''

''ஐ'ம் ஐ.... ப்ளீஸ் டோன்ட் டிஸ்டர்ப் ஹிம்... ஸிஸ்டர்... ஸிஸ்டர், இவங்க அவரைப் பார்க்கணும்னு நிக்கறாங்க...''

''நாளைக்கு வாங்கம்மா!'' என்றாள், அருகே வந்த நர்ஸ்.

''என்ன அர்ஜுன், போவோமா?'' என்று கேட்டவளாய் மல்லிகா வந்தாள்.

''தாங்க்ஸ் ஸிஸ்டர்!'' என்றாள் பாமா.

''யூ ஆர் வெல்கம்... மல்லிகா ரொம்ப ஸாரி. நடுவிலே ஒரு லெவல் க்ராஸ் கேட்.''

''மிஸ்டர் யூ தோ ஹூ ஐ ஆம்?'' என்றாள் பாமா.

''நாட் இன்டரஸ்டட் நௌ...''

அவர்கள் இருவரும் போன பின் பாமா அங்கேயே நின்றாள். கோபத்தில் கண்கள் வலித்தன. (தொடரும்)

ஸ்ரீ:



ஸ்ரீ

ஸ்ரீ சுந்தரபரிபூர்ணாய நம: ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ குருகை முநயே நம:

1. "திருக்குறுங்குடி" என்னும் வைணவத்தலம், பாண்டிய நாட்டு பதினெட்டு திருப்பதிகளில் மிகத்தொன்மையானது. இத்தலம், திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரி தாலுகா மகேந்திரகிரி மலைச்சாரலில், நம்பியாற்றின் கரையில் அமைந்துள்ளது. இங்கு கோவில் கொண்டெழுந்திருக்கும் எம்பெருமானை "அழகிய நம்பி" என்றும், "சுந்தர பரிபூர்ணன்" என்றும் "நம்பி நாராயணன்" என்றும் பாரத தேசத்தில் பல பாகங்களில் உள்ள பக்தர்கள் அழைக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமி அழகிய நம்பியானவன் ஐந்து நிலைகளில் சேவைசாதித்து வருகிறான்.

2. இத்தலத்தின் பெருமையை ஸ்ரீவராஹ புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கைசிக விருத்தாந்தம் இக்கோவிலின் பெருமையைக் கூறுகிறது.

3. முறையே நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நால்வரால் மங்களா சாஸனம் செய்யப்பெற்ற தலம்.

4. "தக்ஷிண பத்ரீ" என்றும் "வாமன குடி" என்றும் இத்தலத்துக்கு சிறப்புப் பெயர்கள்.

5. ஸ்ரீஸ்வாமி நம்மாழ்வாராக திருவவதாரம் செய்தவன் இத்தலத்து நம்பியே!

6. ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட, மகேந்திரகிரிநாதன் என்ற பெயருடன் சிவபெருமான், அழகிய நம்பியின் பக்க நின்றவராக எழுந்தருளியிருக்கிறார்.

7. ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் வீடு பெற்றதும் இத்தலத்திலேயே!

8. வைணவ ஆச்சார்யர்களான ஸ்ரீ ஸ்வாமி ராமாநுஜர், ஸ்ரீமணவாளமாமுனிகள் இங்கு எழுந்தருளி மங்களா சாஸனம் செய்தருளியிருக்கிறார்கள்.

9. திருப்பாவை முப்பதையும் அருளிச் செய்த ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரத்துக்கு கைசிக விருத்தாந்தமே காரணம் என்பர்.

10. இக்கோவிலில் சேர, சோழ பாண்டிய மன்னர்களாலும் விஜயநகர மன்னர்களாலும் நாயக்க மன்னர்களாலும் திருப்பணி பல செய்யப்பட்டுள்ளன.

11. ஸ்ரீராமாநுஜரின் வழித்தோன்றல்களான திரு ஜீயர் மடம் மடாதிபதிகள் ஸ்ரீஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமிகளால் அநேக மண்டபங்கள் திருப்பணிகள் முதலானவைகள் செய்து பேணப்பட்டிருக்கின்றன.

12. சித்திர கோபுரத்திலும் கோவிலுக்குள்ளும் மரத்தாலும் கல்லாலும் வடிக்கப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் மலிந்து கிடக்கின்றன. பார்க்க பரவசமூட்டுபவைகள்.

13. இச்சீரும் சிறப்பும் பெற்ற இத்திவ்ய தேசத்தில் ஸ்ரீஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் நியமனப்படி திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 26-6-80 அன்று பாலாலயம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

14. வருகிற தை மாதத்தில் (ஜனவரி 1981) மகா ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டுமெனத் திருப்பணிக் கமிட்டியார் நிர்மானித்திருக்கின்றனர். நாட்களோ மிகக்குறைவு. திருப்பணிகளோ நிறைந்துள்ளன. ஆகவே இத்தலத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து இச்சிறிய திருப்பணி குறைவின்றி நிறைவேற இவ்வரிய வாய்ப்பினை பக்தர்கள் பயன்படுத்திக் கொண்டு நிதி உதவி செய்து இக் கைங்கர்யத்தை சீரும் சிறப்புடன் நடத்தி வைத்து திருக்குறுங்குடி வாழ்மாமன் குரைகழற்கு ஆளாகி பெருங்குடியாக வாழவேணுமென இறைஞ்சி நிற்கிறோம்.


இங்ஙனம்

ஸ்ரீஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் மடாதிபதிகள் நியமனப்படி


தலைவர் மற்றும் அங்கத்தினர்கள்

ஸ்ரீ ஸ்வாமி அழகிய நம்பிராயர் திருப்பணிக்கமிட்டி, திருக்குறுங்குடி

N. B. 1. நன்கொடைக்கு வருமானவரி விதிவிலக்கு உண்டு 2. நன்கொடை அனுப்புபவர்கள் "**செயலாளர் & பொருளாளர், ஸ்ரீஸ்வாமி அழகிய நம்பிராயர் திருப்பணிக்கமிட்டி** திருக்குறுங்குடி-627 115 தமிழ்நாடு என்ற முகவரிக்கு டிராப்ட், செக், மணியார்டர் அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 3, Bank, Canara Bank, Tirukkurungudi - 627 118



பாலு வெகு சீக்கிரமே கட்டிப்போடப்பட்டான்.
டேய் பாலு! என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா?
007 பாலு
கதை: குமரன்
படம்: விஜு
10
பசுவப்பா! என்னை என்ன மடையன்னு எண்ணினீங்களா?
டைகரின் ஊளைச் சத்தம் என்னைத் தூங்கவிடலை. அப்புறம் ஏதேதோ சத்தங்கள்.. விளக்கும் எரியலே சந்தேகம் எழுந்தது..... டைகர் குரைக்கக் கேட்டு உஷாராயிட்டேன்! துப்பாக்கியோடு வந்துட்டேன்! எப்படி என் சாமர்த்தியம்!
நான் வீட்டிலே எல்லாரும் தூங்கின பிறகுதான் நழுவினேன். ஆனா உங்களோட இந்த இரண்டு வீட்டு விலாசங்களையும் தரும் கடிதத்தை போலீஸ் கமிஷனருக்கு எழுதி தபாலில் சேர்த்துட்டுத்தான் வரேன். நாளை நான் வீடு திரும்பலேன்னா போலீஸ் பட்டாளம் இங்கே வந்துடும்! எப்படி என் திறமை!
ஹஹஹா... ஹி.. ஹி.. ஹி.. அசடே! நீ இதை என்னிடம் சொல்லலாமா? நீ பெருமை அடிச்சுக்கிட்டது எனக்கு வசதி! இப்ப நான் முன் எச்சரிக்கையா காரியம் செய்யலாம்!
டேய்! காத்தவராயா! சிங்காரம்! ரெண்டு பேரும் லீவு வேணும்னு கேட்டீங்களே; சொந்த கிராமத்துக்குப் போய் ஒரு மாசம் இருங்க. திரும்பியதும் ஃபோன் பண்ணி என் குரல் கேட்ட பிறகு இங்கே வாங்க!
நல்லது முதலாளி



ஞாபகமா எம்.எஸ்.பி. 5443 வேனை எடுத்திட்டுப்போயிருங்க நீங்களோ அதுவோ போலீஸ் கண்ணில் படப்படாது!
என்னை என்ன செய்யப் போறீங்க?
நாளைக் காலை ஃப்ளைட்டிலே நாம் பம்பாய்க்குப் போகிறோம், பாலு!
தாங்க்யூ! எனக்கு விமானத்திலே பறக்கணும்னு ரொம்ப நாளா ஆசை!
போலீஸ் இங்கே வரும்போது இரண்டு வீடும் பூட்டியிருக்கும் ஒரே ஒரு தோட்டக்காரனும் ஊமையாயிடுவான். ஏமாந்து திரும்புவாங்க! ஹ ஹ ஹ ஹா!
விமானத்திலே நீங்க துப்பாக்கியோடு ஏற முடியாது. ஸெக்யூரிடி செக் உண்டு. ஏறுமுன்னரோ இறங்கிய உடனேயோ உங்களிடமிருந்து நான் தப்பி விட வாய்ப்புண்டு!
தப்ப நினைக்க மாட்டே தம்பி! சொன்னபடி கேட்பே! ஏன்னா, லீவிலே போகிற இவங்க கடைகரைப் பின்னாடி கட்டி இழுத்துக்கிட்டுப் போவாங்க. அதுக்கு உயிர் ஆபத்து நேர்வதை நீ விரும்பமாட்டே!
தொடரும்

இல்லத்தரசிகளே!

உங்கள் எல்லாவித சலவை செய்யும் பிரச்னைகளுக்கு சரியான பதில் இதோ





போட்டிக் கதை 5

வெகுமதி

— கலியாண வெங்கடேசன்

அரசாங்க வக்கீல் சந்திரன் எழுந்தார்.

''யுவர் ஆனர்! பாகனேரி கொலை வழக்கு என்று பிரபலமடைந்த இந்த வழக்கு விசாரணையில் இதுவரை அரசாங்கத் தரப்பில் எண்பது சாட்சியங்கள் குற்றவாளிதான் கொலைகளைச் செய்தவர் என்று ஐயம் திரிபற எடுத்துக்காட்டப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டது. குற்றவாளியின் சார்பில் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட சாட்சியங்கள் மொத்தம் நான்கு. அவையும் குற்றவாளியின் சமீப கால நண்பர்கள் ஆதலால் குற்றவாளிக்குச் சாதகமாகப் பயன்படவில்லை. இருந்த போதிலும் அரசாங்கத் தரப்பில் நடத்திய என் வாதத்தின் சுருக்கத்தை எடுத்துக் கூற அனுமதி தர வேண்டுகிறேன்.''

''எஸ், புரசீட்!'' — நீதிபதி தலையசைத்தார்.

''1974ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் தேதி, மாலை மணி ஏழு இருக்கும். வானம் மப்பும் மந்தாரமுமாய், மாலைப் பொழுதின் இனிமையைக் கெடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டாற் போன்று மையிருட்டைக் கூட்டிக் கொண்டு மழை பொழிய வேண்டிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது.''

நீதிபதி மனத்துக்குள் சிரித்துக் கொண்டார். அரசாங்க வக்கீல் சந்திரன் தான் ஒரு எழுத்தாளரும் கூட என்பதை எல்லோருக்கும் எடுத்துக் காட்டும் முயற்சியைக் கண்டுதான்.

நடந்த சம்பவத்தையும், கிட்டத்தட்ட ஒரு வருடமாக நடைபெற்ற வழக்கையும் ஓர் அழகான கோவையான மாலையாகத் தொடுத்துக் குற்றவாளியின் கழுத்தில் போட்டு அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்பும் பணியினை, கடமை என்ற பெயரால் சொற் ஜாலங்களைக் கூட்டிச் செய்து கொண்டிருந்தார் மிஸ்டர் சந்திரன்.

நீதிபதி பைல்களைப் புரட்ட ஆரம்பித்தார். எவ்வளவு பயங்கரமான பச்சைப் படுகொலைகள். நினைப்பதற்கே பயங்கரமான இந்தக் கொலைகளைச் செய்ததாகச் சொல்லப்படும், குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இளைஞன் சண்முகத்தையும் இடை இடையே பார்த்துக் கொண்டார்.

வழக்கு ஆரம்பத்திலிருந்து ஒரு முறை கூடப் பேசவில்லையே இந்த இளைஞன். இவனா செய்தான் இந்தப் படுகொலைகளை?

நீதிபதி வழக்கைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்தார்.

மிராசுதார் நாகரத்தினம் பாகனேரி வட்டாரத்தின் பெரிய புள்ளிகளில் ஒருவர் என்று சொல்லும்படி பிரபலமடைந்த பணக்காரர். மனைவி, இரண்டு குழந்தைகள் என்ற அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய குடும்பம். மூத்தவனுக்கு 12 வயது இருக்கும். இளையவனுக்கு வயது ஏழு. மனைவி கனகத்துக்கு வயது 28. ஆனாலும், 20 வயதுக்கு மேல் மதிப்பிட முடியாதபடி கட்டான உடல். ஏன் நாகரத்தினம் கூட அப்படித்தான். வயது 35 ஆனாலும் இன்னும் கல்லூரி மாணவர் மாதிரி 'பெல்பாட்டம் சிலாக்கும்'தான் அணிவார்.

அவர்கள் குடும்பத்துக்கும் எதிரி ஒருவன் இருப்பான் என்று யாரும் கற்பனைகூடப் பண்ணியிருக்கமாட்டார்கள், அவர்கள் குடும்பமே படுகொலை செய்யப்படும்வரை.

ஒரு நாள் தோட்டக்காரன் முத்தையா தன் வேலைகளை முடித்துக் கொண்டு கார் ஷெட்டுக்குள் நுழையும்போது ''அப்பா, அம்மா' என்று குழந்தைகள் பயங்கரமாகக் குரல் எழுப்புவதைக் கேட்டுப் பங்களாவுக்குள் விரைந்தான்.

அவன் அங்கு கண்ட காட்சி ரத்தத்தை உறைய வைப்பதாக இருந்தது. நாகரத்தினமும், அவர் மனைவியும் கட்டையால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தனர். சிறிது தள்ளி ரேழியில் குழந்தைகளுக்கும் அதே கதிதான். முத்தையா கேட்ட சப்தம் தான் குழந்தைகளின் கடைசிக் குரல்! ரேழி பூராவிலும், சுவரிலும் தரையிலும் ரத்தம் கட்டி கட்டியாகச் சிதறிக் கிடந்தது.

திக்பிரமையடைந்து அப்படியே அசைவற்று நின்றுவிட்டான் முத்தையா. அப்பொழுது வாயிற் கேட்டை நோக்கி யாரோ ஓடுவது போல் தெரிந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பாய்ந்து வெளியே வந்தான். அதற்குள் அந்த உருவம் கேட்டைத் தாண்டித் தெருவில் வடக்கு நோக்கி

ஓட ஆரம்பித்தது. ''கொலை.:. கொலை..: ஓடுகிறான்!... பிடியுங்கள்!...'' பிடியுங்கள்!' என்று முத்தையா ஓங்கிக் குரல் கொடுத்தான். சத்தம் கேட்டு வந்த ஜனங்கள் ஓடிய இளைஞனைப் பிடித்து விட்டார்கள். அவன் உடலெங்கும் ரத்தம். பாதிப் பேருக்கு விஷயம் என்னவென்று சரியாகத் தெரியாது. ஏதோ சாதாரணத் திருடன் என்று நினைத்துத் தர்ம அடி கொடுக்க ஆரம்பித்தார்கள். முத்தையா அரை குறையாக உளறிக் கொட்டியது அவர்களுக்குப் புரியவில்லை.

மறுநாள் காலை விடிந்தவுடன்தான் அந்தப் பயங்கரம் அவர்களுக்குத் தெரிந்தது. ஒரு வாரத்துக்கு அந்த ஊரில் தெருவில் நடப்பதற்கே பயமாக இருந்தது.

அவரவர்களுக்குக் கற்பனையில் எட்டிய காரணங்களை மற்றவர்களுக்குக் காதோடு காதாகக் கிசுகிசுத்தார்களே ஒழிய, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொல்லத் தைரியமில்லை.

எல்லோருக்கும் தோன்றிய கற்பனை இது: மிராசுதார் மனைவி கனகத்துக்கும், இளைஞன் சண்முகத்துக்கும் கள்ளத் தொடர்பு; மிராசுதார் அதைக் கையும் களவுமாய்ப் பிடித்தவுடன் ஏற்பட்ட தகராறில் குறுக்கே விழுந்த கனகத்தையும் நாகரத்தினத்தையும் கட்டையால் அடித்துக் கொலை செய்து விட்டான் சண்முகம். பிறகுஇரத்த வெறி ஏற்பட்டு அதே கட்டையால் குழந்தைகளையும் கொன்றுவிட்டான்.

கிட்டத்தட்ட வழக்கின் போக்கும் இப்படித்தான் இருந்தது. ஆனால் சில மாறுதல்களுடன். சண்முகம் கொன்னை அடிக்க வந்ததாகவும் ஜோடித்திருந்தனர். கனகத்திற்கும் அவனுக்கும் தொடர்பிருப்பதாகச் சொல்லுமளவுக்குச் சாட்சியங்கள் இல்லாமையால் அந்தப் 'பாயிண்டை' அவர்களே எடுக்கவில்லை. ஆனால் அந்த இளைஞன் அடிக்கடி வீட்டைச் சுற்றிக் கொண்டிருந்ததாகவும், கனகத்தின் மேல் ஆசை வைத்து அவளைக் கற்பழிக்க முயலும்போது நாகரத்தினம் வந்தவுடன் கையில் கிடைத்த கட்டையால் அவரை அடித்திருக்கிறான். கனகம் சிறிது எதிர்த்தவுடன் அவளையும் அதே கட்டையால் கொன்றிருக்கிறான். பிறகு வெறிபிடித்து எதிர்ப்பட்ட குழந்தைகளையும் கொன்று விட்டான்.

இதில் எவ்வளவு தூரம் உண்மை என்று ஒருவாறு தெரிந்திருக்கும் குற்றவாளி பேசியிருந்தால். ஆனால் அதில்தான் ஆச்சரியம். வழக்கு ஆரம்பத்திலிருந்து அவன் மௌன விரதம்தான். ஆனாலும் நீதி மன்றம் அவன் பக்கம் ஒரு வக்கீலை அமர்த்திக் கொடுத்தது. ஆனால் அவர்தான் என்ன செய்யமுடியும்? இவன் ஏதாவது வாய் திறந்து சொன்னால் தானே? நீதிபதியும் இவனைப் பேசவைக்க எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஊஹூம்... ஒன்றும் நடக்கவில்லை. ஏனோ தானோவென்று வழக்கு குற்றவாளியின் சார்பில் நடைபெற்றது.

நீதிபதி, சண்முகத்துக்குத் தூக்கு என்று சொல்லுமுன்பே எல்லோருக்கும் அது தெரிந்ததுதான். ஆனால் சட்டப்படி சொல்வதற்கு ஒரு வருடம் தேவைப்பட்டது. அவ்வளவுதான்.

நீதிபதி பைலின் கடைசிப் பக்கத்தைப் படித்து முடிப்பதற்கும் அரசாங்க வக்கீல் தம் வாதத்தை முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

''ஆகவே, குற்றவாளி இரக்கமில்லாமல் அரக்கத்தனமாகச் செய்த இந்தக் கொலைகளுக்கு உயர்ந்தபட்சத் தண்டனை வழங்கி நீதியை நிலைநிறுத்தும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு என் வாதத்தை முடித்துக்கொள்கிறேன்.'' — தம்மிடத்தில் சென்றமர்ந்தார் சந்திரன்.

இந்த உலகத்துச் சிந்தனையே இல்லாமல், தன்னை மறந்து, எதையோ எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கும் சண்முகத்தை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தார் நீதிபதி. ''சண்முகம் வழக்கம் போல் மௌனமாக இருக்காதே. ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் இப்பொழுது சொல்லிவிடு! இதுதான் இந்த நீதிமன்றம் தரும் கடைசி சந்தர்ப்பம். மறந்து விடாதே.''

வேடிக்கை பார்க்க வந்த மக்கள் கூட்டம் மொத்தமும் சண்முகத்தின் பக்கம் பார்வையைச் செலுத்தின.



ஹூம்... ஹூம்... வழக்கம் போலவே சண்முகம் இல்லை என்று தலையசைத்தான்.

சண்முகத்தின் வக்கீல் சிறிது நேரம் ஏதோ சொல்லிவிட்டு இருக்கையில் அமர்ந்தார்.

''வழக்கு விசாரணை இத்துடன் முடிகிறது. அடுத்த வெள்ளிக் கிழமை 11ம் தேதியன்று தீர்ப்பு வழங்கப்படும். நீதிமன்றம் இத்துடன் கலைகிறது.'' நீதிபதி தம் இருக்கையில் இருந்து எழுந்து தம் சேம்பருக்குள் நுழைந்தார். ஆயுதம் தாங்கிய போலீசார் சண்முகத்தை அழைத்துச் சென்றனர்.

வக்கீல் முதற்கொண்டு கோர்ட் பியூன் வரை சண்முகத்தை அனுதாபத்தோடு பார்த்துக்கொண்டிருந்தனர். அவனோ யாருடைய பார்வையையும் லட்சியம் செய்யாமல் நாட்கள் தள்ளிப் போவதைப் பற்றிக் கவலையுடன் இருப்பவன் போல் தோன்றும் தோற்றத்துடன் அமைதியாகப் போலீஸ் புடைசூழ வேனில் ஏறிக் கொண்டான். முகத்தில்தான் என்ன அமைதி!

எந்த வித மாற்றமும் இல்லாமல் அடுத்த வெள்ளிக் கிழமை சீக்கிரமே வந்தது. வழக்கமான முறைகளுடனும் பரிவாரத்துடனும் சண்முகம் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டான்.

நீதிபதி வந்து இருக்கையில் அமர்ந்து பைலை எடுத்துத் தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தார். கிட்டத்தட்ட 30 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை நிறுத்தி நிதானமாக விவரித்தார்.

''ஆகவே, பயங்கரமான கொலைகளைச் செய்த சண்முகத்துக்கு இ.பி.கோ. 302ன் படி தூக்குத் தண்டனை விதிக்கிறேன்.''

நீதிபதி சொல்லி முடித்தார்.

இதுநாள்வரை வாய் திறக்காமல் இருந்த சண்முகம்தான் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். போலீஸ்காரர்கள் அவனை அடக்கிக் கொண்டிருந்தனர்.

''சண்முகம், என்ன சொல்ல வேண்டும் உனக்கு?'' நீதிபதி அன்புடன் விசாரித்தார்.

''நீதிபதி அவர்களே! தங்களுடைய தீர்ப்பைத் தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தயவு செய்து நான் பேசுவதற்குச் சிறிது அனுமதிக்க வேண்டும்.''

கடைசியில் சண்முகம் பேசிவிட்டான். நீதிபதி முதற்கொண்டு அனைவரும் வியப்படைந்தனர். நிதானமான வாக்கியங்களுடன் கணீரென்று கண்ணியமாக வெளியிட்ட அவன் கோரிக்கை எல்லோரையும் கவர்ந்தது.

''சண்முகம், தீர்ப்பு வழங்கிய பிறகு அது பற்றி நீ இங்கு பேச முடியாது. ஏதாவது விருப்பம் இருந்தால் தெரிவிக்கலாம். அதை நிறைவேற்றும்படியான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.''

''நீதிபதி அவர்களே, என்னுடைய கடைசி விருப்பம், நான் இங்கு பேச வேண்டும் என்பதுதான். தயவு செய்து அனுமதியுங்கள்'' மன்றாடினான் சண்முகம்.

நீதிபதிக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஜூரிகளுடன் சேம்பருக்குள் சென்று சிறிது நேரம் கலந்தாலோசித்தார். பிறகு சண்முகத்திடம்,

''சண்முகம், உன் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு நிபந்தனை. நீ பேசும் வார்த்தைகள் ரிக்கார்டுகளில் பதிவு செய்யப்பட மாட்டாது. அதனால் உனக்குச் சாதகமான நிலைமைகள் எதுவும் கிடைக்காது. என் தீர்ப்பையும் அது கட்டுப்படுத்தாது. இது உனக்காக ஸ்பெஷலாகத் தளர்த்தப்பட்ட விதிமுறை. புரிந்து கொண்டு பேசுவாய் என்று நினைக்கிறேன்'' என்றார்.

சிறிது நேரத்துக்கு முன் டல் அடித்த நீதிமன்றம் சுறுசுறுப்படைந்தது.

''கனம் நீதிபதி அவர்களே! நான் முன்பு இருமுறை தற்கொலை செய்துகொள்ள முயன்ற காரணத்துக்காக பம்பாய் நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவன் என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. மேலும் கிட்டத்தட்ட ஒரு வருடமாக நீங்கள் போராடி என் கொலைகளுக்குக் கண்டுபிடித்துள்ள காரணத்தைக் கண்டு என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் செய்த குற்றம் என்னவோ குற்றம்தான் என்பதால் தீர்ப்பைப் பற்றி நான் குறை ஒன்றும் கூறவில்லை. ஆயினும் உண்மைக் காரணத்தை நீங்கள் அறியாமல் தீர்ப்பு வழங்கிய பாவம் இந்த நீதி மன்றத்துக்கு ஏற்படக் கூடாது என்பதால் நான் விளக்கிக் கூற விரும்புகிறேன். கேளுங்கள்...

''என்னுடைய சொந்தவூர் தமிழகத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் சிறு வயதிலேயே பம்பாய் சென்று விட்டேன். பிழைப்பை நாடி. கொலை செய்யப்பட்ட நாகரத்தினம் பம்பாயில் ஒரு கம்பெனியில் இருந்தான். நம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் ஆயிற்றே என்று என் வீட்டிலேயே தங்க இடம் கொடுத்



''டாக்டர், என் கணவர் எப்போ பார்த்தாலும் கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு அலைகிறார்!''

''அவர் சென்சார் போர்டில் மெம்பரா இருந்தவரா, என்ன?''

''இல்லே, முன்னாள் மந்திரியா திறப்பு விழாக்கள் நடத்திப் பழக்கம்... அவ்வளவுதான்!''

— ஜி. நடராஜன்

தேன். எனக்குக் கல்யாணமாகி அப்பொழுது ஒரு குழந்தையும் இருந்தது. நாகரத்தினத்துக்கு இடம் கொடுத்ததன் பலன் என்ன தெரியுமா? என் மனைவியை மயக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக அவளைத் தன்வயப்படுத்திக் கொண்டான் நாகரத்தினம். ஒரு நாள் என்னைச் சிறு குழந்தையையும் அழ அழ விட்டுவிட்டு என் மனைவியும் நாகரத்தினமும் எங்கோ ஓடிவிட்டார்கள்.'' முகத்தை மூடிக் கொண்டு சிறிது நேரம் பேசாமல் இருந்தான் சண்முகம்.

''எவ்வளவு அவமானம் தெரியுமா? ஐயோ தெருவே கூடி வேடிக்கை பார்த்தது. அய்யா என் நிலைமை அப்பொழுது....!

''கையிலே குழந்தை கதறக் கதற, நெஞ்சத்தை அவமானம் வாட்ட வீட்டினுள்ளே அடைந்து கிடந்தேன். கதறிக் கதறி அந்தக் குழந்தையும் ஒரு நாள் காய்ச்சலில் உயிரை விட்டது. என்வாழ்க்கையில் பற்றுக்கோடாக இருந்த குழந்தையும் இறந்தவுடன் எனக்கு வாழ்க்கை வெறுத்தது. வாழ்க்கைப் பாதையில் தோல்வி அடைந்த நான் ரயில் பாதையில் என் வாழ்வை முடித்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் முடியவில்லை. சட்டம் என்னை வளைத்துப் பிடித்து விட்டது. தற்கொலையிலிருந்து என்னைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி என்னை மறுபடியும் நரகத்தில் வாழ வேண்டும் என்று கட்டளை விட்டது.

''வாழ்ந்தேன் நடைப்பிணமாக சிலகாலம். பிறகு ஒரு நாள் அவளைச் சந்தித்தேன். எங்கே தெரியுமா? நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே சிவப்பு விளக்குப் பகுதி அங்கேதான். அம்மி மிதித்து அருந்ததி பார்த்துக் கட்டிய மனைவியைக் கணத்துக்கு ஒரு கணவன் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில். மோகம் தணியுமட்டும் அவளுடன் வாழ்ந்த நாகரத்தினம் ஒரு நாள் அவளை இங்கே விற்று விட்டு ஓடிவிட்டானாம். ஐயோ எப்பேர்ப்பட்ட நிலை தெரியுமா என்னுடையது. என்னுடைய விரோதிக்குக்கூட அந்த நிலை வர வேண்டாம் ஐயா! மீண்டும் மனம் வெறுத்தது. தூக்குக் கயிற்றை நாடினேன். அங்கேயும் ஒருவன் புண்ணியம் கட்டிக் கொள்கிறேன் என்று என்னைக் காப்பாற்றிப் போலீசிடம் ஒப்படைத்து விட்டான். அப்பொழுதுதான் எனக்கு ஒன்று உறைத்தது. ஆண்டவனே நான் சாவதை விரும்பவில்லை. ஏதோ ஒரு காரியத்தை நிறைவேற்றத்தான் என்னை இரு முறை காப்பாற்றியிருக்கிறான். அது என்ன காரியம்? யோசித்தேன், யோசித்தேன். என் அறிவுக்குத் தோன்றியது இது தான். நாகரத்தினம் போன்ற அயோக்கியர்கள் இந்த உலகத்தில் வாழக் கூடாது. நல்ல நேரத்துக்காகக் காத்திருந்தேன். என் கூட இருக்கும்பொழுதே அவனுடைய ஊர் எல்லாம் தெரியுமாதலால் கண்டு பிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை. இங்கு வந்து பார்த்தால் ஊரில் ஒரு பெரிய மனிதனாகக் குடும்பத்துடன் கண்ணியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான் நாகரத்தினம். எனக்கு இல்லாத கண்ணியமான வாழ்க்கையா அவனுக்கு... எனக்கு இல்லாத சந்ததிகளா அவனுக்கு... எனக்குப் பொறுக்குமா? காத்திருந்தேன் சில நாட்கள். சந்தர்ப்பம் கிடைத்தது. பூண்டோடு ஒழித்து விட்டேன், அந்த நச்சுப் பாம்பின் வம்சத்தை. ஆனால் அவனை அழித்து விட்டு நான் மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணமில்லை எனக்கு. தயாராக வாங்கிவைத்திருந்தேன் விஷத்தை. என்னைப் பிடிக்காமல் இருந்திருந்தால் மறு நாள் என் பிணத்தைத்தான் பார்த்திருக்க முடியும். ஆனால் இதுவும் எனக்கு நன்மைதான். நானாகத் தற்கொலை செய்து கொள்ளும்பொழுது என்னைத் தடுத்த அரசாங்கம், இப்பொழுது என்னை மேளதாளத்துடன் தூக்கு மேடைக்கு அனுப்புகிறது.

''நீங்கள் கேட்கும் கேள்வி எனக்குப் புரிகிறது. இவ்வளவு நாள் ஏன் பேசாமலிருந்தாய் என்றுதானே.. அதற்கும் பதில் சொல்கிறேன்.

''என் மனைவியையும் நாகரத்தினத்தையும் சம்பந்தப்படுத்தி ஊரார் எவ்வளவு பேசிற்று தெரியுமா? அதில் பாதியாவது என்னையும் நாகரத்தினத்தின் மனைவியையும் சம்பந்தப்படுத்திப் பேச வேண்டும் என்ற அற்ப ஆசைதான். நான் வாயைத் திறந்து பேசியிருந்தால் ஜனங்களின் கற்பனைக்கு இடமில்லை அல்லவா? அதனால்தான். ஆயினும் கடைசியில் என் மனத்தில் ஏதோ ஒரு குரல் உண்மையைச் சொல்லிவிடு, சொல்லிவிடு என்று சொல்லிக் கொண்டே இருந்தது. அந்த உறுத்தலின் விளைவுதான் நான் உங்களிடம் இப்போது பேசுவது.

''சட்டத்தின் உதவியுடன் சாக வேண்டும் என்ற என் விருப்பத்தை முடித்துக்கொள்கிறேன். தூக்குத் தண்டனையை எனக்களித்த வெகுமதியாகவே கருதுகிறேன். நன்றி. வணக்கம்.''

நீதிமன்றம் விதிர்விதிர்த்தது. நீதிபதி அயர்ந்தார். ''ஆமாம், எதைச் சாடுகிறான் இவன்?'' இவன் செய்தது கொலை என்றால், சட்டப்படி நாம் செய்வது என்ன? வினாவுக்கு விடை 'இந்தியன் பீனல் கோட்டில்' இல்லை.


நோனி


நோனி பள்ளிக்கூட வாசலை மிதித்ததில்லை. கல்கத்தா ராயல் கால்ஃப் கிளப்பில் உதவியாளராக (Caddie) இருந்தவர்; கால்ஃப் ஆட்டத்து நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டார். ஒன்பது வருட உதவியாளர் அனுபவம் நோனியை இன்று சிறந்த ஆட்டக்காரராக்கி விட்டது! அவர் அண்மையில் சென்னையில் கால்ஃப் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்று விட்டார்.

-குண்டுமணி

படம்: நன்றி: ஹிந்து








கருத்து: கீதா
படம்: ஜெயந்தி

கம்யூனிஸ்டுகள் ஒரு நாட்டைக் கைப்பற்றுகிறார்கள் என்றால் உலகில் அகதிகள் எண்ணிக்கை உயரும் என்று உடனே தெரிந்து கொள்ளலாம்.

ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி ஏற்பட்டு, பொன் விழாவும் முடிந்து, அறுபதாண்டு நிறைவும் ஆகிவிட்டது. அங்கிருந்து மக்கள் அகதிகளாய் வெளியேறுவது மட்டும் இன்றளவும் நின்றபாடில்லை.

சென்ற டிசம்பர் மாதம் மாஸ்கோ ஆப்கானிஸ்தானம் மீது படையெடுத்தது; பதினொரு லட்சம் ஆப்கானியர் அகதிகளாகி அல்லல் படுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகக் கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறும் கியூபாவிலிருந்து அண்மையில் மட்டும் 1,15,000 மக்கள் அகதிகளாக வெளியேறி அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட்கள் வசமான கம்பூச்சியாவிலிருந்து இன்று தாய்லாந்தில் தஞ்சம் தேடி வந்திருக்கும் அகதிகள் தொகை மூன்று லட்சம்.

கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்துதான் இப்படி அகதிகள் பிரளயமாக வெளியேறி அமெரிக்கா முதலிய நாடுகளில் குடியேறுகிறார்களே தவிர, சுதந்திர நாடுகளிலிருந்து கம்யூனிஸ்ட் நாடுகளுக்குள் அகதிகளாகச் சென்று குடிபுகுவோர் உண்டா என்றால் இல்லை!

ரஷ்ய ராணுவம் வட கொரியாவினுள் நுழைந்து, கம்யூனிஸ்ட் ஆட்சியை நிறுவியதும், அங்கிருந்து மக்கள் அகதிகளாக ஓட்டம் பிடிக்கலாயினர். நாளடைவில் ஐம்பது லட்சம் வடகொரியர் வெளியேறினர்; பெரும்பாலோர் அன்று அமெரிக்கா வசம் இருந்த தென் கொரியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

வட வியட்நாம் 1954ல் கம்யூனிஸ்டுகள் வசமாயிற்று. உடனே பத்து லட்சம் மக்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து தென் வியட்நாமுக்குள் குடியேறலாயினர். அவர்களில் பலர் கத்தோலிக்க சமயத்தினர். அன்று தென் வியட்நாம், கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான அரசாக இருந்தது.

ஆப்பிரிக்காவில் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்கென்று எத்தியோப்பியப் படை ரஷ்ய ஆயுத வலிமையால் நடத்தும் கடும் போருக்கு அஞ்சி 18 லட்சம் எத்தியோப்பியர் அண்டை நாடுகளான சோமாலியாவுக்கும் சூடானுக்கும் அகதிகளாக ஓடி வந்திருக்கிறார்கள்.

ஐரோப்பாவின் கதையும் வேறல்ல. இரண்டாம் உலகப் போர் முடிந்த உடனே தொடங்கிய கண்ணீர் கதை அது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றி மாஸ்கோவின் பிடிக்குள் வரவே அந்த நாடுகளிலிருந்து லட்சக் கணக்கான மக்கள் சுதந்திரம் நாடி அகதிகளாகத் தப்பிப் பிழைத்தனர். அதுமட்டுமல்ல.

1956ல் ஹங்கேரியிலும் 1968ல் செக்கோஸ்லோவாகியாவிலும் ஆட்சியின் கெடுபிடிகளைக் குறைக்க வேண்டும் என்று உருவான முயற்சிகளை அந்நாடுகளின் கம்யூனிஸ்ட் அரசுகள் ரஷ்ய டாங்கிகளைக் கொண்டு அடக்கி ஒடுக்கியபோது இந்த அகதிகள் வெள்ளம் அணை கடந்தது. கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ஹங்கேரியரும் ஏறக்குறைய 50,000 செக்கோஸ்லோவாகியரும் மேலை நாடுகளுக்குத் தப்பிப் பிழைத்தனர்.

பத்து ஆண்டுகளில் ரஷ்யாவிலிருந்து மூன்று லட்சம் யூதர்கள் வெளியேறியுள்ளனர்.

அகதிகளை வரவேற்று மறுவாழ்வளிப்பதில் அமெரிக்கா முதல் இடம் பெற்றுள்ளது. கடந்த 35 ஆண்டுகளில் அந்நாட்டில் குடியேறியுள்ள அகதிகள் இருபது லட்சம். இவர்களில் ஆறுலட்சம் பேர் 1975க்குப் பிறகு வந்தவர்கள். இவர்களிலும் 4,15,000! மக்கள் இந்தோசீனர்.

இன்னும் பல லட்சம் அகதிகள் அமெரிக்காவில் குடியேற விழைகின்றனர். ஆண்டுதோறும் நாற்பது லட்சம் விண்ணப்பங்கள் வருகின்றன என்கிறார் அமெரிக்க அதிகாரி ஒருவர்.



✱ கியூபாவிலிருந்து வெளியேறிய அகதிகள் அமெரிக்கக் கரை தென்பட்டதும் கைகளை உயர்த்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்

ஆனால் அமெரிக்கா எத்தனை லட்சம் பேர்களைத்தான் ஏற்கும்? சென்ற ஆண்டு திடீரென்று வியட்நாம் மாதம்தோறும் பதினாயிரம் மக்களை வெளியேறலாம் என அனுமதித்தது. இவர்கள் உடனே கண்ட கண்ட படகுகளில் ஏறிக் கடல் கடக்கலாயினர்; அளவுக்கு மிஞ்சி ஆட்கள் ஏறியதால் அவற்றில் பல ஆழ்கடலில் தாழ்ந்தன. எத்தனை பேர் இறந்தார்களோ தெரியாது. அமெரிக்காவும் மற்றும் பல நாடுகளும் ஐ. நா. விலே கண்டனக் குரல் எழுப்பவே, வியட்நாம் இணங்கிவந்து வெளியேற்றத்தின் அளவைக் குறைக்கலாயிற்று. எனினும் இன்னும் முப்பது லட்சம் வியட்நாமியர் வெளியேற விரும்புவதாக வியட்நாமின் அயலுறவு அமைச்சரே கூறுகிறார்.

உலகமெங்கும் அகதிகள் தொகை உயர்ந்து வருவதற்கு ஏற்ப அவர்களுக்கு இரங்கி உதவி

அளிப்பது மேன்மேலும் முக்கியமாகிறது. அகதிகளைப் பேணுவதற்கென்றே ஐ.நா.வில் ஓர் ஏற்பாடு உள்ளது. அகதிகளுக்கான ஐ.நா. ஆணையம் என்பது அதன் பெயர். ஆனால் ரஷ்யா இதன் பணிகளுக்கு யாதொரு உதவியும் அளிப்பதில்லை; கொடுக்க மறுக்கிறது. அந்த ஆணையத்தின் ஊழியர்களுடைய ஊதியத் தொகையில் மட்டும் அது ஒரு சிறிதளவு பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

மாறாக, இந்த உலகளாவிய துயர் துடைப்பு முயற்சிகளுக்கு அமெரிக்கா முன்னணியில் நின்று உதவுகிறது.

ஆதாரம்: யு.எஸ். நியூஸ் அண்ட் வேர்ல்ட் ரிப்போர்ட்

கராத்தே பயிற்சி . 8

பயிற்சி : டோனி பொன்னையா

சித்திரம் : ராஜ்... படம் : உத்ரா தயாரிப்பு : (குன்குமணி)



↑ தடுப்பதற்குக் கைகளைத் தயார் நிலையில் வைத்தல். (ஆரம்பநிலை)

முதலாவது தடுப்புமுறை

உடலின் நடுப்பாகத்தில் தடுத்தல். (DOWN BLOCK)


– எதிரியிடமிருந்து உதையோ அல்லது குத்தோ எம்முறை தாக்குதல் வந்தாலும் அதை இந்த 'DOWN BLOCK' மூலம் தடுப்பது மிகச் சிறந்த தற்காப்பு.

பயிற்சி முறை

இத்தடுப்பு முறையை வலது கை, இடது கை மாறி மாறிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் போது கால்களையும் மாற்றிச் செய்து பழக வேண்டும்.

கராத்தேகாரின் போக்கைப் படங்களில் கவனிக்கவும்.

இடை நிலை



முறையான DOWN BLOCK இது → கடை நிலை





காந்தி தேசாய் பற்றியும் ஜனசங் பற்றியும் தினம் ஒரு அவதூறான அறிக்கை விட்ட ராஜ் நாராயணன், சரண்சிங் பிரதமராக வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். ஆர். எஸ். எஸ். ஸை சட்ட விரோதமாக்க வேண்டும் இல்லாவிட்டால் கிளர்ச்சி நடத்துவேன் என்று பயமுறுத்தினார். ஆர். எஸ். எஸ். தொடர்புள்ள ஜனசங் மந்திரிகள் வெளியேற்றப்பட வேண்டும் என்றார்.

இதில் அவர் தனித்திருக்கவில்லை. மது லிமாயி முதலானவர்களும் ஜனசங்கை வெளியேற்றிவிட்டு, அர்ஸ் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துழைப்புடன் 'இடதுசாரி சோஷலிஸ்ட் ஆட்சி' அமைக்கலாம் என்று முற்பட்டனர்.

ஜூன் 23ந் தேதி ராஜ்நாராயண் ஜனதா கட்சியிலிருந்து விலகினார். 'ஜனநாயக சக்திகளைத் திரட்டிப் புதிய ஆட்சி அமைப்பதாக அறிக்கை விட்டார்.

இக்கட்டத்தில் ராஜ்நாராயண் சஞ்சய் காந்தி சந்திப்பு அநேகமாக ஒவ்வொரு தினமும் நடந்தது. 'எப்படியாவது 100 பேர்களை வெளியேறச் செய்து காட்டுகிறேன்' என்று சொல்லி ராஜ்நாராயண் ஜனதா கட்சி உடைப்பில் தீவிரமாக முனைந்தார்.

இதன் நடுவில் தன்னிச்சையாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சவான் மொரார்ஜி ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் போட்டார். இந்த விளைவு இந்திராவுக்குப் பிடிக்கவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுப்போய்விடும். பிறகு மொரார்ஜி இன்னும் வலுத்துவிடுவார் என்று நினைத்தார்.

ஆனால் அவர் எதிர் பார்த்திருந்ததற்கு மாறாக சடசடவென்று ஜனதா கட்சி சரியலாயிற்று. சரண்சிங்நீங்கலாக மற்ற லோக் தள் அங்கத்தினர்கள் ராஜ் நாராயண் அமைத்த போட்டி ஜனதா கட்சிக்குத் தாவினர். பின்னர் பகுகுணா. அதன் பின்னர் பெர்னாண்டஸ், நம்பிக்கை யில்லாத் தீர்மான விவாதத்தில் பங்கு கொண்டு தீவிரமாக மொரார்ஜி ஆட்சியை ஆதரித்துப் பேசிய மறுநாளே கட்சியை விட்டு விலகினார்.

மொரார்ஜி ராஜினாமாவுக்குப் பின் சரண்சிங்கும் ஜனதாவிலிருந்து விலகி ராஜ்நாராயண் கட்சிக்குத் தலைவரானார்.

சரண்சிங் அடுத்த பிரதமர் என்று உறுதியாகிவிட்டது. இதன் காரணமாக ஜகஜீவன் ராம் மற்றவர் வழியே போக மறுத்துவிட்டார். ஆர். எஸ். எஸ். விவகாரம் வெறும் பூச்சாண்டி என்று சொன்னார். சரண்சிங் பிரதமராவதைத் தான் ஆதரிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். ஜனதாவிலேயே இருந்தால் மொரார்ஜிக்கு பின் தாமே பிரதமராக முடியும் என்று நினைத்தார்.

எப்படியும் மொரார்ஜிக்கு மெஜாரிட்டி போய்விட்டது. அவர் ராஜினாமாச் செய்த கையோடு மீண்டும் ஆட்சி அமைக்கத் தம்மையே கூப்பிட வேண்டும் என்று ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியது விந்தை.

அடுத்த சில நாட்கள் ஜனதா கட்சியில் பிரதமர் பதவிக்கு மொரார்ஜி ஜகஜீவன் ராம் போட்டியும் மாநிலக் கட்சிகளில் சரண் சிங்குக்கு ஆதரவு திரட்டும் முயற்சியும் நடந்தன. இரு தரப்பிலேயும் போதுமான மெஜாரிட்டி இல்லாத நிலை. இந்திரா கட்சி ஆதரவு கூட சரண் சிங்குக்குத் தேவையான மெஜாரிட்டியைத் தரவில்லை.

• • •

ஜனவரி 14, 1980. நிறைந்த பொங்கல் நாளில் 14 மந்திரிகளுடன் இந்திராகாந்தி மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்றார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு வெற்றி வாகையுடன் அவர் பதவியைத் திரும்பப் பிடித்தது உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியது.

ஆனால் ஆறு மாதங்களுக்கு முன் சரண்சிங் பிரதமராகப் பதவி ஏற்ற சமயம் மீண்டும் பதவியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கை இல்லை. சரண்சிங்குடன் இந்திரா காந்தி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் மிகவும் குறுகியது. கிஸ்ஸா குர்ஸிகா வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பக் கூடாது. விசேஷக் கோர்ட்டுகளை வாபஸ் செய்ய வழி செய்ய வேண்டும். உத்தரப் பிரதேசத்தில் விமானக் கடத்தல் செய்த இரண்டு சஞ்சய்

ஆதரவாளர்களை ஜாமீனில் விட வேண்டும், சஞ்சய் மேனகா பாஸ்போர்ட் தடையை நீக்க வேண்டும். இந்திராவின் காரியதரிசி ஆர். கே. தவான் குடும்பத்தினர் மீதுள்ள வருமான வரி வழக்கை வாபஸ் பெற வேண்டும். இதுபோன்ற சில்லறை விஷயங்களே.

இந்த ஒப்பந்தம் சஞ்சய் ராஜ்நாராயண் பேச்சு வார்த்தைகளில் செய்துகொண்டது. ஆனால் சரண்சிங்கோ பதவி கிடைத்த உடனேயே ''எனக்குத் தெரிந்தவரை இந்திரா காந்தி என்னை ஆதரிக்க முன்வந்ததற்கு நிபந்தனை ஏதும் கூறப்படவில்லை'' என்றார்.



''உங்களுக்கு எவ்வளவு தைரியம்? சென்ட்ரலுக்குப் போய் அம்மாவை அழைச்சிட்டு வாங்கன்னு சொன்னு... சென்ட்ரல் ஜெயில்லே போய்த் தேடி பார்த்துட்டு எங்க அம்மா அங்கே இல்லேன்னு சொல்லிகிட்டுத் திரும்பி வரீங்களே!''

- ஏ. வி. எம். கணேஷ்

ஜனதா கட்சி ஆட்டம் காண ஆரம்பித்ததிலிருந்தே ஜகஜீவன்ராமின்மகன் சுரேஷ் ராம் சஞ்சயுடன் தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தார். சஞ்சயின் அந்தியந்த பள்ளித் சினேகிதரான கமல்நாத்தைச் சந்தித்து ஜகஜீவன்ராம் பிரதமராவதற்கு இந்திரா காந்தி ஆதரவு தரவேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார். ஆனால் அப்போது ஜனசங் ஆதரவில் இருக்கும் ஜகஜீவன் ராமுடன் ஒருவித தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது என்று இந்திரா மறுத்து விட்டார்.

இந்திராவின் ஆதரவு இன்றி அவர் பிரதமர் பதவியை ஒருகாலும் எட்டிப் பிடித்திருக்க முடியாது என்று அவருக்குத் தெரியும். இந்திரா கட்சி ஆதரவு இருந்தும்கூட மெஜாரிட்டிக்குத் தேவையான 270 எம். பி.க்கள் தேறவில்லை. சவான் காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க., வலது கம்யூனிஸ்ட், இடது கம்யூனிஸ்ட் மற்றும் சில்லறைக் கட்சிகள் ஆதரவு தந்தன.

இருந்தும்கூட மொரார்ஜிக்கும் அதே அளவு ஆதரவு இருந்தது. அவர் செய்த ஒரே தவறு காங்கிரஸ் கட்சியிலிருந்து சில பெயர்களைக் கேட்காமலே தன் பட்டியலில் சேர்த்துக்கொண்டது. இதற்குக் காரணம் சஞ்சீவ ரெட்டி மூன்று நாள் தவணை தந்துவிட்டு ஒரு நாள் முன்னதாகவே நெருக்கியதில் காங்கிரஸ் கட்சி ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சில பெயர்களைத் தம் பட்டியலில் சேர்த்து விட்டார்.

ஆனால் சரண்சிங் காங்கிரஸ்கட்சிக்கு அதிக பட்சம் பதவிகளைத் தர முன்வந்ததால் மொரார்ஜி பட்டியல்காரர்கள் அங்கேயே தங்கிவிட்டதுமன்றி, 'மோசடி' குற்றம் வேறு சாட்டினர். இதனால் மொரார்ஜி மனம் உடைந்துபோய், 'அரசியல் சந்நியாசம்' மேற்கொண்டார்.

முதலிலேயே ஜனதா கட்சிப் பெரும்பான்மை வற்புறுத்தியது போல் ஜகஜீவன் ராமுக்குத் தலைமைப் பதவியை விட்டுக் கொடுத்திருந்தால் ஒருவேளை ஜனதா ஆட்சி பிழைத்திருக்கும். ஆனால் மொரார்ஜி முரட்டுத்தனமாக மறுத்துவிட்டார்.

சஞ்சீவ ரெட்டி அதிகபட்ச ஆதரவுள்ளவர் என்ற அடிப்படையில் சரண்சிங்கையே பிரதமராக நியமித்தார். ராஷ்டிரபதி பவனிலிருந்து நேராக இந்திரா வீடு சென்று நன்றி சொல்வதாக ஏற்பாடு. ஆனால் போகவில்லை. இந்திரா மாலையுடன் காத்திருந்து அவமானமடைய நேர்ந்தது. வழக்குகள் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை என்று சரண்சிங் சொல்லியபிறகு இந்தஆட்சியையும் கவிழ்த்து விடவேண்டியதுதான் என்று இந்திராவும் சஞ்சயும் முடிவு செய்தனர்; உடனேயே சஞ்சய் காரியத்தில் இறங்கினர்.

இப்போது ஜகஜீவன்ராமை 'காபந்து' பிரதமராக ஆதரிக்க இந்திரா முன்வந்தார். அதாவது ஜகஜீவன்ராம் பதவி ஏற்றவுடனேயே பார்லிமெண்ட் தேர்தலுக்கு உத்தர விடவேண்டும். ஜகஜீவன்ராம் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

இடையில் சரண்சிங் ஆட்சி மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தாக்கலாகி இருந்தது. ஆகஸ்டு 20ந் தேதி, அதாவது சரண்சிங் பதவியேற்ற மூன்று வாரத்திற்குள் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் பார்லிமெண்ட் இறக்கும் நாளை காத்திருந்தது.

சரண்சிங் ஆதரவாளர் பதறியடித்துக் கொண்டு இந்திரா கட்சி ஆதரவைத் தொடர்ந்து பெற அனைவரையில் முயன்றனர். ராஜ்நாராயண் சஞ்சய் காந்தியை ரகசியமாகச் சந்தித்தார். அவர்கள் இடையே நடந்த சம்பாஷணையின் பகுதி கமல்நாத் டயரியிலிருந்து:

சஞ்சய்: மறுபடியும் எங்களை முட்டாளாக்க வந்திருக்கிறீர்களா?

ராஜ்நாராயண்: இல்லை, இல்லை. கோபித்துக்கொள்ளாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும்.

சஞ்சய்: நீங்கள் பொய் சொல்பவர். அது மட்டுமில்லை. பெரிய ஏமாற்றுக்காரர்.

ராஜ்: இதுவரை என்னை யாரும் இப்படிச் சொன்னதில்லை. வேறு யாராவது இப்படிப் பேசியிருந்தால் அடித்து நொறுக்கியிருப்பேன். அல்லது அறையை விட்டு வெளியேறியிருப்பேன்.

சஞ்சய்: என்னை அடியுங்களேன். இல்லாவிட்டால் வெளியே போங்கள். நீங்கள் பொய்யர்; ஏமாற்றுக்காரர்.

ராஜ்: இப்போது சொன்னபடி செய்கிறேன் என்று சொல்கிறேனே!

சஞ்சய்: பொய் சொல்கிறீர்கள். இத்தனை நாள் ஒன்றுமே செய்யவில்லை. ஏன்? கதையை மாற்றுகிறீர்கள்.



Non-soggy blue detergent cake washes dirt out, puts whiteness in
AVIX
"பாருங்க! நான் எவிக்ஸ் வில்லையை கடைசித் துண்டு வரைக்கும் உபயோகிக்கிறேன்!"
எவிக்ஸ்
நீலநிற டிடர்ஜெண்ட் வில்லை கெட்டியாக இருப்பதற்காக, நீடித்து உழைப்பதற்காக, அதிகமான துணிகளைத் துவைப்பதற்காகவே விசேஷமாக கலவை செய்யப்பட்டது.
எவிக்ஸ் சக்தி வாய்ந்த 'வெண்மையூட்டும் பொருளைக் கொண்டுள்ளதால் உங்களுடைய ஆடைகளை முன்பைவிட அதிக வெண்மையாகவும் அதிக பளபளப்பாகவும் துவைக்கிறது. நீங்கள் நீலநிற சாதனத்தை இனிமேல் சேர்க்கவேண்டியதில்லை. ஈரக்கசிவற்ற எவிக்ஸ் நீலநிற டிடர்ஜெண்ட் வில்லை அழுக்கை அறவே அகற்றுகிறது. அதிகப்படியான வெண்மையைத் தருகிறது.
கோத்ரெஜ் தயாரிப்பு
CHAITRA-G123-TAM

ராஜ்: நான் சரண்சிங்கிடம் முடிவாகச் சொல்லிவிட்டேன். வாக்களித்ததைச் செய்து தரவேண்டும் என்று.

சஞ்சய்: ஓ.கே. செய்த பிறகு எங்கள் வோட்டுக்காக வாருங்கள். அதுவரை பேசாதீர்கள்.

ராஜ்நாராயணனின் இந்த இரகசியச் சந்திப்பையும் சஞ்சய் அந்த இடத்திலேயே அம்பலப்படுத்திவிட்டார். முன்கூட்டியே பத்திரிகையாளர்களையும் போட்டோகிராபர்களையும் வரச்சொல்லி அவர்கள் வாசலில் காத்திருந்தனர். இதை அறிந்த ராஜ்நாராயணனுக்கு அதிர்ச்சியாகப் போயிற்று. வீட்டின் பின்பக்கச் சந்து வழியாக ஓட்டம் பிடித்தார்.

முதல் நாளே தெரிந்துபோய்விட்டது. சரண்சிங் ஆட்சி நிலைக்காது என்று. ஆனால் என்ன காரணத்தினாலோ அ.இ.அ.தி.மு.க. பிரதிநிதிகளுக்குத் தெரியவில்லை. பாலா பழனூரும், சத்தியவாணி முத்துவும் மந்திரிகளாக நியமனம் பெற்றுத்தம் கட்சி ஆதரவை சரண்சிங்குக்கு உறுதிப்படுத்தினர்.

அடுத்த நாள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது எப்படியாவதுவென்று விடலாம் என்று சரண்சிங்மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார். இந்திரா காந்தியின் ஆதரவு முறிந்துபோகாது என்ற குருட்டு நம்பிக்கை இருந்தது.

ஆனால் பார்லிமெண்ட் கூடுவதற்கு ஒரு மணி நேரம் முன்னர் இந்திராவின் பார்லிமெண்ட் கட்சி சரண்சிங் ஆட்சியை ஆதரிக்க மாட்டோம் என்று தீர்மானம் போட்டது.

சரண்சிங் வேறு வழியின்றி ராஜினாமா செய்தார். கையோடு லோக் சபையைக் கலைத்து மறு தேர்தலுக்கு உத்தரவிடும்படி ஜனாதிபதிக்குச் சிபாரிசு செய்தார்.

நியாயமாக சஞ்சீவ ரெட்டி, அப்போது ஜனதா கட்சித் தலைவராக நியமனம் பெற்றிருந்த ஜகஜீவன்ராமை ஆட்சி அமைக்கச் சொல்லிக் கூப்பிட்டிருக்க வேண்டும். ஏனோ செய்யவில்லை.

"நான் ஹரிஜன். 1969 ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு எதிராக வேலை செய்தேன் என்று காழ்ப்பு வேறு. இப்போது பழிவாங்கிவிட்டார்" என்றுஜகஜீவன்ராம் சஞ்சீவ ரெட்டியைக் குற்றம் சொன்னார். ஜனதா அக்ராசனர் சந்திரசேகர் ஜனாதிபதியை 'இம்பீச்' செய்யப் போவதாக மிரட்டினார்.

சஞ்சீவ ரெட்டி எதற்கும் மசியவில்லை. சரண்சிங்கையே மறுதேர்தல்வரை காபந்து ஆட்சி நடத்துமாறு பணித்தார்.

தேர்தல் ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் நடந்தது. அதுவும் இந்திராவுக்கு சௌகரியமாகப் போயிற்று. சரண்சிங் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு குலைந்தது; விலைவாசிகள் விஷம்போல் ஏறின; கொலை, கொள்ளைக் குற்றங்கள் மலிந்தன.

இந்திரா சூறாவளித் தேர்தல் பிரயாணம் செய்தார். லட்சக் கணக்கில் மக்கள் திரண்டு வந்தனர்.

சஞ்சய் காந்தி வெற்றியை உறுதியாக்கிக் கொள்ள அரசியல் பேரத்தில் ஈடுபட்டார். பகுகுணாவைச் சரண்சிங்கிடமிருந்து பிரித்து அவர் மூலம் முஸ்லீம் மதகுரு இமாமையும் இந்திரா கட்சி ஆதரவாளராகச் சேர்த்துக் கொண்டார். (இந்திரா பதவி பெற்ற பிறகு இரண்டு பேருமே சீந்துவாரின்றி விலகிப் போயினர்.)


தெற்கே எம். ஜி. ஆர். மீண்டும் இந்திராவுடன் சமரசம் செய்துகொள்ள முனைந்தார். ஆனால் சஞ்சய் பிடிவாதமாக எம். ஜி. ஆர். ஆதரவை மறுத்துவிட்டு அவரை முந்திக்கொண்ட கருணாநிதியின் கரத்தைப் பற்றிக் கொண்டார். தஞ்சாவூரில் இந்திராவைக் கைவிட்டதற்கும், மொரார்ஜி, சரண்சிங் ஆட்சிக்குத் துணை போனதற்கும் பழிவாங்கியாயிற்று.

துண்டாடிப்போய்விட்ட ஜனதா கட்சியால் இந்திரா அலைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. ஜனதா கட்சி வேறு ஜகஜீவன்ராமை இந்திரா காந்திக்கு மாற்றாக விளம்பரம் செய்தது. இதனாலேயே வோட்டுகள் சரிந்தன.

இந்திராவா, ஜகஜீவன்ராமா, சரண்சிங்கா என்று ஏற்பட்டுவிட்ட பிரதமர் போட்டியில் பெரும்பான்மை வாக்காளர்கள் இந்திராவையே தேர்ந்தெடுத்தனர்.

இந்திரா காங்கிரஸுக்கு பார்லிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு இடங்கள் கவசமாகக் கிடைத்தன. இந்திரா உ.பி.யிலும் ஆந்திராவிலும் இரண்டு இடங்களிலும் போட்டியிட்டு இரண்டிலுமே அமோக வெற்றி கண்டார். சஞ்சய் அமேதி தொகுதியில் லட்சம் வோட்டுகளுக்கு மேல் பெற்று பார்லிமெண்ட் உறுப்பினராக நுழைந்தார். அவருடன் 30 பேருக்கு மேல் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் வெற்றி பெற்றுத் துணை சேர்ந்தனர். சரண்சிங் லோக்தாள், ஜனதா கட்சி இரண்டுக்கும் சேர்ந்து 75 இடங்களுக்கு மேல் கிடைக்கவில்லை. சவான் காங்கிரஸ் அடியோடு விழுந்து விட்டது. சஞ்சய் காந்தி செயல் வீரனாக, அரசியல் சாணக்கியனாகப் புகழ் பெற்றார்.

(தொடரும்)







அன்று நான் பேப்பரைப் படித்துக்கொண்டிருந்தபோது என் அருமை நண்பர் எழுத்தாளர் ஏகாம்பரம், ''என்னய்யா சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்? என்னுடைய கட்டுரையையா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

''இல்லே சுவாமி... சினிமாவினால் இளைஞர்கள் கெட்டுப்போகிறார்கள் என்று பேராசிரியர் பரிவிராஜக சர்மா, வெளுத்துக்கட்டிப் பிய்த்து உதறியிருக்கிறார்'' என்றேன்.

''சர்மாவுக்கு வேறு வேலை இல்லே. சரியான பேத்தல் ஆசாமி. சினிமாவினால் கெட்டுப்போவது என்னவோ சுலபமான காரியம் மாதிரி எழுதுகிறார். அவருக்கு மோகனகுமாரைப் பற்றித் தெரிந்திருந்தால் இப்படி எழுதமாட்டார்'' என்று கதையைத் தொடர்ந்தார்.

மோகன்குமார் ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை. மெட்ராஸில் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். சினிமாப் பைத்தியம். ஒரு நாளில் இரண்டு படம் கூடப் பார்ப்பான். இப்படித் தொடர்ந்து பல படங்களைப் பார்க்கப் பார்க்க அவனுள் ஒருவித பாதிப்புகள் ஏற்பட்டன. சினிமாவில் வரும் வில்லன்களும் ரௌடிகளும் கடைசிவரை அட்டகாசமாகவும் உல்லாசமாகவும் இருப்பதையும் கதாநாயகிகளுடன் ஹீரோவைவிட நெருக்கமாக இருப்பதையும் கண்டு தானும் ஒரு ரௌடியாக வேண்டும் என்று முடிவெடுத்தான். அப்போது ஆரம்பித்தது அவனது தொல்லைகள்.

முதலாவது தனது மோகன்குமார் என்கிற பெயரை ஜம்புலிங்கம் அல்லது லிங்கப்பா என்று படுவில்லத்தனமான பெயராக மாற்ற விரும்பினான்.

எப்படி மாற்றுவது? எங்கெங்கோ விசாரித்தான். கோர்ட்டில்தான் மாற்றுவார்கள் என்றார்கள் சிலர். ஜனன மரண பதிவு ஆபீசுக்குப் போகச் சொன்னார்கள் வேறு சிலர்.

கடைசியில் வக்கீல் ஒருவரைப் பிடித்தான். அவர் ஏதோ அஃபிடவிட், நோட்டரி பப்ளிக் என்று பெரிய வார்த்தைகளைப் போட்டு வக்கீல் ஃபீஸ், காப்பிச் செலவு. இனாம், பக்ஷீஸ், விளம்பர சார்ஜ். அது இது என்று இரண்டாயிரம் ரூபாய் கறந்து விட்டார். கடைசியில் அவன் பெயர் ஜம்புலிங்கப்பாவாக மாற்றப்பட்டது.

சினிமா ரௌடிகள் நெற்றியிலோ கன்னத்திலோ ஒரு காயத் தழும்பு இருப்பதைப் பார்த்த மோகன்குமார் அதாவது ஜம்புலிங்கப்பா தன் முகத்திலும் அப்படி ஒரு தழும்பு இருக்க வேண்டும் என்று விரும்பினான். பிளாஸ்டிக் சர்ஜரியில் முடியும் என்று யாரோ சொன்னதைக் கேட்டு, மெடிகல் ரெப்ரசெண்டேட்டிவ் மாதிரி பல டாக்டர்களின் கன்சல்டிங் அறைகளைப் படையெடுத்தான். ஃபீஸ் செலவானதுதான் மிச்சம். நிஜமான காயம் ஏற்பட்டால்தான் தழும்பு இருக்கும் என்று சொல்லிவிட்டார்கள்.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தன் முகத்தில் தானே கத்தியால் கீறிக்கொள்ள முயன்றான். பயத்தில் மயக்கம் போட்டு விழுந்து அடிபட்டுக் கொண்டான், எப்படி



ஒரு ஹீரோ வில்லனைப் பார்க்கிறார்!

— பி.எஸ்.ஆர் —

யும் ரௌடியாக வேண்டும் என்ற தீவிரம் கடைசியில் வென்றது. ஒரு நாள் கத்தியால் கீறிக்கொண்டான். துரதிர்ஷ்டம், அது செப்டிக் ஆகிவிடவே ஆறு மாசம் படுக்கையில் படுத்தான். நர்சிங்ஹோம்செலவு எக்கச்சக்கமாக ஆயிற்று. இருந்தும் அவனுக்குத் திருப்தி தரும் வகையில் தழும்பு அமைந்தது.

வில்லன் என்றால் பம்பையாக நிற்கும் கிராப் இருக்க வேண்டுமே. பாவம், ஜம்புவுக்கு ஷாம்பூ விளம்பரங்களில் வருவது போல் அழகான நீளமான சில்க் முடி.

"டேய், இது ஹீரோ ஹேர் ஸ்டைல். பம்பாயில் முடிசந்த் ஹேரானால் என்கிறவர் இருக்கிறார். அவர்தான் இந்தியாவிலேயே பெரிய ஹேர் ஸ்பெஷலிஸ்ட். அவரைக் கேட்டுப் பார்" என்றார்கள்.

பம்பாய் போய், பர்ஸை பிக்பாக்கெட் விட்டு அவதிப்பட்டு முடிசந்தை ஒரு சந்தில் கண்டுபிடித்து மூன்று மாதம் சிகிச்சை பெற்றான். சொல்லக் கூடாது. முடிசந்த் அபாரக் கலைஞர். ஜம்புவின் தலையைப் பயங்கரமாக மாற்றி அமைத்தார்.

சென்னை வந்ததும் ஜம்புவின் நண்பர்கள் ஒரு கணம் அசந்து போய்விட்டார்கள்.

"சரி, ஜம்பு, கையில் ஏதாவது படம் பச்சை குத்திக் கொள்வதுதான் ரௌடிகளின் லட்சணம். சினிமாவில் பார்த்திருப்பாயே தேள், பாம்பு, கத்தி, கபாலம், புலி போன்று ஏதாவது பச்சை குத்தியிருக்குமே" என்றதும், "ஆமாம், மறந்துபோய்விட்டேன்" என்று சொல்லி விட்டு பச்சை குத்துபவர்களைத் தேடி அலைந்தான். சுலபத்தில் அகப்படுகிறார்களா? கடைசியில் ஒரு ஆசாமி 'செந்தேள்படம்' பச்சை குத்த ஒத்துக்கொண்டார்.

"சாமி, இதும்மாதிரிப் படங்களை பச்சே குத்தோணுமின்னா நம்ப குலதெய்வம் பச்சியம்மனுக்கு உபயாத்து. ஆடு, கோழி கொடுக்கணும். ரொம்ப செலவு ஆவும்."

முன்வைத்த காலைப் பின்வாங்க விரும்பாத ஜம்பு சுமார் ஆயிரம் ரூபாய்வரை செலவு செய்து கையில் செந்தேள் படத்தைப் பச்சை குத்திக்கொண்டான்.

சிங்கப்பூரில் இருந்த நண்பருக்குக் கடிதம் எழுதி ட்ரேகன் மாதிரி பயங்கரப் படங்களை அச்சிட்ட லுங்கியை வரவழைத்தான். ரௌடிக்கு முக்கியமானது இம்மாதிரி லுங்கியாயிற்றே! கஸ்டம்ஸில், 'லுங்கி' சைனாவிலிருந்து வந்தது என்று சந்தேகப்பட்டு ஆயிரம் விசாரணை செய்து, லுங்கி விலையை விட அதிகப் பணம் சுங்க வரியாக வசூலித்தனர். சிவப்புபனியன் விலை அதிகமாக இருந்தாலும் சுலபமாகக் கிடைத்துவிட்டது.

"தாயத்து ஒன்றுதான் பாக்கி. நீ நூறு சதவிகிதம் வில்லனாகிவிடுவாய்" என்று நண்பர்கள் சொல்ல, தாயத்து வேட்டை துவங்கினான்.

"தாயத்து செய்யணுமின்னா சுடுகாட்டுலே ராத்திரி பன்னிரண்டு மணிக்கு பூசைபண்ணி மை எடுத்து வந்து செய்யணும்" என்று சொல்லி ஏகப்பட்ட பணத்தைக் கறந்து ஒரு தாயத்தைச் செய்து கொடுத்தார் ஒருவர்.

ஜம்புவுக்கு ஒரே குஷி. கண்ணாடி முன் நின்று பார்த்தான். அசல் நூறு சதவிகித ரௌடிதான்.

"ஆஹா! நான் ஒரு ரௌடி...ரௌடி" என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டே அறையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த போது, அவனுடைய நண்பன் ஒருவன் அங்கு வந்து, "ஜம்பு, நீ ரௌடியாக உருவம் பெற்றால் போதுமா? உன் குரல் மாறவேண்டும். கொட்டாங்கச்சியைத் தரையில் தேய்ப்பதுபோல் குரல் இருப்பவன்தான் சினிமாவில் ரௌடியாக இருப்பான். தொண்டை கட்டிய தவளைக் குரலாவது இருக்க வேண்டும். இரும்பை ராவுகிற குரலினிமை கூட இல்லாவிட்டால் எப்படி?" என்றான்.

'வாய்ஸ் தெரபிஸ்ட்' என்கிற குரல் டாக்டர் டில்லியில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு டில்லி சென்றான்.

"கரகரப்புக் குரலாக மாற்றுவது சுலபமில்லை. ஆஸிட் மிக்சர், கிளாஸ் மாத்திரை, கருங்கல் பவுடர் தெரபி என்கிற பலவித ட்ரீட்மெண்ட் செய்யணும். பத்தாயிரம் ரூபாய் செலவாகும்" என்றார்.

அவ்வளவுதான். ஜம்பு ஒரே ஓட்டமாகச் சென்னைக்கு ஓடிவந்துவிட்டான். "ரௌடியாவது இவ்வளவு கஷ்டமா? சினிமாவைப் பார்த்து ரௌடியாக வேண்டும் என்று சுலபமாக நினைத்து விட்டோமே. போதுமடா சாமி. நாம் நல்லவனாகவே இருந்துவிடலாம்" என்று முடிவெடுத்தான். பழையபடி மோகன் குமாராகிவிட்டான்.

எழுத்தாளர் ஏகாம்பரம் கூறிய மோகன் குமாரின் கதையைக் கேட்ட பரிவிராஜக சர்மாக்களே! இனிமேலும் நீங்கள் சொல்லுவீர்களா, சினிமாவைப் பார்த்து இளைஞர்கள் கெட்டுப் போகிறார்கள் என்று.

அது அவ்வளவு சுலபமான காரியமில்லை!



கல் 1, மாங்காய் 4.

கருணமணாளன்

பண்டிகை சீஸனை யொட்டி அந்த ஜவுளிக் கடையில் வாடிக்கையாளர்கள் நிறைந்திருந்தனர். விற்பனைப் பிரிவிலிருந்த சிப்பந்திகள் அனைவரும் சுறுசுறுப்புடன் காணப்பட்டனர்.

ஜங்ஷனில் புதிதாகத் தோன்றி மளமளவென்று புகழின் சிகரத்தை எட்டிவிட்ட கடையாதலால் எல்லா விற்பனைப் பிரிவுகளிலும் வாடிக்கையாளர்கள் மொய்த்திருந்தனர்.

காஞ்சிபுரம், பனாரஸ் போன்ற பட்டுச் சேலைகளில் பின்னப்பட்ட சரிகைகள் மெர்க்குரி வெளிச்சத்தில் பளபளத்தன. பில் தயாரிப்பாளர்களின் பந்து முனைப் பேனாவின் மை கரையக் கரைய, கல்லாப் பெட்டியில் பணம் குவிந்து கொண்டிருந்தது.

இதையெல்லாம் மேலோட்டமாகக் கவனித்தபடி நின்றிருந்த ஹாஜி சலாவின் நெஞ்சம் உவகையால் விரிந்தது.

ஒரு காலத்தில் ஜவுளி மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராகக் கூவி விற்றுக் கஷ்டப்படும்போது இப்படி நாற்பத்தைந்தாவது வயதில் பல லட்சங்களுக்கு அதிபதியாகி, ஏர் கண்டிஷன் அமைக்கப்பெற்ற இந்த ஜவுளி மாளிகைக்கும் உரிமையாளராக இருப்போம் என்று அந்த நாளில் சலா எண்ணிப் பார்த்ததே இல்லை.

பிற்பகல்.

வாடிக்கையாளர்களின் வருகை குறைந்து கொண்டிருந்தது.

மறுபடியும் பழைய களை கட்டுவதற்கு மாலை நான்கு மணி ஆகவேண்டும்.

அப்போதுதான் ஹாஜி சலா கவனித்தார் ஷோ கேஸ் அருகே ஒரு சிறுவன். பெண் பொம்மைக்கு உடுத்திவிட்டிருந்த சேலையை ரசிப்பது போல் நின்றிருந்தான். 'இந்தப் பையன் பெற்றோரைத் தவற விட்டு விட்டானோ? ''பையா! உன்னை விட்டுட்டு உன் கூட வந்தவங்க போயிட்டாங்களா?''

''நான் 'பர்ச்சஸ்' பண்ண வந்திருக்கேன்!'' — ஏழெட்டு வயதுக்குள் நிற்கும் அந்தச் சிறுவன் கணீரென்று கூறினான்.

''என்ன வேணும் தம்பி, உனக்கு?''

ஆயிரக் கணக்கில் ஜவுளி வாங்க வரும் வாடிக்கையாளர்களிடம் கூட இவ்வளவு பணிவு கலந்த மரியாதையுடன் பேச நேரம் இல்லாத சலா, இந்தச் சின்னஞ் சிறுவனிடம் இப்படிக் குழைவுடன் உரையாடுவது மற்றவர்களுக்கு வியப்பாக இருந்தது.

''விலை உயர்ந்த புடவை இருக்கா? பார்த்ததும் கண்ணைக் கவரணும்!''

பையனுடைய தேவையைக் கேட்டுத் திகைத்தார் சலா.

தனக்காக ஏதாவது டிரஸ் வாங்குவான் என்று எதிர்பார்த்த சலாவுக்குச் சிறுவனின் தேவை சிறிது வியப்பை உண்டாக்கிற்று.

பட்டுச் சேலைப் பிரிவில் ஆயிரத்து நானூறு ரூபாய் சேலை ஒன்றை சலாவே தம் கைப்பட எடுத்துக் காண்பித்தார்.

சிறுவனின் கண்கள் திருப்தியால் மலர்வதை ஹாஜி சலா கவனிக்கத் தவறவில்லை.

''இதுவே இருக்கட்டும்!''

''சரி... இதை வாங்குவதற்கு உன்னிடம் பணம் இருக்கிறதா?''

''ஓ'' கையிலிருந்த பைக்குள் கையை விட்டு சிறிய டப்பா ஒன்றை எடுத்து ஹாஜி சலாவிடம் நீட்டினான். டப்பாவுக்குள் சில்லறையும் ரூபாய்களும் கலந்து இருந்தன. மொத்தத்தில் அறுபது ரூபா தேறும்.

''உன் பேரென்னப்பா?''

''எம் பேரா?... எதுக்கு?''

''பில்லிலே எழுத வேண்டும்.''

''இர்ஃபான்.''

''உன் தகப்பனார் பெயர்?''

''பஷீர் ஹக்!''

''இந்தச் சேலை யாருக்காகப் பிரசன்ட் பண்ணப் போறே?''

''எங்க அக்காவுக்கு!''

''சரி, எடுத்துக்க!''

''தாங்க்ஸ்!''

''இந்த டப்பாவையும் அதிலுள்ள காசையும் நீயே வைச்சுக்க!''

''அப்போ, சேலைக்குப் பணம் வேண்டாமா?''

''வேண்டாம்!''

''அப்படியானால் இந்தச் சேலையும் வேண்டாம்.''

''ஏம்ப்பா, இர்ஃபான்?''

''சொந்த உழைப்பில் வாங்காதது அவ்வளவு சிலாக்கியமில்லை.''

''நல்லாப் பேசறியே... உன் விருப்பப் படியே செய்றேம்ப்பா... நீ எத்தனாங் கிளாஸ் படிக்கிறே?''

''மூன்றும் வகுப்பு... இங்கிலீஷ்மீடியம்.''

''பேஷ்! நல்லா படிச்சு மூன்னுக்கு வா. தாகத்துக்கு என்ன சாப்பிடுறே... கூல்டிரிங்க் பாதாம்கீர்....?''

''நான் நோன்பு!''



அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பதில் மடம், பயிர்ப்பு என்பதன் பொருள்?

மடம்: யாரேனும் ஒன்றைச் சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு அது தனக்குத் தெரிந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் இருத்தல். ஒருவகை அடக்கமே மடம் என்பது. பிற ஆடவரைத் தொடும்படி நேர்ந்தால் உண்டாகும் அருவருப்பு உணர்ச்சியே பயிர்ப்பு என்பது.

கி. வா. ஜ.வின் நூலிலிருந்து
-ரேகா ராகவன்



''பரவாயில்லையே... உங்க வீட்டிலே எல்லோருமே நோன்பா?''

''ஆமாங்க!''

''அப்போ... உனக்கு, நீ இன்னும் டிரஸ் எடுக்கலியா, ரம்ஸான் டிரஸ்?''

''எங்க அப்பா வாங்கித் தருவாங்க!''

''அப்போ... இந்தச் சேலே?''

''எங்க அக்கா இருயாவுக்கு! நான் சொல்லிச் சொல்லிப் பார்த்து அலுத்துப் போச்சுங்க! அதனுலே, நாலே ஆறு மாசமா இந்த டப்பாவிலே எனக்குக் கிடைக்கிற துட்டுக்களை — ரூபாய்களைச் சேர்த்து எப்படியாவது ஒரு நல்ல புடவை வாங்கிக் குடுத்தாவது உடுத்தச் சொல்லணும்னு வந்தேன்.''

''உங்க வீட்டிலே அவ்வளவு கஷ்டமா— உங்க அக்காவுக்கு ஒரு புதுச் சேலே வாங்க முடியாத அளவுக்கு?''

''இல்லேங்க... எங்க அக்கா... ஏழெட்டு மாசமா....'' கேவினுன் இர்ஃபான்.

''அழாதே, இர்ஃபான்... சொல்!''

''வெள்ளைச் சேலே உடுத்தி, வெள்ளைச் சோளியே போடுறுங்க... எங்க அக்கா டிரஸ் பண்ணினு சினிமா நடிகை மாதிரி இருப்பாங்க... நெறையப் பேர் காலேஜ் ஸ்டுடன்டான்னுகூடக் கேட்பாங்க... பாருங்க ஏழு மாசத்துக்கு முன்னுலே எங்க மச்சான் உரக் கம்பெனியில் ஒரு விபத்திலே மரிச்சுப் போயிட்டாங்க.... அன்னியிலிருந்து தான் எங்க அக்கா இந்த வெள்ளைச் சேலேக் கட்ட ஆரம்பிச்சாங்க.... நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தேன். கேட்கலே. வகை வகையாய் வண்ணச் சேலேகள் இருந்தும் உடுத்த மாட்டேங்குறுங்க... அதனுலேதான் நான் வாங்கிட்டுப் போறேன் — உடுத்தச் சொல்லி!''

சிறுவனின் தகவலேக் கேட்டு ஹாஜி ஸலா சில கணங்கள் சிலேயானுர். சிறுகச் சிறுகக் கரைந்து கொண்டிருந்தார்.

இத்தனே ஆசையோடும், ஆர்வத்தோடும் அந்தச் சிறுவன் வாங்கிச் செல்லும் பட்டுச் சேலேயை நிச்சயமாக அவள் உடுத்த மாட்டாள். பெரியவர்களும் இதை அனுமதிக்க மாட்டார்கள். இந்த அரும்பின் நெஞ்சம் மலர வேண்டுமானுல்.... சிந்தித்தார்.

துள்ளிக் குதித்தோடும் சிறுவனேப் பின் தொடர்ந்தார் — ஹாஜி ஸலா.

இருபது நிமிஷ நேரம் நடந்து முடிந்த பிறகு ஹாஜி ஸலா நின்றிருந்த இடம், மசூதியை அடுத்த ஓர் அளவான இல்லத்தின் முன் வாசல்.

இர்ஃபான் வீட்டுக்குள் வேகமாக நுழைந்து சேலேப் பொட்டலத்தை ஏந்தியபடி ''இருயக்கா... இருயாக்கா!'' என்று இரைந்தான்.

வெண் துகிலில் ஒடுங்கிக் காணப்பட்ட ஒரு பருவக் கொடி ''எங்கேடா போயிருந்தாய்?... இவ்வளவு நேரமா உன்னைக் காணுமல் எவ்வளவு கவலேப்பட்டேன் தெரியுமா? ஊரெல்லாம் பிள்ளேயைக் கடத்துகிற பீதி ஆட்டிப் படைக்கிறதே... இது என்ன இர்ஃபான், பார்சல்?'' என்றுள்.

''சத் பரிசு!''

''யாருக்கு இர்ஃபான்?''

''உங்களுக்குத்தான் அக்கா! நான் போய் செலக்ட் பண்ணினேன்! பெருநாள் அன்னைக்கு நீங்க இதைத்தான் உடுத்தணும்... இல்லேன்னு....''

''இல்லேன்னு?''

''நான் சாப்பிட மாட்டேன்! உங்கள் எல்லோருடனும் டூ விட்டுடுவேன்!'' என்று கூறிக்கொண்டே பார்சலேப் பிரித்தான்.

வாடா மல்லிகை நிறத்தில் ஜரிகை பார்டரில் அந்தப் பட்டுச் சேலேயை விரித்துக் காட்டினுன்.

தலேயில் அடித்துக் கொண்டு குமுறி வரும் துயர வெள்ளங்களேக் கட்டுப்படுத்த முடியாமல் வாய் புதைத்துக் கொண்டு நகர்ந்தாள் அந்தத் தளிர்க்கொடி — இருயா.

''என்னங்க... வந்தவங்க வாசலிலேயே நின்னுவிட்ட மாதிரி இருக்கு... உள்ளே வாங்களேன்!'' மசூதியிலிருந்து திரும்பிய இர்ஃபானின் தந்தை பஷீருல் ஹக் அழைத்தார்.

உள்ளே சென்று ஹாஜி சலா, பல்லும் ஹக் காட்டிய நாற்காலியில் அமர்ந்தார்.

''உங்களுக்குச் சொந்த ஊர்?''

''திண்டுக்கல்! தூத்துக்குடியிலிருந்து இங்கே மாற்றலாகி வந்திருக்கிறேன். ஆர்.டி.ஓ. ஹக் என்றால் சாதாரணமாக எங்க டிபார்ட்மெண்ட்லே எல்லாருக்கும் தெரியும்.''

''இர்ஃபான் உங்களுக்கு....?''

''மகன்... நான்காவது! உங்களுக்கு இர்ஃபானை எப்படித் தெரியும்?''

''கடைப் பக்கம் வந்தான். அது இருக்கட்டும்... நீங்கள் என்னைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லையே... நான்... ஹாஜி சலா... ஜங்ஷன் ஜவுளிக் கடை நம்முடையது... அடுத்துக் கோவில்பட்டியில் ஒரு ஜின்னிங் மில் சமீபத்தில் ஆரம்பிக்க இருக்கிறோம்.... நான் வந்த விஷயம்....''

''சொல்லுங்கோ!''

''உங்கள் மகள் இனாயாவை என் மகன் முகம்மது நபிக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்ற எண்ணத்தில் வந்திருக்கிறேன். தொடர்ந்து பேசலாமா...அல்லது?''

''என்ன அப்படிக் கேட்டுட்டீங்க...? என் மகள் ஏற்கனவே....''

''ஓரளவு தெரியும். என் மகனுக்கும் கல்யாணம் ஆனது உண்டு. ஆனால்... மறு வருஷமே விஷக் காய்ச்சல் வந்து...வேண்டிய சிகிச்சை அளித்தும் பயன்படவில்லை.. அவள் காலமாகிவிட்டாள்... இப்போது ஆறு மாதமாகத்தான் மகன் நபி பழைய கலகலப்புடன் காணப்படுகிறான்...''

''மன்னிக்கணும்!''

''என்னங்க?''

''இரண்டு பேருமே துணையை இழந்தவர்கள். இவர்கள் மீண்டும் இணைவதை நான் விரும்பவில்லை.... ஏதற்கென்றால் கீறல் விழுந்த இசைத்தட்டுக்களைப் போன்ற இவர்களால் ஒருவரையொருவர் திருப்திப் படுத்திச் சந்தோஷமாக இருப்பது என்பது ஒரு முடியாத காரியம். இருவர் உள்ளங்களிலும் பழைய துயரம் அலைமோதிக் கொண்டே இருக்கும்போது. அங்கே இயற்கையான அன்பு மலர முடியாது... அதனால் தான்...''

''அப்படியானால் உங்கள் மகளின் எதிர்காலம்....?''

''கல்யாணம் ஆகாத பிள்ளையாகப் பார்த்துக் கட்டி வைக்கலாம் என்று இருக்கிறோம்!''

''பேஷ்! அப்படியானால் எனது இரண்டாவது மகன் இத்ரீஸ் இருக்கிறான்... அவனுக்குச் செய்து கொள்வோமே!''

''நிஜமாகவா?''

''ஆமாம்!''

''உங்கள் மூத்த மகன்?''

''உங்கள் கூற்றுப்படி கல்யாணம் ஆகாத பெண்ணாகத்தான்....''

''இப்படிச் செய்தால் என்ன?''

''எப்படி?''

''என்னுடைய இரண்டாவது மகள் கன்ஜுல் கிஃபாயா பேகத்தைச் செய்து வைத்தால் ஆயிற்று!''

''நிஜமாகவா?''

''ஆமாம்!''

''ஒரே கல்லில் நான்கு மாங்காயைப் பறித்து விட்டீர்கள்!'' ஹாஜி சலா மனம் விட்டுப் பாராட்டினார்.



மீனாட்சி

அண்ணனுக்குத் தம்பி குழிபறிக்கும் வாலி சுக்ரீவன் காலத்துக் கதைக்கு ஒரு பக்கம் சப்பாணி — கல்யாணராமன் மூலாம்; மறு பக்கம் மான் குரங்கு, மோப்பப் பாம்பு என்று கமால் வேலை.

மேஜர் நடிப்பில் மைனர். விஜய் பாபுவையும் தீபாவையும் மானும் குரங்கும் மிஞ்சுகின்றன. மண்ணாங்கட்டியாக வரும் சிறுவன் சுட்டி.

பாம்பைக் கோபப்படுத்த பாம்பாட்டி ஆடும் நடனம் நமக்குக் கோபம் தருகிறது. கொஞ்சம் கொஞ்சமாய்ப் படங்களில் சண்டை குறைந்து வருகையில் இப்படத்தில் நிறைய 'பல்டி'கள் அடித்துப் பறந்து போடும் சண்டை அபத்தம்.

மறுபடியும் சங்கர் — கணேஷ்.

மறுபடியும் சருனி ராஜன்.

லோகேஷின் கேமரா நல்ல உழைப்பு. சரியில்லா டெவலப்பிங்கினால் அடிக்க வருகிறது.

மலேசியா வாசுதேவன் பாடும் 'மண்ணாங்கட்டி மண்ணாங்கட்டி' பாடல் பொருத்தம்.

சருனி குரங்கைத் துகிலுரிக்க அது பதிலுக்கு சருனி குளிக்கையில் உடை திருடுகிறது. இந்த அம்புலி மாமா கதைக்கு டைரக்ஷன் இராம நாராயணன் — ஆர். கந்தசாமி.

—ஈனினி சாஸ்திரி

வள்ளலார் மகாத்மா காந்தி விழா

அக்டோபர் 1ஆம் தேதி முதல் 6ஆம் தேதி முடிய சென்னை மயிலாப்பூர் ஏ. வி. எம். இராஜேசுவரி திருமண மண்டபத்தில் மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை நடைபெறுகிறது.

தலைமை நீதிபதி மாண்பமை மு. மு. இசுமாயில், மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம். தியாகராயர் கல்லூரி முதல்வர் டாக்டர் சுப. அண்ணாமலை, உயர் நீதிமன்ற நீதிபதி ச. மோகன், முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், திரு. ஊரன் அடிகள், திரு. சிலம்பொலி செல்லப்பன் முதலிய 60க்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்கின்றனர்.

முதல் நாள் 1-10-80 அன்று மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களும், மேலவைத் தலைவர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்களும் பேசுகிறார்கள்.

2-10-80 காந்தி ஜயந்தி அன்று காலை 10 மணிக்குக் கவிஅரங்கம் தொடங்குகிறது. பிரபல கவிஞர்கள் பத்துபேர் கலந்து கொண்டு கவி பாடுகின்றனர்.

5-10-80 அன்று காலை 7-30 மணி முதல் இரவு 9 மணி வரை வள்ளலார் ஜயந்தியும், சன்மார்க்க மாநில மாநாடும் நடைபெறும்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்தும் நூற்றுக்கணக்கான சன்மார்க்க அன்பர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். அருட்பா அரசி திருமதி குருவாயூர் பொன்னம்மாள் குழுவினரின் திருஅருட்பா இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

காந்தி காதை நூல் வெளியீடு, திரு. தெ. பொ. மீ. படத் திறப்பு, திருஅருட்பா இசைப்போட்டி பரிசளிப்பு ஆகியவைகளும் இடம் பெறுகின்றன.


ஆறு நாட்களிலும் திரு. கிரிதாரி பிரசாத் உரையாற்றுகிறார். காலையில் கீதைப் பேருரை நிகழ்த்துகிறார்.

வருக! வருக! எல்லோரும் வருக!

நா. மகாலிங்கம், தலைவர்

இராமலிங்கர் பணிமன்றம், சென்னை - 86

கடுகு பதில்கள்!



✠ ஏ. ஸ்ரீ. அசோக்ராஜா, தஞ்சாவூர்-1

கே. ஒரு திரைப்படம் பார்ப்பதற்காகச் செலவு செய்யும் தொகையில் மூன்றில் ஒரு பங்கு கூட பத்திரிகைகளுக்குச் செலவு செய்வதில்லையே?

ப: திரைப்படம் பார்க்கும் செலவை விடுங்கள். தியேட்டருக்குப் போய்வர ஆகும் டாக்ஸி செலவு, பாப்கார்ன், ஐஸ் கிரீம், எஸ்பிரஸ்ஸோ காப்பி இவைகளுக்கு ஆகும் செலவைக் குறைத்தாலாவது பத்திரிகைகள் வாங்கலாமே. புத்தகங்கள் வாங்கும் பழக்கமோ ரொம்பக் குறைந்து விட்டது.

✠ ப. குணசேகரன், சிதம்பரம்

கே. புதுக் கவிதையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஆபாசமான புதுக் கவிதைகள் இப்போது மங்கிப்போய்விட்டன. புதுமையான கருத்துக்களுடன் பல புதுப்பட்டாலும் தன்னுடைய வெட்டிக்காரத் தனத்தைக் காட்டவும் வாசகர்களைக் குழப்பவும் தான் பலர் முயற்சி செய்கிறார்கள்.

✠ சுதா மணிசேகரன், வேலூர்

கே. பதில் உங்கள் துணைவியாரிடம் கேட்டுத்தான் எழுதுகிறீர்களாமே?

ப: துணைவியாரிடம் பேச்சைக் 'கேட்டு'க் கொள்வதுண்டு; பதில்கள் அல்ல!

✠ பூவை விமலன், சென்னை-17

கே. பொறுமை என்கிற பண்பைக் கொண்டுள்ள எருமையைப் பழிக்கிறார்களே?

ப: உங்களுக்கு "அளவுக்கு மிஞ்சினால்..." பழமொழி தெரியாதா? ஆங்கிலத்தில் 'சைலன்ஸ் ஈஸ் கோல்ட்' என்று சொல்வார்கள். அதற்காக ஊமைகளாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. எதற்கும் ஓர் அளவு இருக்க வேண்டும்.

✠ ஆ. மாதேஸ்வரன், சென்னை-49

கே. இதுவரை எத்தனையோ புனைப் பெயர்களில் கதைகள், துணுக்குகள் எழுதி அனுப்பி வந்தேன். எதுவும் பிரசுரமாகவில்லை. இனி சொந்தப் பெயரில் எழுதி அனுப்பப் போகிறேன். என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: புதுப் புனைபெயர்கள் கண்டுபிடிக்கும் கற்பனையும் வறண்டுவிட்டதோ என்று!

✠ ஆர். திருநாவுக்கரசு, திருமருகல்

கே. என், காதலிக்குத் துணிந்து காதல் கடிதம் எழுதினேன்: "நீ என் மீது வீசப் போவது கிஸ்ஸா, செருப்பா?" எப்படி?

ப: அறுப்பு.

✠ ஜி. அல்போன்ஸ், நாகை

கே. மேலை நாடுகளில் சமீப வருஷங்களில் நிர்வாண மோகம் தலைகேறியுள்ளதே?

ப: முதலாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் பிறந்தது இந்தப் பிறந்த மேனி மோகம். 1930லேயே அமெரிக்காவில் சுமார் 100 நியூடிஸ்ட் கிளப்கள் இருந்தனவாம். ஆகவே இந்த மோகம் தற்போது அலுத்துப் போய்விட்டதாம் அங்கு.

✠ கலாவதி பாண்டியன், சேலம்-2

கே. கண்ணதாசன் 'அர்த்தமுள்ள கிறுத்துவ மதம்' எழுதுவாரா?

ப: பைபிளை எழுதியதால் இப்படிக் கேட்கிறீர்களா? எந்த மதத்திலும் பல உயர்ந்த தத்துவங்களும் வாழ்க்கை நெறி முறைகளும் உள்ளன. அவை யாவும், எல்லோருக்கும் பயன் தரக்கூடியவை. ராமாயணத்தை முழுவதுமாக எளிய கவிதையாகக் கவியரசு எழுத வேண்டும் என்பது விருப்பம்; கோரிக்கை.

✠ மு. சிவகுமார், அரியலூர்

கே. சத்யஜித்ரேயின் படங்களில் தங்களுக்குப் பிடித்தது எது?

ப: ரேயின் படங்கள் தொல்காப்பியம் மாதிரி. பார்த்தவர்கள் (அல்லது படித்தவர்கள்) குறைவு; பாராட்டுபவர்கள் அதிகம். ரேயின் படங்கள் எனக்குப்பிடிக்கவில்லை.


✠ டி. எஸ். ரெட்டி, வேலிப்பட்டி

கே. விரும்பி ரசித்த ஜோக் ஒன்று....?

ப: என் நண்பரின் பையன் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தபோது ஒரு விமானக் கம்பெனியின் விளம்பரம் கண்ணில் பட்டது. "இந்தப் பிளேன் எங்கே போகிறது?" என்று கேட்டான். "இது அமெரிக்கா போகிற PAN AM விமானம்" என்றார் அங்கு வந்திருந்த ஒருவர். "நாம் இந்தப் பிளேனில் அமெரிக்கா போகலாமா?" என்று கேட்டான். "போகலாம். PAN AM விமானத்தில் போகணும் என்றால் நிறைய 'PANAM' (பணம்) தேவைப்படும்" என்றார் அந்த ஒருவர். (விரும்பி ரசித்ததின் காரணம் அந்த 'ஒருவர்' அடியேன் தான்!)

பரிசு பெறுபவர்:

ஏ. ஸ்ரீ. அசோக்ராஜா
16, கிருஷ்ணன் கோவில் 3-வது தெரு,
மானம்புசாவடி, தஞ்சாவூர்-1



கிருஷ்ணமூர்த்தி: உயிர் காக்கும் விஷயங்களை நாம் ஒதுக்கித் தள்ளக் கூடாது. ஸ்கூட்டரில் ஓட்டுனராக இருந்தாலும் சரி, பின்னால் உட்கார்ந்திருப்பவராக இருந்தாலும் சரி உயிர் இருவருக்கும் முக்கியமானதே. எனவே ஆண் பெண் என்ற பேதமின்றி ஹெல்மெட் அணிந்தே தீரவேண்டும். பெண்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம், அழகுக்குப் பங்கம் வரும் என்று. அழகு முக்கியமா உயிர் முக்கியமா?

மீனு: ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்டில் மட்டும்தானா. சாலை ஓரத்திலுள்ள நடைபாதையின் மேல் நடந்து சென்றாலும் கூட பஸ்ஸோ, காரோ இடித்து மரணம் சம்பவிப்பதில்லையா? மேலும் ஒரு பெண்ணைப் பின்னால் ஏற்றிக் கொண்டு பயணம் செய்யும் எவருமே மெதுவாகத்தான் வண்டி ஓட்டுவார்கள். விபரீதத்தை எதிர் கொண்டு அழைக்க மாட்டார்கள். அப்படியே ஓட்டினாலும் பின்னால் உட்கார்ந்திருக்கும் மனைவியோ காதலியோ, சகோதரியோ பயந்து மெல்ல ஓட்டச் செய்வார்கள். ஆண்கள் தனியாகப் போகும்போதோ அல்லது நண்பருடன் போகும்போதோ தான் பெருமையாக வேகத்தைக் காட்டுவார்கள். எனவே அப்போதுதான் ஹெல்மட் அவசியம். ஒரு கல்யாணத்துக்குப் போகிறோமென்றால் அழகாகக் கொண்டை போட்டுக் கொண்டு எப்படி ஹெல்மெட்டை அணிந்து கொள்வது? கண்ணாடி அணிந்து கொண்டாலே பல பேரின் முகம் மாறி அழகில்லாமல் போய் விடுகிறது. ஹெல்மெட் அணிந்தால் அழகு அதிகரிக்குமா என்ன? ஸ்கூட்டர் உருவானதே பெண் இனத்துக்காகத்தான். ஆனால் ஆண்கள்தாமே அதை அதிகம் உபயோகிக்கிறார்கள்? இதற்காகவே ஹெல்மெட் அணிதல் என்ற தண்டனையை அவர்கள் பெற்றால் என்ன?



புதிய சட்டம்: ஹெல்மெட் அணிந்தே ஆகவேண்டும்

• • •

இந்தியாவிலேயே முதன் முதலாகஃபைபர் கிளாஸ் ஹெல்மெட்டைத் தயாரித்த நிறுவனம் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்று சொன்னால் நமக்குப் பெருமையாக இருக்கிறது இல்லையா? நிறுவனத்தின் பெயர்: கான்காட் அரை (Concord Arai Pvt. Ltd.,) இதற்கு முன்பு கனமான அட்டை போன்ற ஃபைபர் போர்டில் மட்டுமே செய்து கொண்டிருந்தார்கள். ஃபைபர் கிளாஸ் அலுமினியத்தை விட எடையில் குறைந்தது. ஆனால் எஃகை விட உறுதியானது. பலமுள்ளது.

மகாபலிபுரம் போகும் சாலையில் மேட்டுக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையில் நாற்பது பேர் வேலை செய்கிறார்கள். யந்திர பிளாஸ்டிக் மோல்டிங் முறையில் பத்து நிமிடத்தில் ஒரு ஹெல்மெட் தயாராகிறது. "நாங்கள் இன்னும் சிறுதொழில் நிறுவனம்தான். இதையே குடிசைத் தொழிலாகவும் பலர் செய்து கொண்டு வருகிறார்கள். விலையும் மலிவு. ஆனால் தரம் குறைந்துதான் இருக்கும். எங்களது ஹெல்மெட் விலை 75 ரூபாயிலிருந்து 110 ரூபாய் வரை. நாங்கள் பல வண்ணங்களில் தயாரித்தாலும் அதிகம் விற்கும் வண்ணம் வெள்ளை தான். காரணம் வெள்ளை நிற ஹெல்மெட் அணிந்தால் வெய்யில் தெரியாது. அடுத்த படியாக அதிகம் விற்பது நீலம், மஞ்சள். ஒரு நாளைக்கு 300 ஹெல்மெட்டுகளை உற்பத்தி செய்கிறோம்" என்றார் நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர் திரு ராமகிருஷ்ணன்.

தொழிற்சாலை வேலையாட்கள், குதிரை ஏற்றம் செய்பவர்கள், சுரங்கங்களில் வேலை செய்பவர்கள், காவல் துறையினர், போன்றோருக்கும் இவர்கள் ஹெல்மெட் தயாரிக்கிறார்கள். துப்பாக்கி ரவை கூடப் புக முடியாத ஹெல்மெட்டும் உருவாக்குகின்றனர் ராணுவத்தினருக்கு. வெளி நாடுகளுக்கும் இவர்களுடைய ஹெல்மெட்டுகள் ஏற்றுமதியாகின்றன.

பேட்டி: **"சலன்"**

மேலட்டையில் **கிருஷ்ணமூர்த்தி, மீனு**

வண்ணப்படம் எடுத்தவர்: **யோகா**

அத்தியாயம் 62

கதைக்குக் காலமில்லை

பூர்ணகட் துறைமுகப் பகுதியில் ஆள் காட்டி விரலை ஊன்றிய இந்திரஜித் அனந்த் நீண்ட நேர சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் சிந்தனையின் ஆழத்தையும் அதன் விளைவாக அவ்வப்பொழுது முகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாறுதல்களையும் கவனித்த விவாஸியரும், அதுவரை சண்டையிட்ட இரு பெண்களும், அவன் யோசனையில் குறுக்கிடாமல் மௌனமாகவே நின்றனர். பூர்ணகட்டில் ஊன்றியிருந்த அவன் விரல் திடீரென பூர்ணகட்டுக்கும் மேலேயிருந்த ஜெய்கட் கோட்டைக்குச் சென்று மறுபடியும் கரையோரமாகவே சிந்து தூர்க்கம் வரை வந்து நிலைத்து நின்றுவிட்டதையும் கவனித்த விவாஸியருக்கும் சாருவுக்கும் ஏதும் புரியாவிட்டாலும் ராணி மட்டும் அவன் இதயத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டதால் சிறிது ஆனந்தப் புன்முறுவல் கொண்டாள். ''உண்மை. மேலைக் கடலோரத்தில் எல்லாக் காலங்களிலும், எல்லா சமயங்களிலும் உட்புகக் கூடிய பந்தோபஸ்தான துறைமுகம் வேறு எதுவும் கிடையாது. நாம் சிந்து தூர்க்கத்தை விட்டுக் கிளம்பி விட்டதால் மாக்ரே நம்மைச் சந்திக்க முயலும் இடம் தேவ்கட் ஒன்று தான்'' என்று கூறினாள்.

அனந்த் தலையசைத்தான் யந்திரம்போல. ''ஆகவே நாம் முதலில் நினைத்தபடி தேவ்கட்டில் தங்காது போகும் பட்சத்தில் மாக்ரே நமது யோசனைகளைப் புரிந்து கொள்ளவும் செய்யலாம். பின்னால் வரும் டெய்லரும் நம்மைச் சந்தேகித்தாலும் சந்தேகிக்கலாம். எந்த சந்தேகத்துக்கும் இடம் கொடாதிருப்பது நல்லது. தேவ்கட்டில் ஒரு நாள் தங்குவோம்'' என்று அனந்த் சொன்னான் படத்தை நோக்கிக் கொண்டே.

கடல் ராணி அனந்தின் முகத்தைப் பார்க்க முடியாவிட்டாலும் முரட்டுக் குழல்களுடன் காட்சியளித்த குனிந்த அவன் தலையை நோக்கினாள். ''ஒரு நாள் தங்குவதால் என்ன பலன் ஏற்படப் போகிறது?'' என்று கேட்டாள் ராணி.

அனந்தின் தலை சிறிதுகூட நிமிரவில்லை. ''தேவ்கட் துறைமுகம் மிக அழகானது. அதற்குள் பாய்ந்துள்ள கடலின் ஆழம் அதிகமாதலால் அலை அதிகமில்லை. அங்கு வட்டமான துறைமுகத்தில் பெரிய குளம் போன்ற நீல நிற நீரும், அக்கம் பக்கங்களில் எழும் பெரும் மலைச் சரிவுகளும், அவற்றில் முளைத்திருக்கும் செழித்த மரங்களும் மனத்தை மயக்கும். தவிர துறைமுக ஆழமும் எந்தக் கப்பலுக்கும் இடமளிக்கும்'' என்றான் அனந்த் குனிந்த வண்ணம்.

தேவ்கட்டின் அழகும் ஆழமும் அது அளிக்கக்கூடிய பாதுகாப்பும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாதலால் அதை எதற்காகத் திரும்பச் சொல்கிறான் அனந்த் என்பது இரு பெண்களுக்கும் புரியாததால் ''நாம் தேவ்கட்டின் அழகை ரசிக்கவா செல்கிறோம்?'' என்று வினவினாள் சாரு.

அனந்த் சிறிது தலையை நிமிர்த்தி வினவினான் ''அழகை ரசிப்பதில் என்ன தவறு?'' என்று.

இந்தக் கேள்வி மிக விசித்திரமாக இருக்கவே ''இந்தத் தேசப் படத்தை நாம் விரித்துப் பார்த்துக் கொண்டிருப்பது அழகான இடங்களைக் கண்டுபிடிக்க அல்ல. போருக்கு வசதியான இடத்தைக் கண்டுபிடிக்க முயலுகிறோம்'' என்றாள் ராணி.

''அழகான இடத்தில் போரிட்டால் தவறு ஏதேனும் இருக்கிறதா?'' என்று வினவினான் அனந்த்.

விவாஸியருக்கு அவர்கள் உரையாடலின் போக்கு விளங்காததால் தனது கண்களால் அனந்தின் கண்களை அளவெடுத்தான். ''அனந்த்! தற்சமயம் இந்தக் கப்பலின் தலைவன் யார்?'' என்று வினவினான்.

''நீதான் விவாஸியர்'' என்று அனந்த் சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான்.



விவாளியர் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. "கப்பல் எதற்காக எந்த இடத்தில் நிறுத்தப்படுகிறது? பிறகு எங்கு போகும்? என்ன அலுவல் புரியும்? இந்த விஷயங்களை அறிந்துகொள்ளக் கப்பல் தலைவனுக்கு உரிமை உண்டு என நினைக்கிறேன்" என்று சொன்னான் புன்முறுவலின் ஊடே.

"உண்டு" என்று சொன்ன அனந்த் "விவாளியர்! நாம் புறப்படு முன் காஸண்ட்ரா தலைவர்களுடன் போர் முறைகளைப் பற்றிக் கலந்து பேசவில்லை" என்றான்.

"ஆம். அதற்கு அவகாசமும் இல்லை, அவசியமும் இல்லை என்று நினைத்தோம்" என்று விவாளியர் . குறிப்பிட்டான்.

"ஆம். ஆனால் நம் மனப் போக்கு முழுவதும் டெய்லருக்கோ இங்கலண்டுக்கோ தெரியாது. அவர்களுக்கும் எடுத்துச்சொல்லி மாக்ரேயுடன் நாம் மோதும்போது யார் யார் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாமல்லவா?" என்று வினவினான் அனந்த்.

"யூ மீன் எ பிரிலிமினரி கான்பரன்ஸ்? (பூர்வாங்க ஆலோசனை செய்ய வேண்டும் என்கிறாயா?)" என்று கேட்டான் விவாளியர்.

"டோன்ட் யூ திங்க் தட் ஈஸ் பெட்டர் (அது நல்லது என்று நீ நினைக்கவில்லையா?)" என்று அனந்த் வினவினான்.

விவாளியர் சில வினாடிகள்தான் சிந்தித்தான். பிறகு ஏதோ புரிந்துகொண்டவன் போல் "சரி சரி. முற்றிலும் சரி" என்றான்.

எதை விவாளியர் புரிந்து கொண்டுவிட்டான்? எதை சரி என்கிறான்? என்று இரு பெண்களுக்கும் புரியாததால் "எது சரி?" என்று இருவரும் ஏககாலத்தில் கேட்டார்கள்.

"அனந்தின் யோசனை" என்று விவாளியர் பதில் சொன்னான்.

அப்பொழுது வினவினான் அனந்த்: "விவாளியர்! வில்வர் நாளைக்கு எப்பொழுது எழுந்திருப்பான்?" என்று.

இதற்கு ராணி பதில் சொன்னாள். "வில்வர் உறக்கத்திலும் விழித்திருப்பவன்.. எந்த விநாடியிலும் எழுந்திருப்பான். இப்பொழுது கூட அவன் இந்த அறைக் கதவுக்கு அப்பால் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கலாம்" என்று.

அனந்த் ராணியைப் பார்த்து "வில்வர் இன்று ஒட்டுக் கேட்கவில்லை. நாளைக்கும் ஒட்டுக் கேட்பானா என்பது சந்தேகம் ராணி" என்று விளக்க முற்பட்டான்.

அந்த விளக்கத்தைத் தடுக்க முற்பட்ட விவாளியர் "ராணி! எந்த மாலுமி வாழ்க்கையும் கஷ்டமானது. ஆகையால் அவர்கள் சற்று நிம்மதியாகத் தூங்க வேண்டியதும் அவசியம்" என்றான்.

ராணிக்கு உண்மை புலப்படவே முகத்தில் கவலையைக் காட்டினாள். "டிட் யூ கில் ஹிம்





இப்படத்தின் கதை அடிமைகள் வியாபாரத்தைப் பற்றியது. கொலம்பியா பிக்சர்ஸ் தயாரிப்பான இப்படத்துக்கு இந்திய அரசு தடை விதித்து விட்டது!

அடிமை வியாபாரத்தை.....

வில்லியர்? (அவனைக் கொன்றுவிட்டாயா வில்லியர்?)'' என்று வினவினாள் கவலை குரலிலும் தெரிய.

வில்லியர் முகத்தில் அனுதாபம் தெரிந்தது. ''லேடி! ஐ ஆம் நாட் எ மர்டரர் (பெண்ணே! நான் கொலைகாரனல்ல)'' என்று கூறினான்.

''தென் வாட் டிட் யூ டூ டு ஹிம்? (அவனை என்ன செய்தாய்?)'' என்று வினவினாள்.

வில்லியர் தனது அழகிய முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான் வலது கையால். ''ஐ ஜஸ்ட் கேவ் ஹிம் ஸ்லீப். அண்ட் ஸ்லீப், டியர் லேடி, ஈஸ் எ மான்ஸ் பர்த்ரைட் (அவனுக்குத் தூக்கமளித்தேன். அம்மணி! தூக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை)'' என்று விளக்கினான்.

நடந்தது என்னவென்பதை சாரு ராணி இருவருமே புரிந்து கொண்டதால் புன்முறுவல் செய்தார்கள். ''யுவர் பிலாஸபி ஈஸ் எக்ஸலண்ட், யுவர் மெதேட் ஒண்டர்புல் (உங்கள் தத்துவம் சாலச் சிறந்தது. வழிமுறையும் பிரமிக்கத் தக்கது)'' என்று சம்பாஷணையில் கலந்துகொண்டாள் சாரு.

வில்லியர் சாருவை மிகுந்த மரியாதையுடன் நோக்கினான். ''சார்மிங் லேடி! யுவர் அண்டர்ஸ்டாண்டிங் ஆப் த மெதேட் ஈஸ் வெரி நைஸ். ஐ ஆம் ப்ளாட்டர்ட் பை யுவர் அக்ஸப்டன்ஸ் ஆப் மை மெதட் (அழகியே! என் வழியை நீ திட்டமாக அறிந்து கொண்டிருக்கிறாய். அதை நீ ஒப்புக்கொண்டது எனக்குப் பெருமையைத் தருகிறது)'' என்று கூறித் தலையும் வணங்கினான்.

''வில்லரின் மதுவில் மருந்தைக் கலந்து துயில வைப்பது பாராட்டுக்குரிய விஷயமல்லவென்றாலும் தற்சமயம் வில்லர் தூங்குவதில் அர்த்தமிருக்கிறது'' என்று கூறினான் அனந்த். அத்துடன் சொன்னான்: ''வில்லியர்! வி டூ மஸ்ட் ஹாவ் ஸம் ஸ்லீப். ஆல்ரெடி த நைட் ஹாஸ் ரன் அவுட் மச் (வில்லியர் நமக்கும் உறக்கம் வேண்டும். இரவும் பெரிதும் கழிந்துவிட்டது)'' என்றான்.

அதற்கு ஒப்புதல் தெரிவிக்க வில்லியர் தலையை வணங்கி ''குட் நைட் டு யூ அனந்த். குட் நைட் டு யூ லேடீஸ். ஹாவ் குட் ரெஸ்ட் அண்ட் ப்ளெஸண்ட் ஸ்லீப் தோ ஐ டௌட் வித் அனந்த் ட்ரெபிளிங் யூ வெதர் தட் ஈஸ் எ பாஸிபிலிடி (குட் நைட் அனந்த். குட்நைட் பெண்களே. நன்றாக இன்பமாக உறங்குங்கள். இருப்பினும் அனந்த் உங்களைத் தொடரும்போது உறக்கம் கிடைக்குமா என்பது சந்தேகம்)'' என்று சொல்லி நகைத்தான்.

இரு பெண்களும் அவன் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டாலும் அனந்த் மகிழ்ச்சியை முகத்தில் காட்டவில்லை. ''குட் நைட் வில்லியர்!'' என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். இரு பெண்களும் அவனைத் தொடர்ந்து அறைக்கு வெளியே வந்ததும் ''நீங்கள் அறைக்குச் செல்லுங்கள். நான் வில்லரைப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று வில்லர் காவலில் வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கி நடந்தான். அவன் எதிர்பார்த்தபடிதான் சகலமும் இருந்தது. வில்லர் அந்த அறையில் இல்லை. பல மாலுமிகள் சுரணையின்றி உறங்கிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட அனந்த் மெதுவாகப் பூனை போல் அடி வைத்து கப்பல் தளத்தைச் சுற்றிச் சென்றான். இருள் நன்றாகக் கவிந்திருந்தாலும் தளத்தின் முக்காலவாசி விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததாலும் அறையி

அஷாந்தி என்ற இப்படத்தில் பிரபல நடிகர் மைக்கேல் கேனுடன், இந்தி நடிகர் கபீர் பேடியும் (படம்) தோன்றுகிறார். ஒமார் ஷெரிபும் உண்டு.
படம் தடை செய்யப்படுவதற்கு முன்பே ஆறு பிரதிகள் இந்தியாவிற்கு வந்து விட்டன. அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. தியேட்டரில் திரையிடத் தடை இருந்தாலும் வீடியோ டேப்பில் (Vedeo T.V.) ரொம்பப் பேர் வீட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்!
- சிக்தி



சுட்டுத் தள்ளு!

விருந்த நல்ல வெளிச்சத்திலிருந்து அனந்த் வெளியே வந்திருந்ததாலும் தளத்தின் இருட்டுக்கு அவன் கண்கள் ஈடுகொடுக்க முடியவில்லை. மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து சென்றான் அனந்த். நடுப் பாய்மரத்தை அடைந்து அதில் மறைந்து நின்று தலையை மட்டும் வெளியே நீட்டினான்.

சற்றுத் தூரத்தில் தளத்தின் பலகைக்கு அருகில் நின்று கொண்டிருந்தான் ஸில்வர். அவன் கையிலிருந்து சிறு விளக்கு ஒன்றை நன்றாக உயர்த்தி ஆட்டிக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று முறை விளக்கை ஆட்டிவிட்டுச் சிறிது நிதானித்தான்.

பின்னால் வந்து கொண்டிருந்த காலண்ட்ராவின் தளத்திலிருந்து ஒரு விளக்கு பதிலுக்கு ஆட ஆரம்பித்தது. மும்முறை ஆடி நின்றது. மீண்டும் ஸில்வர் விளக்கை ஆட்டினான். காலண்ட்ராவிலிருந்து பதிலும் வந்தது. அனந்த் அந்த விளக்குகள் சொன்ன கதையைப் புரிந்து கொண்டதால் ஓரளவு கவலை அவன் முகத்தில் தாண்டவமாடியது. பிறகு புன்சிரிப்பு ஒன்றும் அவன் இதழ்களில் அரும்பியது. "ஐ ஹாப் ஆன் மை ஹாண்ட் ஒன் ஆப் த ஒர்ஸ்ட் ஸ்கௌண்ட்ரல்ஸ் ஆப் த ஸீபேரிங் கம்யூனிடி "(கடலோடும் வர்க்கத்தில் பரம அயோக்கியர்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனை என் தலையில் கட்டிக் கொண்டிருக்கிறேன்)" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அனந்த்.

அந்த சமயத்தில் தனது வேலை முடிந்துவிட்டதென்ற எண்ணத்தால் குதூகலப்பட்ட உள்ளத்துடன் ஸில்வர் தனது கைத்தடியை அதிக ஓசைப்படாமல் மெல்ல ஊன்றி நடந்தான் தனது அறையை நோக்கி. அறையை அடைந்ததும் அங்கு மயங்கிப் படுத்திருந்த மாலுமிகளில் இருவரைக் காலைப் பிடித்து இழுத்து ஒரு பக்கமாகக் கிடத்தினான். "காம்ரேட்ஸ்! வீலாண்டியர்ஸ் மெடிஸன் ஈஸ் குட், வெரி குட். ஸ்லீப் டார்லிங்ஸ் (தோழர்களே! விலாண்டியரின் மருந்து நல்லது, மிக நல்லது, தூங்குங்கள் அன்பர்களே" என்று கூறிவிட்டு அவர்களை விலக்கியதால் கிடைத்த இடத்தில் படுத்துக் கண்களை மூடினான். சற்றுஎட்ட ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த அவன் அகரக் கிளி தத்தி அவனை நோக்கி ஓடிவரவே அதைப் பிடித்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் நன்றாக உறங்கிவிட்டான் ஸில்வர். கிளியும் தலை சாய்த்துப் படுத்தது.

இவையனைத்தையும் அறைக் கதவின் ஓரத்தில் கதவின் மறைவில் நின்று பார்த்தான் இந்திரஜீத் அனந்த். அத்துடன் ஸில்வர் படுத்திருந்த இடத்துக்குச் சற்று எட்ட இருந்த மேஜை மீது குவளையொன்று கவிழ்ந்து கிடப்பதையும் அதிலிருந்து மது மேஜை மீது பரவிக் கிடப்பதையும் சிறிதளவு ஓரத்தில் கூட வழிந்து கிடந்ததையும் கவனித்தான். அன்றிரவு அங்கு நடந்த முழுக் கதை அவன் கண் முன்பு விரிந்தது.

அந்தக் கதையைச் சொல்ல இரு பெண்களும் இருந்த அறைக்குச் சென்றான் அனந்த்.

"இப்பொழுது எதற்குக் கதை? பொழுது விடிய அதிக நேரமில்லை" என்றாள் ராணி.

"கதைக்குக் காலமில்லை" என்ற இந்திரஜீத் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த பஞ்சணையொன்றில் உட்கார்ந்து கதையைச் சொல்லத் துவங்கினான்.

(தொடரும்)



பொள்ளாச்சி கல்கி நியூஸ் ஸ்டாலின் உரிமையாளர் திரு. N. மாணிக்கம் செட்டியார் அவர்களின் பௌத்திரியும், திரு. M. வெள்ளியங்கிரி செட்டியாரின் ஜேஷ்ட குமாரத்தியுமான சௌபாக்யவதி கிருஷ்ணகுமாரி (M.A.) க்கும், தேனி நிலக்கிழார் செ. மாரியப்பன் செட்டியார் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி தங்கமணி M. Sc. க்கும் சமீபத்தில் பொள்ளாச்சியில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்.

தியானம் பயில



ஸ்வாமி சின்மயானந்தா

தியானம் செய்ய அமரும்போது மனத்தை ஆனந்தத்தால் நிரப்பிக் கொள்ள வேண்டும். நமக்குக் கவலைகள் இல்லாமல் இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனாலும் தியான மண்டபத்துக்கு வரும்போது வெளியிலே பாதரக்ஷையைக் கழற்றி விடுவது போலக் கவலைகளையும் விட்டுப் புகுவோம். தியான பீடத்துக்குக் கவலைகளைக்கூப்பிட்டு அமர்த்த வேண்டாம். அலுவலக விசாரம், மற்ற விசாரம்எல்லாவற்றையும் ஒரு கிளப்புக்குள் நுழைந்தவுடன் விட்டு விடுகிறோமல்லவா? அப்படி இங்கும் கவலையற்று விச்ராந்தியாயிருக்க வேண்டும். கவலைகளை உதறிவிட்டுத் தானே தூங்க முயல்கிறோம்? அப்படியே இங்கும் பாரத்தைத் தள்ளி வைத்துவிட வேண்டும். நம்முடைய அன்புக் கடவுளுடன் கூடப் போகிறோம் என்ற ஆனந்தத்தால் உள்ளத்தை நிரப்பிக்கொள்ள வேண்டும். எவருக்கும் விசாரங்கள் இருக்கத்தான் செய்யும். என்றாலும் இச்சமயத்தில் அவற்றை அடையாளம் கண்டுகொள்ள மறுத்து விடுங்கள்.

ஆனந்த பாவத்திலேயே மனம் மிருதுவாகி, நெகிழ்ந்து கொடுப்பதாக ஆகும். அதன் ரூபத்தையும், வளைவுகளையும் எளிதே நாம் மாற்றலாம். இதனால்தான் இன்னொரு நபரை நம் எண்ணப்படி திருப்புவதற்குத் தூண்டும்போது முதலில் அவரை ஸந்தோஷப்படுத்தித் திருப்தி உண்டாக்க முயலுகிறோம்; பிறகே நம் கருத்தை வெளியிடுகிறோம்.

இப்படிப்பட்ட சாந்தமான, ஸந்தோஷமான மனத்தோடு உங்களது குருவுக்கோ, இஷ்ட தேவதைக்கோ மானஸிகமாக நமஸ்காரம் செய்யுங்கள். உங்களது அஹங்காரத்தை அவர் பாதத்தில் போட்டு, சரண் செய்யுங்கள். ''ஹே பகவான்! என்னை முன்னே நடத்திச் செல்! எனக்கு வழிகாட்டு! எனக்கு எங்கே போக வேண்டும் என்பதே தெரியவில்லை. ஆனால் எனக்கு நன்றாகத் தெரிகிறது. இப்போதுள்ளபடியே நான் வாழ்க்கையைத் தொடருவது சரியான வழியல்ல என்று'' — இப்படிக் கருதி, மானஸிகமாக இறைவனிடம் சரணாகதி செய்யுங்கள்.

இம்முறையானது தாற்காலிகமாகச் சிறிது நாழிகையேனும் நீங்கள் உங்களது அஹங்காரத்தை அகற்றுவதற்கு உதவி செய்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் நிம்மதியாய், விச்ராந்தியாய் இருங்கள்; நடக்கிறபடி நடக்கட்டும் என்று விட்டு விட்டு இருங்கள்.

இச்சாந்த மனநிலையே ஜபம் புரிவதற்கு உகந்ததாகும்;

ஜபம் புரிகையில் நீங்களே இதயத்துக்குள் விலகி நின்று உங்களுக்கே மேற்பார்வையாளராகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு மந்திர ஆவிருத்தியும் எழும்பி எழும்பி விழுந்து அலை அலைகளாக ஜபம் பெருகுவதாக உணர வேண்டும். அப்போது அந்த மந்திர ஆவிருத்திகள் யாவும் எதிலிருந்து எழும்புகின்றனவோ எதில் விழுந்து லயிக்கின்றனவோ அந்த மவுனத்தையும் மந்திரத்தோடேயே உணருவீர்கள்.

மனம் ஜபிக்கிறது; நீங்கள் தனித்து நின்று அதைப் பார்க்கிறீர்கள்; திருத்தும் வகையில் மேற்பார்வையிடுகிறீர்கள். மந்திரம் எழுவதும் விழுவதுமாவதில் மந்திரத்தின் நாட்டியம் முடிகிறது. இந்த நாட்டியத்தோடு நின்றுவிடாமல், பவித்ரமானதும் ஜீவ வேகம் கொண்டதுமான ஒரு மவுனம் உங்கள் மனவெளியில் உண்டாவதைத் தயவுசெய்து தவறவிடாமல் உன்னிப்பா யிருந்து உணருங்கள். அச்சமயத்தில் எந்தப் புதிய எண்ணமும் எழ விடாதீர்கள். இந்த அநுபவத்தை எந்த இனத்தின் கீழ் கொண்டு வரலாம் என்ற நாமகரண யோசனையும் வேண்டாம். இவ்வநுபவத்தை வார்த்தைகளால் விளங்கிக் கொள்ளவும் நினைக்காதீர்கள். எப்படித் தூக்கத்தில் அப்படியே முழுகிவிட நம்மை நாமே அநுமதித்துக் கொள்ளுகிறோமோ, அப்படி இந்த மவுனம் உங்களைச் சுற்றிச் சூழ்ந்து கவ்விக்கொள்ள விடுங்கள். அதை வேறான ஒன்றாக வைத்துப் பார்க்காமல் அதை அணைந்து அதன் உள்ளேயே முழுகிப் புதைந்து விடுங்கள். முயலுங்கள்! இரண்டு மூன்று முயற்சிகளில் இது காரிய ஸாத்தியமே!

(தமிழ் வடிவம்: ரா. கணபதி)

அரசு அலுவலகம் ஒன்றிற்கு அதிகாரி திடீர் பரிசோதனைக்காக வந்தார். சும்மா உட்கார்ந்திருந்த ஒரு குமாஸ்தாவைப் பார்த்து ''நீங்க இங்கே என்ன செய்யறீங்க?'' என்று கேட்டார்.

ஏற்கனவே அந்த அலுவலக நடைமுறையால் வெறுத்துப் போயிருந்த குமாஸ்தா ''ஒண்ணுமில்லே'' என்று எரிச்சலுடன் பதிலளித்தார்.

அதிகாரி இன்னொரு குமாஸ்தாவிடமும் அதே பதிலைப் பெற்றார். உடனே மேல் அலுவலகத்திற்குக் குறிப்பு எழுதினார்: ''இந்த அலுவலகத்தில் ஒரே வேலையை இரண்டு பேர் செய்கிறார்கள். ஆகவே ஒருவரை வேறு கிளைக்கு மாற்றல் செய்து விடலாம்''

-ராமுசாமி



புல் மேயும் புலிகள்




அழகான அந்தப் பங்களாவின் முன்புறத்தில், அரை ஏக்கர் நிலப் பரப்பில், அக்கறையோடு வளர்த்திருக்கும் புல் வெளியில், அடக்கமாக மேய்ந்து கொண்டிருக்கும் புள்ளி மான்களை அசிரத்தையோடு 'பார்க்கிறேன். இயல்பிலேயே பரம ரசிகனான எனக்கு, தாங்கள் கௌரவப் பொருள்களாக்கப் பட்டதை உணரும் சக்தியற்றுத் திரிந்து கொண்டிருக்கும் இந்தப் புள்ளி மான்களின் ''மேய்தல் காட்சி''கூடக் கவர்ச்சியற்றுக் கண்ணில் பட்டுக் கசப்பாக மனத்துள் இறங்குவதை ஆச்சரியத்தோடு உணர்கிறேன். ஏன்?... கேள்வி கேட்கும் மூளைக்குப் பதிலாக என் கண்கள் ஹாலில் அமர்ந்திருக்கும் அவளைப் பார்க்கின்றன. எதையோ எதிர்பார்க்கும் ஆவலிலோ, அல்லது என்ன நடக்கப் போகிறதோ என்ற மிரட்சியிலோ இருப்புக் கொள்ளாமல்.

சோபாவின் விளிம் பில் பட்டும் படாமலும் அமர்ந்திருக்கிறாள் அவள்! இரண்டு மணி நேரத்துக்கு முன்னால் அவளுடைய சங்குக் கழுத்தைத் தழுவிக் கொண்டிருந்த தங்கச் சங்கிலி இப்போது இல்லை என்ற ஏமாற்றத்தைத் தன் புடவைத் தலைப்பால் இழுத்துப் போர்த்தி மறைத்திருக்கும் அவளைப் பார்க்கும்போது என் மனச் சோலை திரிந்து போய் அங்கே பாலை வனம் பிறந்துவிட்டதைப் பாரத்தோடு உணர்கிறேன். அடடே! எனக்குக் கூட இரக்க உணர்ச்சி இருக்கிறதே... ஏன்?... ''இதயமே இல்லாதவனா இவன்'' என்று நினைக்கிறீர்களா? ஸாரி... இந்த இடத்தில் என்னைப்பற்றிய அறிமுகம் அவசியம் தேவைப் படுகிறது. நான்... ரங்கதுரை... எஸ். எஸ். எல். ஸி. எழுதிய கையோடு பெற்றவருக்கும், உடன் பிறந்தோருக்கும், உறவுக்காரர்களுக்கும் ''டாடா'' காட்டிவிட்டு, சொல்லாமல் கொள்ளாமல் ரயிலேறியவன். ''பொறுப் பில்லாதவன்'' என்று காரணம் காட்டிக் குடும்பத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டவன். சுகமான வாழ்க்கைக்குச் சுலபமாக வழிகள் தெரிந்தால் அதற்காக எந்த சூழ்ச்சியையும் செய்யத் தயங்காதவன். என் இந்த 32 வருட வாழ்க்கையில் இடை வந்த எந்தப் பிரச்னைகளுமே என்னைப் பாதித்ததில்லை. எதிர் வருவது குழப்பமானாலும் சரி, குதூகலமானாலும் சரி, அவைகளை என் முன்னேற்றத்துக்கு ஏணிகளாக்கிக் கொள்வதுதான் என் சாமர்த்தியம். எந்த மனித உணர்ச்சிகளையும் என் தேவைக்குத் தகுந்தாற்போல் மண்டியிட வைப்பது என் ''ஸ்பெஷாலிட்டி.'' ''ரங்கதுரையா — அவன் பிழைக்கத் தெரிஞ்சவனாச்சே'' என்று சிலாகிப்பவர்களையும், ''அவன் கடைஞ்செடுத்த அயோக்கி



யண்டா'' என்று அர்ச்சிப்பவர்களையும் பார்த்து அலட்டிக் கொள்ளாமல், அல்வா சாப்பிடுவது போல் விமரிசனங்களை அனுபவித்து ரசிப்பதற்கு என்னால் மட்டுமே முடியும் என்ற பெருமைக்காக நான் மார்தட்டிக் கொள்ளலாம். அடுக்கடுக்கான கரன்சிக் கட்டுக்களின் மெத்தையில் வாழ்க்கையை அனுபவிப்பவர்களிலிருந்து, அடுத்த வேளைச் சோற்றுக்கு அலையும் ''அன்றாடம் காய்ச்சிகள்'' வரையிலும் என்னை அறியாதவர்கள் இருக்க முடியாது. அத்தனை பேருக்கும் இந்த ரங்கதுரை வேண்டியவன். சொந்த அறிவு கொஞ்சம் இருக்க, அனுபவத்தில் வந்த அறிவை அதனோடு சேர்த்து, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அநாகரிகமான அரசியலில் புகுந்து புறப்பட்டு, குடும்பச் சிறைக்குள் சிக்கிக்கொள்ளாமல் வாழ்க்கையை அணு அணுவாக அனுபவித்துக் கொண்டிருப்பவன். பலமான ஓர் அரசியல் கட்சிக்குச் சொந்தமான தினசரிப் பத்திரிகையில் கௌரவமான பதவியில் காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பவன். கைநிறையச் சம்பளம், கட்டுப்பாடில்லாத வாழ்க்கை... எதற்குமே அலட்டிக்கொள்ளாத மனப் பக்குவம்... எதிர்கால ''பெரிய மனிதர்கள்'' லிஸ்டில் என்னையும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம். கையில் காலணா இல்லாமல் வெளியே கிளம்பினால் மாலையில் வீடு திரும்பும்போது என் பாக்கெட்டின் மதிப்பு பல மடங்கு உயர்ந்திருக்கும் என்பதை உறுதியாகச் சொல்லலாம். சுயநலம்தான்என் இலட்சியம் என்று சொல்லிக்கொள்ள நான் வெட்கப்பட்டதே இல்லை! இதிலென்ன சார் வெட்கம்? நாசித்துவாரம் அடைபட்டால் அடுத்த நிமிஷம் நாதியற்றுப் போகும் உடம்புதானே சார் இது! நல்லது, கெட்டது அத்தனையும் நாடித் துடிக்கும்வரைதானே! இருக்கும்வரை அனுபவிப்பதுதான் இந்தப் பிறவியின் அர்த்தம் என்று எந்தக் கோவிலில் வேண்டுமானாலும் சத்தியம் பண்ண நான் தயார்! ஆனால் ஒன்று! வசதிபடைத்தவர்களையும் புகழோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் நான் அணுகுவதே இல்லை. என் தேவைகள் தீர்கின்றனவா என்று பார்ப்பதோடு சரி! தேவையில்லாமல் அவர்களை ஆராய்வதும், அந்தரங்கத்தை அலசுவதும் எத்தனை அபாயகரமானது என்பது அடியேனுக்குத் தெரியாதா என்ன? இவர்கள் எல்லாம்



ஆபத்தானவர்கள். அணைத்துக் கொண்டிருக்கும் கைகளாலேயே அவசியம் ஏற்படும்போது கழுத்தை அமுக்கி விடுவார்கள். இந்தச் சமுதாயப் புலிகளோடு பழக்கம் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக நெருக்கம் இருக்கக் கூடாது!

என் சுயபுராணத்தைப் பாடி உங்கள் பொறுமையைச் சோதித்து விட்டேன் போலிருக்கிறது. சரி விஷயத்துக்கு வருவோம். அதோ — சோகமே உருவாகச் சோபாவில் அமர்ந்திருக்கிறானே, அவனும், அவனுக்கு அடுத்து ''ஆரோக்கியமா? அப்படி என்றால் என்ன?'' என்று கேட்கும் ஒடிசலான உருவத்தை உடைய அவன் தந்தையும் ஏதோ

சுற்றி வளைத்து எனக்குச் 'சொந்தமாக வேண்டுமாம். அவர்களே அப்படிச் சொல்லிக் கொண்டார்கள். கிராமத்திலிருந்து என்னைப் பார்க்க நேற்றுத்தான் வந்து சேர்ந்தார்கள். அந்தப் பெண்... கமலா... தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றின் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று 'நாளை நடக்கப் போகும் நேர்முகத் தேர்வுக் காகத் தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டு வந்திருக்கிறாள். அதிகாரிகளுக்கு யாரைப் பிடிக்கலாம் என்ற ஆலோசனைக்காக என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். அவளுடைய தந்தை பல மணி நேரம் அவர்களுடைய பரிதாபக் கதையைக் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துச் சொல்லிக் கண்ணீர் வடித்தார்.

''யாரையாவது புடிச்சு, எப்படியாவது இந்த வேலையை வாங்கிக் குடுத்துடுங் கண்ணே!..... எங்களாலே கஷ்டத்தைத் தாங்க முடியலே.''

என்று கமலா கதறி அழுதபோது ''பருவப் பெண் அழுகிறாளே'' என்ற அனுதாபத்தோடு பார்த்தேன். ''எவ்வளவு செலவானாலும் சரி தம்பி நீதான் தயவு பண்ணணும்'' என்றபடி அவள் தந்தை என் கையில் இரண்டு நூறு ரூபாய்களை அழுத்தியதும் எங்கிருந்தோ ஓடிவந்து இரக்கம் என் இதயத்தில் ஒட்டிக்கொள்ள அலட்சியமாக இருந்தவன் அக்கறையோடு அவர்களைப் பற்றி விசாரித்தேன். அன்பாக உபசரித்தேன். ''வேலை வாங்கித் தர நாளாயிற்று'' என்று உறுதி கூறினேன். வள்ளிசாக ஒரு பெருந்தொகையை மனம் வரவு வைத்துக் கொள்ள மூளை யாருக்கு வலை வீசலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்கியது. சிக்கிக்கொண்டவர் சிவமூர்த்தி — பெரிய மனிதர் — பல தர்ம ஸ்தாபனங்களின் போஷகர். சிவமூர்த்தியின் மூலம், அவருக்கு நெருக்கமான, ஆளும் கட்சியோடு தொடர்புடைய தொழிலதிபர் கணேஷ் சர்மாவைச் சந்தித்துப் பேசினால் போதும். கமலாவின் வேலைக்கான ஆர்டர் கதறியபடி கையில் வந்து விழுந்து விடும்.

காலையில் சிவமூர்த்தியைச் சந்தித்துப் பேசியதும் என் தன்னம்பிக்கை அத்தனையும் தவிடு பொடியாகி விட்டது. தோள் மேல் கை போட்டு ''கணேஷ் சர்மா கிட்டே நீ சொன்னாலே போதுமேடா'' என்று என்னைத் தூக்கி உயரத்தில் வைத்தார்.

''என்ன இருந்தாலும் உங்க வார்த்தைக்கு இருக்கிற மதிப்பே தனி'' என்று நான் ''ஐஸ்'' வைத்ததும் அடக்கமாகச் சிரித்தார்.

''துரை நீ கேட்கும்போது முடியாதுன்னு சொல்ல என்னாலே முடியலே... ஏற்கனவே இதுக்குநிறையப் பேர் வந்தாங்க, அஞ்சு, பத்துன்னு ஆலாப் பறந்தாங்க... நீ நம்ம பயலாச்சே ரெண்டு ரூவா கொண்டு வந்து குடுத்துடு! நான் சர்மாவுக்குப் போன் பண்ணிச் சொல்லிடறேன்.'' என்றபடி அவர் ரிஸீவரை எடுத்ததும் வாழ்க்கையிலே முதல் முறையாக மனத்தை ஏதோ குடைவதை உணர்ந்து திடீரென எழுந்து விட்டேன். சிவமூர்த்தி உடனே ரிஸீவரை வைத்துவிட்டு இகழ்ச்சியாக என்னைப் பார்த்து ''ரெண்டாயிரம் கூட முடியாதா என்ன'' என்றார். அடுத்த கணமே அசட்டுச் சிரிப்பில் என் அதிர்ச்சியை அமுக்கிக் கொன்றுவிட்டு மீண்டும் அமர்ந்தேன். சிவமூர்த்தி என்னிடமே பேரம் பேசுகிறார்? இன்று அவரை நாலு பேர் மதிப்பதற்கு என்றோ ஒரு நாள் நானும் காரணமாக இருந்தேன் என்ற நன்றியை மறந்து, தான் பேசப் போகும் நாலு வார்த்தைகளுக்காக என்னிடம் விலை பேசுகிறார். ''இந்த ரங்கதுரை நினைத்தால் ரெண்டாயிரமென்ன, ரெண்டு கோடிகூடத் தர முடியும் என்பதை நிரூபி!'' என்று என் மனச்சாட்சி கூக்குரலிட்டது. நான் விஷயத்தை எடுத்துச் சொன்ன பக்குவத்தில் அடுத்த அரை மணி நேரத்தில் கமலாவின் மூன்று பவுன் கழுத்துச் சங்கிலி மார்வாடி கடையில் சிறைப்பட்டுச் சிவமூர்த்தியின் பரிந்துரைக்குப் பாதை காட்டியது.

''ஏண்ணே — இந்த வேலை கண்டிப்பாக் கிடைச்சிடுமில்லே...''

''ம்ம்...கிடைக்கும்'' என்று நான் முணுமுணுத்தேன். அவர்களை வராந்தாவில் உட்கார வைத்தேன்.

ஏற்கனவே எனக்கு முன்னால் காத்திருந்த சிலரைக் கடந்து கணேஷ் சர்மாவைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னேன். கமலாவின் கதையைக் கேட்டதும் பரிதாபத்தோடு ''ச்சு'' கொட்டினார்.

''துரை — சிவமூர்த்தி போன் பண்ணி நீ வருவேன்னு சொன்னான். நீ கவலைப் படாதே — அந்தப் பொண்ணுக்கு வேலை கிடைக்கிற மாதிரி செய்துடலாம். நீ என்ன பண்றே — அவ கார்டு நெம்பரையும் பயோடேட்டாவையும் குறிச்சுக் கொடுத்துட்டுப் போ — அவ பேரு என்ன சொன்னே...ம்... கமலா... கண்ணுக்குக் குளிர்ச்சியாத்தான் இருக்கா — என் துரை! அவளுக்கு மட்டும் இன்னிக்கு ராத்திரி 'பைவ் ஸ்டார்' ஓட்டல்லே ரூம் 'புக்' பண்ணச் சொல்லிடேன்.''


எனக்குச் 'சுருக்'கென்றது.

''ஸார்... வந்து... இது அந்த மாதிரி பொண்ணு இல்லே சார்.''

கணேஷ் சர்மா கலகலவென்று சிரித்தார்.

''வயத்துப் பிரச்னை தீரணும்னு அவளை வரச்சொல்லு. வரும்போது 'பயோ

பீதாம்பரம்: ''என் கடைக்கு வர்றவங்களுக்கும் பிடிக்காத விஷயம் ஒண்ணே ஒண்ணுதான்!''
அவன்: ''என்ன அது....?''
பீதாம்பரம்: ''இன்று ரொக்கம் நாளை கடன் போர்டு!'' — உ. ராஜாஜி



டேட்டாவோட' வந்தாப் போதும். அப்போ எனக்கு நேரமாச்சு....''

நான் எழுந்து வெளியே வந்தேன். அடுத்த படி இருக்கும் யாரோ ஓர் அப்பாவிப் பெண் அவசரமாக என்னைக் கடந்து கணேஷ் சர்மாவின் ஆபீஸ் அறைக்குள் நுழைகிறாள். ஐயோ பாவம்! தானாகவே புலியின் வாயில் வந்து விழும் புள்ளி மான்கள் இவர்கள். என்னைப் பார்த்ததும் கமலாவும் அவள் தந்தையும் ஆவலோடு ஓடி வருகிறார்கள். நான் வலியப் புன்சிரிப்பை வரவழைத்துக் கொள்கிறேன். போலித்தனமான சந்தோஷத்தை முகத்தில் பவுடராக அப்பிக் கொண்டு அவசர நடிகனாகிறேன்.

''கமலா... உங் கஷ்டமெல்லாம் தீர்ந்துடும். ஐயாகிட்டே எல்லாத்தையும் சொல்லி உன் கார்டு நெம்பரெல்லாம் குடுத்திருக்கேன். நாளை நீ இண்டர்வ்யூ அட்டண்ட் பண்ணு.''

ஆனந்த மிகுதியால் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. அவசரமாக அதைச் சிரிப்பில் அமுக்கிக் கொண்டாள். கணேஷ் சர்மா அவளுடைய வேலைக்காகக் கேட்கும் விலையை இவளிடம் சொன்னால் கஷ்டம் தீரவேண்டுமே என்ற அவசரத்தில் இவள் கற்பை இழக்கவும் துணிந்துவிடலாம். வேண்டாம். விலை மதிக்க முடியாத அதை விலை பேசும் கணேஷ் சர்மாவிடம் விற்றுத்தான் இவள் வேலை வாங்க வேண்டுமென்றால், அதைவிட வெளியே இதற்காகவே ஏங்கிக்கொண்டிருக்கும் பண முதலைகளிடம் விலை பேசினாலே போதும். மறு நிமிடமே இவளை மகாராணியாக்கிவிடலாம். இவளுக்கு வேலை வாங்கித் தருவதை விட இவளை வேசியாக்குவது மிகவும் சுலபம்.

''தம்பி...நீங்க செஞ்ச உதவிக்கு ஊருக்குப் போனதும்....'' அவர் வார்த்தையை முடிக்கும் முன் இடைமறித்து நேற்று அவர் எனக்கு 'கமிஷனாக'த் தந்திருந்த இருநூறு ரூபாயை அவர் கையில் வைத்தேன். ''ஊருக்குப் போகத்தான் உங்க கையிலே பணமில்லையே. இதைவச்சுக்குங்க...அப்புறம்பார்க்கலாம்.''

இருவரும் சிலையாகி விட்டார்கள். கொஞ்சம் விட்டிருந்தால் விதி என்றும் பாராமல் காலிலேயே விழுந்திருப்பார்கள். எனக்குள்ளிருந்து யாரோ சிரித்தார்கள். கவனித்தேன். மனச்சாட்சி. ''என்னடா துரை – புதுசா இருக்கே. நீகூட இவ்வளவு நல்லவனாயிட்டியே... ஆச்சர்யமா இருக்குப்பா. புலி கூட புல்லைத்திங்குதே.'' ஆமாம். இத்தனை காலம் மனிதர்கள் மேல் புலியாகப் பாய்ந்து கொண்டிருந்த நான் இன்று என் மனச்சாட்சியை மூடி மறைத்திருக்கும் புல்லை மேய்கிறேன். நான் மட்டுமல்ல...அறிவிலும், அந்தஸ்திலும், புகழிலும், கௌரவத்திலும் வசதியிலும் என்னைவிடப் பல மடங்கு உயர்ந்து, சமுதாயத்தில் பெரும் புள்ளிகளாக, புலியின் கம்பீரத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சிவமூர்த்தி கணேஷ் சர்மா போன்றவர்களும், பெண்ணையும், பொருளையும், கள்ளத்தனமாக மேய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கணேஷ் சர்மாவின் பங்களாவை விட்டு விலகும் முன் மீண்டும் ஒரு முறை முகப்பில் மேய்ந்து கொண்டிருக்கும் புள்ளி மான்களைப் பார்க்கிறேன். திடீரென்று புள்ளி மான்கள் மறைந்து, புலிகளாகிப் புல் மேய்ந்து கொண்டிருக்கின்றன. புலிகளின் முகங்களாக என்னையும், சிவமூர்த்தியையும், கணேஷ் சர்மாவையும் பார்க்கிறேன். அங்கு மீண்டும் பார்த்தபடி அக்கறையோடு மேய்ந்து கொண்டு.... என்னையுமறியாமல் வாய் விட்டுப் பலமாகச் சிரித்துக் கவைத்தொடரிலிருந்து சுதாரித்துக் கொள்கிறேன். கமலாவும், அவள் தந்தையும் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். கமலா நாணியாகிவிட்ட கழுத்தை முந்தானையால் மூடி மறைத்துக் கொண்டு விடை பெறுகிறாள். நான் வேதனையோடு வீதியில் நிற்கிறேன். அப்போது கவேகமாக என்னைக் கடந்து செல்லும் கணேஷ் சர்மாவின் காரில், எனக்கு அடுத்து அவரைச் சந்திக்கச் சென்ற பெண், பலியாடு போல் அமர்ந்திருப்பது என் கண்ணில் பட்டு மறைகிறது. அவள் எனக்குப் பெண்ணுருவமாகத் தோன்றவில்லை. ஏதோ ஒரு புல் கட்டாகத் தெரிகிறாள். இனந் தெரியாத இதய பாரத்தோடு அந்த இடத்தை விட்டு நடக்கிறேன்.

நமக்கு வேண்டாதவர்களைத் தாக்கிச் செய்தி வெளியிடக் கூடாது. அதுவே அவர்களுக்கு ஒரு விளம்பரம் ஆகிவிடும். அவர்களின் பெயரை இருட்டடிப்பு செய்து விடுவதுதான் சரி. ஆனால் மிக முக்கியமான செய்தியாக இருந்தால் விட்டு விடக்கூடாது; வெளியிடவேண்டும்.

-சி.பா. ஆதித்தனார்.

தகவல்: தங்க சங்கரபாண்டியன்

ரயில் கோபுரம்

மாரி-அறவாழி

இரண்டு முறைப்ளாட்பாரத்தை அளந்து விட்டுக் கடைசியில் தனபால் இருந்த பெட்டிக்கே வந்தனர் அவர்கள்.

ஒருத்திக்கு இருபத்தைந்து வயது இருக்கும். வாரப் பத்திரிகைகளில் வரும் ஓவியப் பெண் உயிர் பெற்று வந்தது போன்ற கவர்ச்சி.

இன்னொருத்திக்கு நாற்பது.

நரைக்கத் தொடங்கிவிட்ட தலை; சிவப்பு வண்ணத்தில் அகலக் கரை போட்ட வெள்ளைச் சேலை.

தாயும் மகளுமாக இருக்கலாம். முக வித்தியாசம் ஏனென்று தெரியவில்லை.

உட்காருவதற்கு இடம் தேடினர்.

'இங்கே வாருங்கள்' என்று அழைக்க வாய் திறந்தான் தனபால்.

அதற்குள் அவர்களே அவனெதிரே யிருந்த காலி இடத்தில் வந்து உட்கார்ந்து விட்டனர்.

அவனுக்கு நேர் எதிரில் சன்னலோரமாக அவள்!

பக்கத்தில் தாய்க்காரி.

பிளாட்பாரம் இல்லாத மறு பக்கத்தில் மல்லிகைப் பூ விற்றுக் கொண்டு வந்தாள் ஒரு சிறுமி.

''பூ வாங்கிக்கொள்ளட்டுமா?''

ஆவலுடன் கேட்டாள் மகள்.

''கொஞ்ச நேரத்துக்குள் அதெல்லாம் எதற்கு?'' என்று மறுத்த முதியவள் பின்னர் அனுமதி கொடுத்தாள்.

''சரி வாங்கிக்கொள் கப்பு...''

அதென்ன பெயர் கப்பு? நாகரிகமில்லாமல்?

'கப்புலட்சுமியாக இருக்கும்' என்று தனக்குத் தானே சொல்லிச் சமாதானப்படுத்திக் கொண்டான் தனபால்.

சிறுமியைக் கூப்பிடத் தயாரானாள் கப்பு. தனபால் முந்திக்கொண்டான்.

சிறுமி வந்ததும் ''எத்தனை முழுங்க?'' என்று கேட்டான்.

யாருக்காகவோ அவன் கூப்பிடுகிறான் என்று நினைத்துப் பேசாதிருந்தாள் அவள்.

''உங்களைத்தானே! உங்களுக்காகத்தான் கூப்பிட்டேன். வாங்கிக்கொள்ளுங்கள்...'' என்று சொல்லப்பட்டதும் வியப்படைந்தாள். நன்றி கனியப் பார்த்தாள்.

கப்பு — அதாவது கப்புலட்சுமி சொன்னபடி நான்கு முழப் பூவை வெட்டி இலையில் வைத்து நீட்டினாள், குள்ளமாகத் தரையில் நின்றிருந்த சிறுமி.

கப்புவுக்கு எட்டவில்லை. தனபால் பார்த்துக்கொண்டிருப்பானா?

சட்டென்று குனிந்து வாங்கிக் கொடுத்தான்; ஒரு ரூபாய்த் தாளையும் தூக்கி எறிந்தான்.

ஜாக்கெட் இடுக்கில் அவசரமாகக் கைவிட்டு பர்ஸை எடுத்த கப்பு ஒரு புன்னகையுடன் மறுபடியும் அங்கேயே வைத்துக் கொண்டாள் அதை.

உண்மையில் அதுவே பத்திரமான இடம்! ஆனால் யார் கண்டு பிடித்திருப்பார்கள் முதலில்?

தாய்க்காரிக்குக் கொஞ்சம் கிள்ளிக் கொடுத்துவிட்டு மீதியை அவளே எடுத்துக் கொண்டாள்.

கை நிறைய இருந்ததைப் பந்தாகச் சுருட்டிக் கொண்டையில் சூடிக் கொண்டாள்.

இரண்டு தோள்களும் உயர்ந்தபோது தெரிந்த அழகு தனபாலைச் சொக்க வைத்தது.

வண்டி புறப்பட்டு விட்டது.

தாயும் மகளும் தணிந்த குரலில் என்னவோ பேசிக் கொண்டனர். லேசாகக் கவனித்தான் தனபால்.

இருவரும் சேலத்துக்குப் போகின்றனர். ஜங்ஷனில் அவர்களுக்காக ஒருவர் வந்து காத்திருப்பார்.

யோசனையுடன் முகவாயைத் தடவிக் கொண்டான் அவன்.

அவர்களுக்காக வந்து காத்திருப்பவர் யாராக இருக்கும்?

கப்புவின் கணவனாக...? நெஞ்சை என்னவோ செய்வது போலிருந்தது தனபாலுக்கு.

லேசாக அவள் கழுத்தை நோட்டம் விட்டான்.

தாமரைப்பூவைத் தாங்கி நிற்கும் தண்டின் மென்மை.

காலியாகத்தான் இருந்தது. நல்லவேளை! அப்பாடா என்று மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டான்.

அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லை. அப்படியானால் தகப்பனாக, தம்பியாக, அண்ணனாக இருக்குமோ?

ஒருவேளை மாமன் மகனாக, அத்தை பிள்ளையாக இருந்துவிட்டால்....!

இருக்கட்டுமே!

அவன் மேல் இவளுக்குக் காதல் இல்லாமலும் கூட இருக்கலாமே.

சேலம் போவதற்குள் அவளுடன் நன்றாகப் பேசி அன்பைப் பெற்றுவிட வேண்டும். முகவரியைத் தெரிந்து கொள்ள வேண்டும். தன்மேல் அவளுக்கு ஆசை உண்டா என்பதைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்.

தான் நினைப்பது போல் அவள் தன்னை விரும்பி, காதலித்துக் கல்யாணமும் செய்து கொள்வதாக இருந்தால்.....!

சுகமான கற்பனை 'தடதட'வென்ற இரைச்சலால் கலைந்தது.

ஆற்றுப் பாலத்தின் மேல் ஓடிக் கொண்டிருந்தது வண்டி.

அவள் அழகுச் சிலையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் எதிரில்.

கற்பனையில் நெருங்கிவிட்ட உணர்வுடன் அவளை உரிமையுடன் பார்க்கத் தோன்றியது தனபாலுக்கு.

ஆனால் தாயார் கவனித்து விடுவாளே! பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். முகத்துக்கு அருகே விரித்துப் படிப்பது போல் வைத்துக் கொண்டு மறைவில் பார்த்தான அவளை.

''மஞ்சரியா அது?''

ஒலித்தது சுப்புவின் குரல் அல்ல, தாயி னுடையது.

'ஆமாம் அத்தை' என்று சொல்ல நினைத் தான்.

அவசரப்படக் கூடாது என்று நிதான மடைந்து, 'பாருங்களேன்' என்று அவளிடம் நீட்டினான்.

அடுத்தாற்போல் சுப்பு கேட்பாள் என்று இவனாகவே நினைத்துக் கொண்டு இன்னொரு புத்தகத்தை எடுத்தான்;

கவர்ச்சிக்கும், காதல் கதைகளுக்கும் பெயர் போன வழுவழு அட்டைப் பத்திரிகை!

எதிர்பார்த்தது போலவே சுப்புவின் முகம் மலர்ந்து கேட்டாள்.

''இந்த வாரத்துப்பத்திரிகையா?...''

தேனாக இனித்த குரலை வெகுவாக ரசித்த வண்ணம் பதிலளித்தான்.

''நாளைக்குத்தானே வரும்! இதைப் பார்த்துவிட்டீர்களா?''

''இல்லை. கொடுங்களேன், பார்க்கலாம்.''

சட்டென்று பேனாவை எடுத்தான். மூதல் பக்கத்தில் தன்னுடைய பெயரையும் முக வரியையும் எழுதி நீட்டினான்.

வாங்கிக்கொண்டாள் அவள்.

சாவகாசமாக அவள் எல்லாக் கதைகளை யும் படித்து முடிப்பதற்கும் வண்டி ஈரோடு சந்திப்பை அடைவதற்கும் சரியாக இருந்தது.

நல்ல கோடைக்காலத்து மத்தியானம். அனல் கலந்து வீசியது காற்று.

இறுக்கம். புழுக்கம்.

பிளாட்பாரத்தில் ஐஸ் மோர் விற்றது. கீழே இறங்கி ஓடினான் தனபால். மூன்று ஐஸ் மோர்—வாங்கி வந்தான்.

''வெய்யிலுக்கு நன்றாக இருக்கும். குடி யுங்கள்...'' என்று சுப்புவிடமும் தாயா ரிடமும் கொடுத் தான்.

சிறிதும் எதிர்பார்க் கவில்லை அவர்கள். வாங்கிக் குடித்தனர்.

கண்களால் நன்றி சொன்னாள் சுப்பு. அழ கான கண்கள்! அர்த்த முள்ள பார்வை!

தனபாலுக்கு 'ஜிலு ஜிலு' வென்றிருந்தது ஐஸ்மோரின் குளிர்ச்சி அல்ல. அவள் கண் பார்வையின் குளுமை!

தாயார்க்காரி பேச்சுக் கொடுத்தாள்:
''தம்பி எந்த ஊருக்குப் போகிறீங்க?''

அவன் சொன்னான்: ''திருப்பத்தூர்...''

''அதுதான் சொந்த ஊரா?''

''ஆமாங்க. அப்பா இருக்கிறார்கள்.''

எதற்காக இதையெல்லாம் விசாரிக் கிறாள் இவள்?

மருமகனுக்கிக்கொள்ளலாம் என்று நினைக் கிறாளோ ஒருவேளை!

அடடா! அப்படி நடக்குமேயானால் எவ் வளவு இனிமையாக இருக்கும்!

சொர்க்கமாகிவிடுமே வாழ்க்கை!

குறுக்குக் கேள்வி போட்டாள், தேன் மொழியாள் சுப்பு. ''உத்தியோகம் பார்ப் பது தான் திருப்பூரிலா?....''

அவன் உள்ளம் பூரித்தது.

புத்தகத்தில் எழுதியிருக்கும் முகவரியைப் படித்துவிட்டாளே இவள்! இப்படிப் படிப் பாள் என்பது தெரிந்திருந்தால் முகவரிக்குக் கீழே தன் காதலைக் குறிப்பிட்டு அவள் சம் மதத்தையும் கேட்டிருக்கலாமே!

இன்னும் சிறிது நேரத்தில் சேலம் வந்து விடும். அவர்கள் இறங்கிவிடுவார்கள்.

அதற்குள் எப்படியாவது தன்னுடைய காதலைச் சுப்புவுக்குத் தெரிவித்துவிட வேண் டுமே! துடித்தான்.

பார்வையாலேயே அவளிடம் கெஞ்சி னான், கூத்தாடினான். என்னென்னவோ செய்து பார்த்தான்.

ஒன்றுக்கும் அசையவில்லை அவள்.

சேலத்தை வண்டி நெருங்கிக் கொண் டிருந்தது. 'ஐயோ! இன்னும் கொஞ்ச நேரத்தில் இறங்கிவிடப் போகிறாளே...!' என்று ஓலமிட்டது தனபாலின் நெஞ்சம்.


பிரிந்துவிட்டால் மறுபடியும் சந்திக்க முடியுமா? மனத்திலிருக்கும் பிரேமையை அவளுக்குத் தெரிய வைக்க முடியுமா?

அம்மா பார்த்திருக்கும் பட்டிக்காட்டைக் கட்டிக்கொண்டு மாரடிக்கும் விபத்திலிருந்து தப்பித்து இவளை மணந்து கொள்ள முடி யுமா? அவனுடைய மனக் கொதிப்பு





கல்கி மாதாந்திரப் பரிசுத்திட்டம் (அக்டோபர்)



முதல் படம்: சுஜாதா

ஒரு படத்தைப் பொறுத்தமட்டில் அது ஒரு குதிரைப் பந்தயம் மாதிரிதான். ஆனால் கல்கி அறிவிக்கும் இந்தப் போட்டியில் குதிரைப் பந்தயத்தின் தீமைகள் ஏதும் கிடையாது. டைரக்டர், இசையமைப்பாளர், கதை வசனகர்த்தா, நடிகர்கள், ஒளிப் பதிவாளர் என்று பலதரப்பட்ட குதிரைகள் ஓடுகின்றன. எல்லாக் குதிரைகளும் வென்றால் படத் தயாரிப்பாளர்களுக்கு பாக்ஸ் ஆபீஸ் படமாகிறது. அதிர்ஷ்ட வசமாக சில குதிரைகள் மட்டும் சில ரேஸில் முன்னால் மூக்கை நீட்டிவிடுகின்றன. மற்றவை பின் வாங்கிவிடுகின்றன. திரைப்பட ரேஸின் முக்கிய குதிரைகளுக்குப் பின்வருமாறு நெம்பர்கள் தரப்பட்டுள்ளன: 1—டைரக்டர் 2—ஒலிப் பதிவு; 3—ஒளிப்பதிவு; 4—இசை அமைப்பு; 5—நடிப்பு; 6—கதை வசனம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

வாரம் ஒரு படம் வீதம் நாலு வாரத்துக்கு நாலு படங்கள் குறிப்பிடுவோம். அந்தப் படத்தைப் பார்த்து வெற்றி பெறும் குதிரை நெம்பரை அதற்கான கூப்பனில் குறித்துக் கொள்ளவும். நாலு வார முடிவில் நாலு கூப்பன்களையும் ஒன்றாகச் சேர்த்து உறையிலிட்டு, கல்கி, மாதாந்திர பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159; சென்னை—32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். முடிவு தேதி நவம்பர் 20. நாலு ரேஸ்களிலும் சரியான குதிரையைத் தேர்ந்தெடுத்தவருக்குப் பரிசு ரூ. 1000. சரியான விடையை ஒன்றுக்கு மேற்பட்டவர் எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

(யோசனை: நளினி சாஸ்திரி)

ஜெயிக்கும் குதிரை எண்: ....

என் பெயர் ....

விலாசம் ....

....

....

கையெழுத்து ....

தெரியாமல் சிரித்துக் கொண்டே இருந்தான் அவன்.

பிளாட்பாரத்தில் நுழைந்து நின்றது வண்டி. கூட்டம் முண்டியடித்துக் கொண்டு இறங்கத் துவங்கியது.

தாயும் மகளும் அவசரப்படவில்லை. அமைதியாக உட்கார்ந்திருந்தனர்.

சட்டென்று தன் காலால் அவள் பெருவிரலை மிதித்துக் கவனத்தைக் கவர்ந்தான்.

பதற்கும் அவன் சிரித்தான். உதட்டை மடித்துச் சுழித்து அழகு காட்டினான்.

ஐயோ! ஐயோ! கொள்ளை அழகு!

''வரதம்மா...வரதம்மா...'' என்று பலமாகக் குரல் கேட்டது வெளியே.

''இதோ இங்கே இருக்கிறேன்'' என்று தாய்க்காரி குரல் கொடுத்தாள்.

மறு நிமிடம் சன்னலுக்கு அப்பால் ஒரு ஆண் முகம் தெரிந்தது.

திடுக்கிட்டான் தனபால்.

முறுக்கு மீசை, முரட்டுக் காக்கிச் சட்டை. கையில் துப்பாக்கி வேறு!

எதற்காக வந்து நிற்கிறார் போலீஸ்காரர்? சுப்புலட்சுமிக்கு என்ன உறவு?

தாயும் மகளும் மெதுவாக எழுந்தனர். நடந்தனர். இறங்கினர்:

''என்னடி சுப்பம்மா! ரிலீஸ் ஆகிப்போய் ரெண்டு மாசம் கூட இருக்காதே. அதற்குள் மறுபடியும் வந்துவிட்டாயா? இந்தத் தடவை எத்தனை நாள்?'' அநாகரிகமாகக் கேட்டு வரவேற்கிறார் போலீஸ்காரர்.

பளிச்சென்று சொன்னாள் முதியவள்: ''பத்து நாள் அதிகம் திட்டி விட்டாரு புது மாஜிஸ்திரேட்! இந்த 'மாதிரிக் கேஸ்' என்றால் வேப்பங்காய் அவருக்கு!... இந்த சுப்பம்மாவுக்கு 'எஸ்கார்ட்' வருவதிலேயே என்னுடைய பாதி சர்வீஸ் கழிஞ்சிடும் போல இருக்குது....''

தனபாலுக்கு இடிவிழுந்தது போலாயிற்று.

சுப்பு, விபசாரக் குற்றவாளியா?... வரதம்மா பெண் வார்டரா?

போலீஸ்காரரும் வார்டரும் பாதுகாப்பாக இருபுறமும் செல்ல நடுவில் சிரித்துக் கொண்டே நடந்தாள் சுப்பம்மா.

'கூ'வென்று குரல் கொடுத்துப் புறப்பட்டது ரயில். கோபுரம் இடிந்து விழுந்தது அவனுள்.

இவர்கள் மிகவும் பிரபலமானவர்களாயினும் சட்ட மன்றத்தைப் பொறுத்த மட்டில் புது முகங்களேயாதலால் இங்கு இடம் பெறுகின்றனர்.

● ● ●

ஜனநாயகத்தில் தலைவர்களுக்கும் மக்களுக்கும் மத்தியில் நிலவும் இடைவெளி ஆபத்தானது. இரண்டுக்கும் இடையில் பாலம் அமைத்தாக வேண்டும். இதற்குச் சமுதாயம் கல்வியிற் சிறந்ததாக விளங்குவதுடன் தலைவர்கள் பொறுப்புள்ளவர்களாகவும் அச்சமற்றவர்களாகவும் திகழ வேண்டும். தனி நபர்கள் ஜனநாயகப் பண்போடு நடப்பதுதான் மக்கள் ஜனநாயகமாக மலர்கிறது.

ஈ. எச். கார்

''நீங்களும் சிறந்த பேச்சாளர் ஆகலாம்'', ''கலித்தொகை இன்பம்'' போன்ற நூல் ஆசிரியர்.

வாலிபால் ஆட்டத்தில் புலி. மலேசியா, சிங்கப்பூர், ரஷ்யா ஆகிய நாடுகள் சென்று திரும்பியவர். அமைச்சர் ராஜேந்திரனுக்கும் இவருக்கும் ஓர் ஒற்றுமை: இருவருக்கும் ஐந்து குழந்தைகள்!

ப. நெடுமாறன்

(தலைவர் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்.)

மத்திய மதுரைத் தொகுதி

பி.ஏ. ஆனர்ஸ் பட்டதாரி. பேச்சில் வல்லவர். பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றுச் சிறை சென்றுள்ளார். செய்தி (தமிழ் நாளிதழ்), குறிஞ்சி (தமிழ் வார இதழ்) ஆசிரியர். சரித்திரம் சம்பந்தப்பட்ட பல நூல்களையும் அரசியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அரசியலில் மட்டுமின்றி நீரிலும் நீச்சலில் கெட்டிக்காரர்!

சட்டசபையில் புதுமுகங்கள்

எஸ். என். ராஜேந்திரன்

(அ.இ.அ.தி.மு.க.) சாத்தான்குளம் தொகுதி

தமிழக அரசின் காதி, மற்றும் கைத்தறி துறை அமைச்சரான இவர் பி.எஸ்.சி. (பள்ளி), கல்லூரிப் படிப்பை பாளையங்கோட்டையில் முடித்துக் கொண்டவர். பிறகு சென்னை சட்டக் கல்லூரியில் பயின்றார். கைத்தறித்துறை பற்றிய அவ்வளவு விஷயங்களையும் கைநுனியில் வைத்திருக்கிறார். சமூக சேவையில் ஆர்வம் உள்ளவர். 'சிறந்த விளையாட்டுக்காரர்' என்று பெயர் பெற்றவர்.



✖ குமரி அனந்தன்



✖ நெடுமாறன்

குமரி அனந்தன்

(தலைவர், கா. கா. தே. கா.)

திருவொற்றியூர் தொகுதி

கரீத்திரத்தில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார்; கல்லூரிப் படிப்பு அண்ணாமலை பல்கலைக் கழகத்தில். தமிழில் எம்.ஏ., அரசியலிலும் எம். ஏ. சிறந்த எழுத்தாளர்.



✖ எஸ். என். ராஜேந்திரன்



✖ இளையபெருமாள்

இளையபெருமாள்

(இந்திரா காங்கிரஸ்)

எழும்பூர் தொகுதி, சென்னை

எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ள இவர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றுள்ளார். ஓய்வு நேரங்களில் புத்தகங்களை விடமாட்டார் என்றாலும் இவருக்கு ரொம்பப் பிடித்தமான பொழுதுபோக்கு — தோட்டக் கலைதான்.

—சித்ரா

தாய் இல்லையே...



எனக்கு ஐம்பது வயதாகும்வரை என் பெற்றோர் உயிரோடிருந்தார்கள். என் சுவீகாரத் தாயாரும் ஜீவித்திருந்தார்கள். சென்னையிலேயே வாழ்ந்து கொண்டிருந்த நான் எப்போதாவது நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று தோன்றினால் காரை எடுத்துக்கொண்டு கிராமத்துக்குக் கிளம்பி விடுவேன்.

நான் வந்துவிட்டேன் என்றால் போதும், காரைக்குடியில் இருந்த என் சுவீகாரத் தாயாருக்கு நிலைகொள்ளாது. மாமிச வகைகளில் எத்தனை உண்டோ அத்தனையும் வீடு வந்து சேர்ந்துவிடும். அவர்களே சமைப்பார்கள். பலநாள் பட்டினி கிடந்தவன் போல் நான் சாப்பிடுவேன்.

எப்படித்தான் அந்தக் கைகளுக்கு அந்தக் கலை அமையுமோ, ஆண்டவனுக்கே வெளிச்சம்!

அவர்கள் கையால் சாப்பிட்டால் மாமிசச் சாப்பாடு கூடத் தேவையில்லை; காய்கறிச் சாப்பாடே கூடப் போதும். ''தெய்வானை ஆச்சி சமையல் என்றால் தேன் மாதிரி இருக்கும்'' என்று சொந்தக்காரர்களே கூடச் சொல்லுவார்கள். அதுபோலவே என்னைப் பெற்ற தாயாரும்.

எனக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்பது அவருக்குத்தானே தெரியும்! எதைத் தொட்டாலும் ஒரு சட்டி தின்று தீர்க்கத் தோன்றும். ஊரை விட்டு வரவே மனமிருக்காது.

''விசாலாட்சி சமைத்தால் வீதிவரை மணக்குமே'' என்று பங்காளி வீட்டுத் திருமணங்களிலே பேசுவார்கள்.

எல்லாரும் போய்விட்டார்கள். தாயோடு அறுசுவையும் போய்விட்டது.

இப்போதெல்லாம் சாப்பாட்டு நேரம் வந்தாலே பயமாக இருக்கிறது! அப்படி ஒரு நேரமே இல்லாமல் இருக்கக் கூடாதா என்று ஆண்டவனை மனம் வேண்டுகிறது.

ஆயிரம் உறவுகள் வந்துதான் என்ன?

தாய்!—

அவள் மகனைக் கவனிப்பது போல் யார் கவனிக்கப் போகிறார்கள்?

அவர்களுக்கு அரிசி இட்டுத் திரும்பியாகிவிட்டது.

அவர்கள் போனதிலிருந்து வாழ்க்கையை மயக்கத்திலும், சோம்பலிலும், மறதியிலுமே கழித்து வருகிறேன்.

ஒருவனது தாய் உயிரோடு இருக்கிறாள் என்பதே அவன் பெரும் பேறுகளில் பெரும் பேறாகும்.

என் தாய்!

எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்க முடியாத ஒரு பொக்கிஷம்!

அன்று நான் பன்னிரண்டாவது மைலில் இருந்த பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்ட போது, வண்டியின் பின்னாலேயே நடக்க முடியாமல், நடந்து, நிற்க முடியாமல் நின்றாளே, அந்த ஊர் இருக்கிறது; இடம் இருக்கிறது; அவள் இல்லை.

பட்டணத்தார் தன் தாயைப் பற்றிப் பிரலாபித்ததை விட, அதிகமாக நான் அழ வேண்டும். அதிகமாக நான் பாட வேண்டும்.

அண்டம் மொத்த வடிவமாகத் திரண்டதால், அந்த நேரத்தில் கவிதை தோன்றவில்லை.

நிரந்தரமாக வாழப் போகிறவள் போல், பேத்திமார்களின் திருமணங்களுக்குச் சீர் வரிசை சேர்க்க ஆரம்பித்தாள்.

மாலை ஆறு மணிக்கு டாக்டர் லேடி ஆபிரகாம் வந்தார். தனியாக என்னைக் கூப்பிட்டு ரகசியமாக, ''இரவு பன்னிரண்டு மணிக்கு உயிர் போய்விடும்'' என்றார்.

அந்த ஆறு மணி நேரங்களே - நான் ஒரு மரணத்தை எதிர்பார்த்த அந்த ஆறு மணி நேரங்களே — என் வாழ்க்கையில் ஓடிவிட்ட மணித் துளிகளிலேயே மிகவும் கொடுமையான நேரங்கள்!

ஆபிரகாம் போட்ட கணக்குத் தப்பவில்லை. பதினொன்று நாற்பத்தைந்துக்கு நாக்கு குழற ஆரம்பித்தது.

எழுந்து அவர் அருகில் ஓடினேன். தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன். கடைசியாகச் சில வார்த்தைகள் சொன்னார். கலங்கித் தேம்பிக் கேட்டுக் கொண்டேன். உயிர் பிரிவதைக் கண்ணாலேயே பார்த்தேன்.


அந்த நாள் முதல் இந்நாள்வரை அழ வேண்டிய சூழ்நிலை வரும்போதெல்லாம், ஒரு வார்த்தைதான் நான் கூறுகிறேன்: ''தாய் இல்லையே!''



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

"நான் ஆர்க்கிடெக்ட்
அதனால் நான் கட்டும் உடையிலும் கற்பனை இருக்க வேண்டுமே."





உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ் **மஃபத்லால் ஃபைன்**

MF-311AM

REGISTERED No. M. 4352
Registered as a Newspaper in Sri Lanka

உகந்த பெயிண்ட்டைத் தேர்ந்தெடுப்பதைப் போலவே தகுந்த முறையில் வண்ணம் பூசுவதைத் தெரிந்து கொள்வதும் அவசியம். வாருங்கள் —

-நெரோலாக் பெயிண்ட்ஸ் விளக்கம் கூறக் காத்திருக்கிறது.



[illegible]



[illegible] **நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல்** [illegible]

நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல் [illegible]



[illegible] **நெரோலாக் பெயிண்ட்ஸ்** [illegible]

1 [illegible]

2 [illegible]

3 [illegible]



4 [illegible]

5 [illegible]

6 [illegible]

நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல் [illegible]

நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல் [illegible]

நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல் [illegible] **நெரோலாக் பெயிண்ட்ஸ்** காத்திருக்கிறது.



"All you wanted to know about painting" [illegible] **நெரோலாக் பெயிண்ட்ஸ்** [illegible]



நெரோலாக் பெயிண்ட்ஸ்

நெரோலாக் பூசவே! ஒளி வண்ணம் வீசுமே!

கூப்பன். வெளியீட்டின் ஆங்கில பிரதி ஒன்று, தயவு செய்து அனுப்பி வைக்கவும்.

பெயர் ....

முகவரி ....

.... பின் கோட் ....

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்
விற்பனைப் பிரிவு தபால் பெட்டி எண் 16322
பம்பாய்-400 013

164 V

ULKA-GNP-164 TAM